# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-4

ஏப்ரல்-2020 (ஷாபான்-1441)

விலை ரூ. 20/-



பிப்ரவரி 24,25,26

டெல்லி கலவரத்தில் நடந்தது என்ன?

கொரோனா தாக்குதலை சீனா

எப்படி சமாளித்தது?

தாருல் இஸ்லாம் - வாழ்வாதாரமற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் உதவி

“

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

”


பிப்ரவரி 24,25,26 டெல்லி கலவரத்தில் நடந்தது என்ன? - 6

நல்ல செய்தியும் நடந்ததும் - 12

ஆவணங்களை முறைப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? - 13

ஏப்ரல்-20 தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான நாள் - 18

முஸ்லிம்களின் முதல் எதிரி! - 20

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... - 22

அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தோற்றது ஏன்? - 29

கொரோனா தாக்குதலை சீனா எப்படி சமாளித்தது? - 32

நீதிபதி பா.குலாம் முஹம்மத் அவர்களின் துணைவியார் ஆயிஷா அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான் - 38

நீதிபதி குலாம் முஹம்மது அவர்களின் மனைவி மரணத்தை நினைவு கூறும் நிகழ்வு - 41

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் - 42

கும்பகோணத்தில் கள்ளத் துப்பாக்கியை விற்க முயன்ற டாக்டர் உள்பட 3 பேர் கைது - 47

உலகில் ஓர் நூலுக்கு கிடைத்த மரியாதை - 50

அன்றும் இன்றும் தொடரும் தீண்டாமை! நீதிமன்ற தீர்ப்புகளும் தீண்டாமையும்! - 59

நடிகர் பாண்டேவும் அப்பாவி சமூகமும் - 64



ஏப்ரல்-2020 ஷாபான்-1441)

# வைகறை
## வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# கரோனா - 019

## கொள்ளை நோயை இஸ்லாம் எதிர்கொண்டபோது

கரோனா போன்ற நோய்கள் அவ்வப் போது மனித சமுதாயத்தை தாக்கித் தகர்த்து வருகின்றன. வரலாறு முழுவதும் இது நடந்தே இருக்கின்றது. ஆனால், இப்போது வந்துள்ள தொற்று நோய் சற்று அதிகமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது என்றால் அது மிகையாகாது. இதைவிட அதிகமான வீரியம் கொண்ட தொற்று ஒன்று கி.பி. 639-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இப்போது நாம் 2020-இல் இருந்துக் கொண்டிருக்கின்றோம்.

இதைவிட வீரியமான நோய் என ஏன் கூறுகின்றோம் என்றால், அந்த நோய் தொற்றிய சில மணிநேரங்களில் அல்லது சில மணித்துளிகளுக்குள் அந்த மனிதன் இறந்து விடுவான். அந்த இடத்தை "அம்வாஸ்' எனக் குறிப்பிடுவார்கள். இதற்கு தொன்மைமிக்கப் பெயர் இம்மாஸ் - எம்வாசி என்று இஃது கிருஸ்துவுக்கு முன் 160ஆம் ஆண்டு நிலை நிறுத்தப்பட்ட ஒரு நகரம். ஜெரூசலத்திலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

ஒரு குறுகிய வட்டத்திற்குள், ஓரிரு மாதங்களுக்குள் இஸ்லாத்தின் படை வீரர்கள் 25,000 பேர் இறந்து போனார்கள். இந்த 25,000 வீரர்களில் இஸ்லாத்திற்காக - அதனை இந்தப் பூவுலகில் பரப்புவதிலும், நிலைநாட்டு வதிலும் தங்களையே தந்த நபித்தோழர்கள் - இறைவனின் இறுதித் தூதர் தாங்கிய அத்தனை சிரமங்களிலும் உற்று துணையாய் நின்ற தோழர்கள் ஏராளமானோர் இறந்து போனார்கள்.

பல லட்சம் சதுர மைல்களை இஸ்லாத்தின் கீழ் கொண்டு வருவதில் இணையற்ற தளபதியாய் திகழ்ந்த நபித்தோழர் அபூ உபைதா (ரழி) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக! அவர்களை உலகம் இழந்தது.

இஸ்லாம் வெற்றிகொண்ட இடங்களை எளிதாகப் பரிபாலனம் செய்யும் வகையில் கட்டமைத்துத் தரும் ஆற்றல் பெற்ற அபூ அப்துல் ரஹ்மான் முஆது-பின் ஜபல் (ரழி) அவர்கள் இந்த உலகை விட்டுப் பிரிந்தார்கள்.

யசீத்-பின் அபூசுஃபியான். ஹாரித் பின் ஹிஷாம் (ரழி) சுஹைப் பின் உமர் (ரழி), உத்துபா பின் ஹுஃஹைல் (ரழி) (அல்லாஹ்வின் அருளும் ஆசியும் அனைவர் மீதும் உண்டா கட்டும்). இப்படி அனைவரும் அல்லாஹ் விடம் சேர்ந்தார்கள்.

இதற்குமுன் அதாவது கி.பி. 639-க்கு முன் இதே இடம் அம்வாஸ் மற்றும் இன்றைய சிரியா ஒரு கொள்ளை நோயால் கி.பி. 540-இல் பீடிக்கப்பட்டது. இதனை ஐஸ்டீனியன் பிளேக் எனச் சொல்வார்கள். ரோம மன்னன் ஐஸ்டீனியன் என்பவரின் காலத்தில் (கி.பி. 526-565) இந்தக் கொள்ளை நோய் வந்ததால் இதற்கு ஐஸ்டீனியன் கொள்ளை நோய் என்று பெயர் வந்தது.

வரலாற்றின் பிற்றை நாள்களில் கி.பி. 634-க்கும், 640-க்கும் மிடையில் அம்வாஸ் (இம்வாசி) என்ற இடம் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வந்தது. மலை முகடுகளும் தடாகங்களும், நீர் சுனைகளும் மிகுந்த எழில்மிகு பகுதி இது. இங்குள்ள நீர் சுனை களைக் கருத்தில் கொண்டுதான் இங்கே பாசறை இறங்கினார்கள், இஸ்லாமிய படை வீரர்களின் தலைவர், அபூஉபைதா (ரழி) அவர்கள். கொள்ளை நோய் ஒன்று ஒரு நீர் சுனையிலிருந்து தொடங்கிவிட்டது. காட்டுத் தீ போல் பரவிற்று. அன்றைய ஷாம் (இன்றயை சிரியா, பாலஸ்தீன் ஆகியவை அடங்கியப் பகுதி) எகிப்து, ஈராக் ஆகிய பகுதிகளுக்கும் அலாதியாகப் பரவிற்று.

இதில் அம்வாஸ் பகுதியில் இஸ்லாமியப் படைவீரர்கள் 25,000 பேர் மடிந்துப் போனதை ஷிப்லினுமானி அவர்கள், அன்றைய உலகத்தை வெற்றிக்கொள்ள போதுமான படையை இஸ்லாமிய உலகம் இழந்தது என ஆதங்கப்பட்டார். மைக்கேல், டிபிள்வு

டோல்ஸ் என்பவர் முஸ்லிம் படைகளைக் கண்டு பதறிப்போய்க் கிடந்த பைசாந்தியப் படைகளுக்கு இது பெரும் நிம்மதியைத் தந்தது என்கின்றார். ஆதாரம் - (Plague in Early Islamic History, Page 371-376)

இந்த கொள்ளை நோய், வருவதற்கு காரணமாக அமைந்த நீர் சுனை பிராத் தௌவ்ன் "கொள்ளை நோய் கிணறு" என்றே அழைக்கப்பட்டது. (Plague Well)

இந்த இடத்தை மொத்தமாக ஜூன்-7, 1967-இல் இஸ்ரேல் நாட்டு இராணுவ தளபதி யஷ்தக் ராபின் அரபு போரில் கிடைத்த வெற்றி பெற்றபோது முற்றாக அழித்து விட்டார்.

25,000 அரிய படை வீரர்களை இழந்த பின் இஸ்லாமியப் படைகளுக்கு தலைமை தாங்கிய தளபதி அம்ர்-பின் அல்ஆஸ் (ரழி) அவர்கள் படைகளை சுகாதாரமான காற்றுக் கிடைக்கும் மலை முகடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார்கள், இதை பலரும் எதிர்த்தார்கள்.

ஏற்கெனவே பல ஆலோசனைகள் இந்தக் கொள்ளை நோயைப் பற்றி வந்தபோது அதனை ஆலோசனை குழுவில் இடம் பெற்றவர்கள் எதிர்த்தார்கள். அதேபோல், இந்தக் கருத்தையும் பலர் ஆவேசமாக எதிர்த் தார்கள். ஆனால், அம்ர்-பின் அல்ஆஸ் (ரழி) அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் படைகளை மலைப்பாங்கான பகுதிக்கு மாற்றினார்கள். கொள்ளை நோயிலிருந்து அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். இன்றைக்கும் இது ஒரு பாதுகாப்பான வைத்தியம் என்கின்றார்கள்.

கரோனா-019 பற்றி தொலைக்காட்சி சேனல் நியூஸ் 18 நடத்திய நேயர்களின் கேள்விக்குப் பதில் நிகழ்ச்சியில் சென்னை அப்பல்லோ மருத்துவ மனையின் தொற்று நோய் பிரிவு மருத்துவர் டாக்டர் ராமசுப்ர மணியன் அவர்களிடம் ஒரு கேள்விக் கேட்கப் பட்டது, அது

"நான் இரவில் காற்றோட்டமாக இருக்கும் என்பதால் என் வீட்டு மாடியில் தூங்குகின்றேன். அங்கே மாடியில் தொற்று வருமா? நான் மாடியில் தூங்கலாமா?" என்றார். டாக்டர் ராமசுப்ரமணியன் "தாராள மாகத் தூங்கலாம் மாடியில் தொற்று வராது என்றார்.

ஆக, அன்று அம்ர்-பின்.அல்ஆஸ் (ரழி) அவர்கள் எடுத்த முடிவையும், கொள்ளை நோயால் இறப்பைத் தடுத்ததையும், கலீபா உமர் (ரழி) அவர்கள், பாராட்டினார்கள். இன்றைய தொற்று நோய் ஆய்வுகள் அதை உறுதிபடுத்திகின்றன.

இன்றைய இந்திய பிரதமர் (மோடி) பால்கனி பிரதம அமைச்சர்தான், என்றாலும் மக்கள் அனைவரையும், பால்கனியில் ஏற்றிட முடியாது என்பது யதார்த்தம். இதனால் சமுதாய இடைவெளியே தீர்வு என்கின் றார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்

"மரணத்தை விட்டோ அல்லது கொல்லப் படுவதை விட்டோ நீங்கள் விரண்டு ஓடிவிடு வீர்களானால், அவ்வாறு ஓடுவது உங்களுக்கு, யாதொரு பயனும் அளிக்காது. அப்பொழுதும் நீங்கள், வெகு சொற்பமேயன்றி சுகம் கொடுக்கப்படமாட்டீர்கள் என்று நபியே நீர் கூறுவீராக!" (அல்குர்ஆன் - 33:16)

"மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம், (அவர்களுக்கு நபியே நீர் கூறுவீராக) அது வானத்திலிருந்து நாம் இறக்கி வைத்த நீரைப்போல் இருக்கின்றது. பூமியி லுள்ள தாவரங்கள், அதனுடன் கலந்து செழித்தன. ஆனால், அவை காய்ந்து, பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டு போய் விடுகின்றது. மேலும் அனைத்துப் பொருள் களின் மீதும் அல்லாஹ் ஆற்றலுடையவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் - 18:43)

"ஒரு திசையிலிருந்து மரணம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சி இன்னொரு திசையை நோக்கி ஓடுபவர்கள் - அங்கேயும் மரணத்தை நோக்கியே ஓடுகின்றார்கள் என்பதை நினைவில் வைக்கட்டும்" (கலீபா உமர் (ரழி) அவர்கள்)

**- MGM**

டெல்லியில் பிப்ரவரி *24-ஆம் நாள் தொடங்கி 26-ஆம் நாள் முடிய, நடந்த இனப்படுகொலைகளின் போது, பலநூறு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். 3000 முஸ்லிம்கள் வீடுகளை இழந்தார்கள். குடி பெயர்ந்தார்கள். இவர்களின் வீடுகளிலிருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன.*

*மொத்தத்தில் குஜராத் 2.0 நடந்து முடிந்தது. இந்த இனப்படுகொலைகளின் போது என்னென்ன நடந்தது, என்பதை பல குழுக்கள் அறிக்கைகள் வழியாக வெளியிட்டன. அவற்றுள் இந்த மூன்று நாள்களிலும் களத்தில் நின்ற மனித உரிமை போராளி ஹர்ஷ் மந்திர் அவர்கள் பல நெஞ்சை உருக்கும் செய்திகளைச் சொல்லுகின்றார்கள். களத்திலிருந்து அவற்றை இங்கே தருகின்றோம்.*

*நுழையுமுன் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். அது பிப்ரவரி 24-ஆம் நாள், டெல்லிக்குப் பக்கத்திலுள்ள உத்திரப் பிரதேசத் திலிருந்தும், ஹரியானாவிலிருந்தும் பஞ்ரங் தளத்தின் கொலையாளிகளைக் கொண்டுவந்து தான் இனப்படுகொலைகளை நடத்தினார்கள். இந்த இனப்படுகொலைகள் இரவு மூன்று நாள்கள் நடந்தன.*

*24,25,26 ஆம் நாள்களில் முழுமையாக நடைபெற்றன. இந்த நாள்களில் டெல்லி மாநில நிருவாகம், மத்திய அரசு, மனித உரிமை அமைப்புகள் இப்படி எதுவுமே செயல்பட வில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.*

*இவை செயல்படாததால், பல முஸ்லிம்கள் - உரிய மருத்துவ உதவிகளின்றி உயிரை இழந்தார்கள். அதனை படியுங்கள்.*

### டெல்லி பற்றி எரிந்தபோது : வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்?

*குழந்தைகள், மரணப்பார்வை ஒன்றை பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். தாய்மார்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள். ஊட*

# பிப்ரவரி 24,25,26 டெல்லி கலவரத்தில் நடந்தது என்ன?





என்பது நிரூபணமாகிக் கொண்டே வருகின்றது.

ஒரு நாட்டின் குடி மக்கள், அந்த அரசின்மீது சிஞ் சிற்றும் நம்பிக்கை இல்லாமல் போனதொரு சூழலை என் வாழ்நாளில் இப்போதுதான் சந்திக்கின்றேன். இதற்கு முன் எப்போதும் இப்படி நடந்த தில்லை.

கத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் கேமராக்களில் அவர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள்.

இன்னும் சில பத்திரிகையாளர்கள் அவர்கள் கொண்டுவந்த நோட்டுகளில் அவற்றைக் கிறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

கடினமாக உழைத்து, கண்ணியமாக வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்கள் அடுத்தவர்கள் தரும் இனாம்களில் வாழ்ந்திட வேண்டிய அவலை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். உழைத்து வாழ்ந்த அந்த மக்கள் இந்த நிலையை எப்போதும் விரும்பியதில்லை.

அவர்களின் வீடுகள் எரித்துச் சாம்பலாக் கப்பட்டுவிட்ட நிலையில், அவர்களுக்காக கருணையுடன் கதவுகளைத் திறந்தவர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தஞ்சம் புகுந்தார்கள். ஏனெனில் அரசு நிருவாகம் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களைப் பெற்றுத் தந்திட மறுத்துவிட்டார்கள்.

இந்தப் பீதியும் பதற்றமும் இத்தோடு நிற்கவில்லை. தந்தைமார்கள், மருத்துவமனை களின் பிண அறைகளுக்கு முன்னால் காத்துக் கிடக்கின்றார்கள். தங்கள் மகன்களின் பிணங் களுக்காகத்தான் இந்தக் காத்திருப்புகள், உணவு மில்லை, உறக்கமுமில்லை. தேம்பி அழுதிட தெம்புமில்லை. கண்ணீருமில்லை. என்ன அவலம்?

ஆண் பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள், தங்கள் வீட்டு வாசல்படிகளிலேயே காத்துக் கிடக்கின்றார்கள். வரும் பிணங்களில் ஒன்று தன் மகனுடையதாக இருக்குமோ என்ற ஏக்கத்திலும் தவிப்பிலும், காணாமல் போன வர்கள், என்பவர்கள் இப்போது பிணங்களாக ஆக்கப்பட்டு சாக்கடைகளில் வீசப்பட்டார்கள்

கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர் களின் உடல்களில் சில துப்பாக்கிக் குண்டுகள் இருக்கின்றன. ஆனால், அவர்கள் அடித்துக் நொறுக்கப்பட்டுத்தான் கொலை செய்யப்பட் டிருக்கின்றார்கள் என்பது அவர்களின் உடல் முழுவதும் இருக்கும் தடியடி காயங்களும், நொருங்கிய எலும்புகளும் சொல்லும் உண்மை.

மருத்தவ மனைகளில் காயங்களுடன் சென்றவர்கள், பட்ட அவமானம், புறக்கணிப்பு இவை சொல்லி மாளாது. இனி காயம்பட்டால் அவர்கள் மருத்துவ மனைகளுக்குச் செல்லவே மாட்டார்கள். மருத்தவ மனைகளுக்குச் செல்வதைவிட அவர்கள் மரணிப்பதையே விரும்புவார்கள்.

இதனிடையே பாதிக்கப்பட்ட முஸ்லிம் பகுதிகளில் சிலர் பேனாவும், பேப்பருமாக அலைகின்றார்கள். அவர்கள் இறந்தவர்கள் பற்றிய விபரங்கள், இழந்த சொத்துக்கள் அவற்றின் மதிப்பு எனப் புள்ளி விவரங்களைத் திரட்டுகின்றார்கள். இதைக் கண்டும் மக்கள் பதறுகின்றார்கள். காரணம், அவர்கள் கையில் வைத்திருக்கும் பேப்பர்கள் NPR என்ற தேசிய மக்கள் தொகை இரகசியக் கணக்கெடுப்பாக இருக்குமோ என்ற அச்சம்தான். இதனால் அந்த படிவங்களை வாங்கி படித்துப் பார்த்து, அவர்களே பூர்த்தி செய்து தருகின்றார்கள்.

இந்த அளவுக்குத் திரும்பும் இடமெல்லாம் பயமும் பீதியுமே எங்கும் வியாபித்து சிறுபான்மையினரை ஆட்டிப் படைக்கின்றது.

## அரசியல் வர்க்கத்தின் அலட்சியம்?

டெல்லியில் மக்கள் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது முதல் துரோகத்தை,

அரசியல் வர்க்கந்தான் செய்தது.

மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கும் கட்சியின் தலைவர்கள் - கலவரத்திற்கு முன் கடந்த பல வாரங்களாக இருந்தே வெறுப்புப் பேச்சுகளைப் பேசி கலவரத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். (அவர்கள் 200 ஆண்டுகளாக இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு களில் பல லட்சம் முஸ்லிம்களைக் கொலை செய்திருக்கின்றார்கள்.) இந்த வெறுப்புப் பிரச்சாரங்கள் அனைத்துமே கொலை வெறியைத் தூண்டுவன, அனைத்தும் தண்டனைக்குரிய குற்றம். ஆனால், கண்டுகொள்வார் யாருமில்லை.

மத்தியிலே ஆட்சியில் இருப்பவர்கள் அவர்கள் கொண்டுவந்த குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு நாடெங்கும் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத எதிர்ப்பைக் கண்டு எரிச்சலடைந் திருக்கின்றார்கள். இந்த எதிர்ப்பு மதங்களைக் கடந்து நாடெங்கும் தன்னெழுச்சியாக எழுந்துள்ள எதிர்ப்பு! - இந்த எதிர்ப்புகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க முயற்சி செய்து வருகின்றார்கள்.

இந்த குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக மக்கள் காட்டி வரும் ஒற்றுமை உணர்வுகளை அவர்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

மத்திய ஆட்சியாளர்களின் போக்கைப் பார்த்தபோது, ஓர் இனப்படுகொலை நடக்கப் போகின்றது என்பது தெளிவாகவே தெரிந்தது. ஆனால், அதைத்தடுக்க எந்த அரசியல் கட்சியும், அரசியல் தலைவரும் முன்வர வில்லை. இந்த அரசியல் தலைவர்களோ, அரசியல் கட்சிகளோ, இவற்றை முளையிலே கிள்ளியெறிய தயாராக இல்லை. அவர்கள் நினைத்திருந்திருந்தால் ஒவ்வொரு கட்டத்திலும் அதைத்தடுத்திருக்க இயலும். ஆனால், அவர்களிடத்தில் அதற்கான மனமில்லை, ஒழுக்க பலம், களத்தில் பணியாற்றிடும் தொண்டர்கள், இப்படி யாருமே எதுவுமே அவர்களிடத்தில் இல்லை.

மொத்தத்தில் அரசியல் கட்சிகளால் செய்ய முடிந்தவை எதுவுமில்லை.

ஜம்மு கஷ்மீர் மாநிலத்திற்கு வெளியே டெல்லியில் தான் அதிகமாகக் காவல்துறையினர் இருக்கின்றார்கள்.



காவல்துறை மனது வைத்திருந்தால், எதுவுமே நடக்காமல் தடுத்திருக்க இயலும். அல்லது கொலை வெறி தாண்டவமாடி தொடங்கியவு டனேயே, அதனை தடுத்திருக்க இயலும். சிலமணி நேரத்திலேயே அமைதி திரும்பி இருக்கும்.

## உண்மை

இதில் மிகப்பெரிய அதிர்ச்சியும், ஆச்சர்யமும் என்னவெனில், நமது அரசியல்வாதிகள், டெல்லியில் இனப்படுகொலை நடக்க வேண்டும் என விரும்பினார்கள். நமது காவல்துறையினர் அதை நடக்க விட்டு கைகட்டி வாய்ப்பொத்தி நின்றார்கள். (காவல்துறையினர் எல்லாம் முடிந்த பின் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி என்ற பெயரில் ஊரை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.)

"Our Elected Representatives wanted it. and police allowed it."

மிகக் குறைந்த அளவே காவல்துறையினரைப் பயன்படுத்தி இருந்தாலும் போதும், அதுமட்டு மல்ல எந்தக் காவலரும் சிலமணித் துளிகளுக்கு மேல் தொடர்ந்திருக்காது.

டெல்லிக் காவல்துறையின் அளவைப் பார்த்திடும்போது அதில் ஒரு துளியைப் பயன்படுத்தி இருந்தாலே அந்தக் கலவரத்தை அடக்கி இருக்க இயலும்.

## டெல்லி கலவரத்தில் காவல்துறையின் பங்கு

உயிர் போகின்றது கொலை வெறியர்களின்

கைகளால் என்பதை அறிந்த அந்த அப்பாவி மக்கள், பதறிப் பதறி காவல்துறையின் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசி மூலம் தகவல்களைச் சொன்னார்கள். அவர்கள் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. காவல்துறைக்குத் தெரியும், இனி அவர்கள் உயிரோடு இருக்கப் போவதில்லை என்று.

அதேபோல் வீடுகளை எரிப்பதற்கு முன்பும் அவர்கள், காவல்துறையின் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல்களைச் சொன்னார்கள், அதையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

## ஆம்புலன்ஸ்களைத் தடுத்தக் காவல்துறையினர்

- போர்க்காலங்களில் கூட எதிரிப் படைகளின் ஆம்புலன்ஸ்களை தங்கு தடையின்றி அனுமதிப்பது வழக்கம். ஆனால், டெல்லிக் காவல்துறையினர் காயம்பட்ட முஸ்லிம்களைச் சுமந்து வந்த ஆம்புலன்ஸ்களைத் தடுத்தார்கள், சோதனைகள் என்ற பெயரில் காலதாமதம் செய்தார்கள். உண்மையில் காயம்பட்ட முஸ்லிம்களை சுமந்துவரும் ஆம்புலன்ஸ்களை மருத்துவமனைக்கு அனுப்பிட அவர்களுக்கு மனமில்லை. வெறுப்பின் ஆழம் அலாதியானது.



இதைவிடக் கொடுமை, இந்துத்துவ தீவிரவாதிகளின் துப்பாக்கிகளிலிருந்து போந்த குண்டுகளை உடலிலே தாங்கி வழியும் இரத்தத்திற்குக் கட்டுப்போட்டிருந்தவர்கள், உயிருக்குப் போராடிடும் நிலையில் ஆம்புலன்ஸ்களில் மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்தார்கள், இந்த ஆம்புலன்ஸ்களை நிறுத்தினார்கள். குண்டடிப்பட்டவர்கள், உண்மையிலேயே காயம் பட்டிருக்கின்றார்கள் என்பதை நிரூபித்திட பலமுறை இரத்தம் சிந்திடாமல் தடுத்திட போட்டிருந்த கட்டுகளைத் திறந்து காட்டிட வேண்டியதிருந்தது.

இந்தக் கொடுமை ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நடந்தது. காயம்பட்ட ஒருவர் குறைந்து நான்கு முறையாவது தனது காயங்களின் மேல் போடப்பட்டிருந்த கட்டுகளை திறந்து, தாங்கள் உண்மையிலேயே காயம் பட்டிருக்கின்றோம் என்பதைக் காட்டிட வேண்டியவர்களானார்கள்.

## நீதிமன்றம்

இந்தக் கொடுமை எதுவரை தொடர்ந்தது என்றால், நீதிமன்றம் தலையிடும் வரை தொடர்ந்தது. டெல்லி உயர்நீதி மன்றம் நடு இரவில் ஒரு உத்தரவைப் போட்டு, மருத்துவ ஊர்திகளில் எடுத்துச் செல்லப்படும் காயம் பட்டவர்கள், பாதுகாப்பாக மருத்துவமனை செல்வதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

(முஸ்லிம்களின்) வீடுகளையும், கடைகளையும் தீக்கிரையாக்கும் கும்பல்களை, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் காவல்துறையினர். இந்த கொள்ளைகளையும், தீக்கிரையாக்குவதையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## தேசியகீதம்

இன்னும் சில காவலர்கள் சில முஸ்லிம்களை அடித்துத் துவைத்தார்கள், அவர்களை தேசிய கீதம் பாடிடச் சொன்னார்கள்.

தேசிய கீதம் அண்மைக் காலங்களில், CAA என்ற குடிமக்கள் சட்டத் திருத்திற்கு எதிரான போராட்டங்களில் தான் பாடப்பட்டன. குடிமக்கள் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத்

தெரிவிக்கும் போது தேசிய கீதத்தைப் பாடினீர் களல்லவா... இப்போது நீங்கள் குரூரமாகத்தாக் கப்படும்போதும் பாடுங்கள் எனச் சொல்லாமல் சொன்னார்கள்.

அந்நிலையில் தேசிய கீதம் அன்பின் கீதமல்ல, மாறாக தாங்க முடியாத வேதனையின் கீதம்.

## நீதிபதி முரளீதர்

நீதிபதி முரளீதர் அவர்கள் நடு இரவு உத்தரவு ஒன்றின் மூலம் காயம்பட்டவர் களுக்கு, ஒரு பெரும் உதவியைச் செய்தார். அதேபோல் காவல்துறையினரிடம் வெறுப்புப் பேச்சுக்களால் பேசி வன்முறையைத் தூண்டிய பாரதீய ஜனதா கட்சியினர் மீது ஏன் இன்னும் முதல் தகவல் அறிக்கையை (FIR) -ஐ தாக்கல் செய்திடவில்லை என்றும் கேட்டார். இதுவும் காவல்துறையினரிடம் ஓர் அதிர்வை ஏற்படுத் தியது. இவையெல்லாம், நீதித்துறை எப்படி கலவரங்களின்போது உருப்படியான வேலை களைச் செய்ய முடியும். - உயிர்களைக் காப்பாற் றிட முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள். நீதிபதிகள் செய்ய வேண்டியதெல்லாம் அரசியல் நிர்ணயச் சட்டம் என்ன செய்யச் சொல்கின் றதோ அதைச் செய்தால் போதும், ஆனால் நீதிபதி முரளீதர் அவர்கள், உடனேயே இடமாற்றம் செய்துவிட்டார்கள்.

எங்களுடைய குடிமக்கள் குழுமம் 24 மணிநேரமும் இயங்கும். ஓர், அவசர உதவிக் கான தொலைபேசி மையம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். இதனை அவசர உதவிக்கட்டுப் பாட்டறை ஒன்றை ஏற்பாடு செய்தோம்.

இரவு நெருங்க, நெருங்க, வரக்கூடிய தொலைபேசி அழைப்புகள் - பீதியும், விரக்தியும் நிறைந்தவையாக இருந்தன. காவல்துறையினர் குரூரம் நிறைந்த கிருமினல்களாக - குற்றவாளி களாக மாறினார்கள்.

## காயம்பட்டுக்கிடந்த 22 பேர்

உயிர் பிரியும் நிலையில் காயம்பட்டுக் கிடந்த 22 பேரை ஒரு நல்ல மருத்துவமனைக்கு உடனேயே மாற்றிட வேண்டும், அவர்களை மருத் துவ ஊர்திகளில் எடுத்துச் சென்றிட, கலவரக் காரர்கள் அனுமதிக்க மாட்டார்கள். காவல்துறை யினர் பாதுகாப்புத் தந்திட மறுத்துவிட்டார்கள்.

இந்தக் கெடுபிடிகளில் 2 பேர் இறந்து விட்டார்கள். நடு இரவில் நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியதால் மீதமுள்ள 20 பேரும் காப்பாற்றப்பட்டார்கள். (அதாவது நீதிபதி முரளீதர் அவர்கள் 20 உயிர்களைக் காப்பாற்றி இருக்கின்றார்கள்)

அந்த நடுஇரவு தீர்ப்பிலேயே நீதிமன்றம் வெறுப்புப் பேச்சுக்களைப் பேசியவர்களை கைது செய்திட 24 மணிநேரத்தை வழங்கியது.

நீதிபதி முரளீதர் அவர்களை மாற்றியவுடன், நீதிமன்றம் மாறியது, நீதிமன்றம் மாறியவுடன், இந்தக் காலக்கெடுவெல்லாம், கானல் நீராக மாறிப்போயின.



## மருத்துவத் துறையிலும் புகுந்துவிட்ட வகுப்புவாதம்

மருத்துவத் துறையில் புகுந்துவிட்ட வகுப்பு வாதம் நம்மை மருட்சியருடைய செய்கின்றது. பிரேத பரிசோதனையின் முடிவில் - அறிக்கை களை எழுதும்போது, முக்கிய தடயங்களை மறைக்கும் மானங்கெட்ட செயல் நடைபெற்றது.

(இதனால் கொலைகளைச் செய்தவர்கள் ஒருவேளை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால் மிகவும் எளிதாகத் தப்பித்து விடுவார்கள்)

## மனித உரிமை அமைப்புகளின் மயக்க நிலையும், மந்த நிலையும்

கலவரக் காலங்களின்போது (பிப்ரவரி 24,25,26) மனித உரிமை அமைப்புகள் ஒருவித மயக்கத்திலிருந்தன. தேசிய மனித உரிமை

அணையம் National Human Rights Commission, தேசிய சிறுபான்மையினர் ஆணையம் National Minorities Commission, தேசிய, குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் National Commission for the Protection for Child Rights இவையெல்லாம், இதுபோன்ற நேரங்களில் களமிறங்கி தங்கள் கடமைகளைச் செய்திருக்க வேண்டும்.



ஏனெனில், இந்தக் கலவரக் காலத்தில் சிறுபான்மை சமுதாயத்தவர்கள், நிருவாகத்தால் ஓரங்கட்டப்பட்டு சொல்லலொன்னா குரூரங் களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட் டார்கள். ஆனால் இந்த அமைப்புகள் எதுவும் களத்தில் இல்லை.

## டெல்லி மாநில அரசு

டெல்லி மாநில அரசு (அரவிந்த் கேஜ்ரிவால் அரசு) நிரம்ப செய்திருக்க இயலும். இனப்படு கொலைகள் தொடங்கப்பெற்ற முதல் நாளி லேயே, மாநில அரசு ஆபத்திலிருந்து காக்கும் கட்டுப்பாட்டு அறை ஒன்றை அமைத்திருக்க வேண்டும்.

மருத்துவ ஊர்திகள், மருத்துவ உதவிகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி காயம்பட்ட வர்களைப் பாதுகாத்திட என்னென்ன வேண் டுமோ அனைத்தையும் செய்திருக்க வேண்டும். அதேபோல் நிவாரண முகாம்களை அமைத் திருக்க வேண்டும். அவை உறுதியான பாது காப்பு முகாம்களாக இருந்திருக்க வேண்டும். இத்தனையையும் அன்றிரவே செய்திருக்க வேண்டும்.

## ஒரே இரவில் இழப்புகள்

ஒரே நாளில் எல்லாம் ஒருவித பேய் கனவைப் போல் நடந்து முடிந்துவிட்டன. அந்த சிலமணித் துளிகளில், நீங்கள் உங்கள் ஆண் பிள்ளைகளை - தந்தையை இழந்து விடுகின்றீர்கள். உங்கள் வீட்டை விட்டு விரட்டப்படுகின்றீர்கள், நீங்கள் காலங்காலமாகச் சிறுக சிறுக சேர்த்து வைத்த எல்லாவற்றையும் இழந்து விடுகின்றீர்கள். எப்படி இருக்கும் இந்த வேதனை. இந்த வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சியதைப்போல், நம்மைப் பாதுகாத்திடுவதை கடைமையாகக் கொண்டவர்கள் அந்தக் கலகக் காரர்களோடு கைகோர்த்துக் கொள்கின்றார்கள்.

அந்தக் கலகக்காரர்களை நமது வீடு வரைக்கும் அழைத்து வந்தவர்கள் இத்தனை நாளும் வாழ்ந்த அக்கம் பக்கத்தவர்கள்.

இந்த நிலையில் நாம் அடையும் வேதனை, விரக்தி சில வரிகளால் வருந்திட இயலாது.

இந்த நிலையில் செயல்படாத அரசு எப்போது செயல்படும்?

உழைத்து வாழும், மக்கள் - அன்றாடம் காய்ச்சிகள், அடர்த்தியாக வாழும் இந்த இடங்களில் இரவு பகலாகக் கொலைச் செய்கின்றார்கள். இந்தப் படுகொலைகள் மூன்று நாள்கள் தொடருகின்றன. அந்த மூன்று நாள்களும் நாட்டின் எந்த அமைப்பும் / நிருவாகமும் செயல்படவில்லை.

வேடிக்கைப் பார்க்கும் அரசின் போக்கு நமது மனதில் நிம்மதியை நிரந்தரமாகப் போக்கிவிட்டது.

அரசு, அதன் நிருவாகம் இவற்றின் மேல் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை உடைத் தெறிய செய்து விட்டது. அன்றைய கலவரங் களில், காத்த மௌனம், அரசியல் நிர்ணயச் சட்டம் அது உறுதி செய்த அடிப்படை உரிமைகள் எல்லாம் தகர்ந்துப் போய்விட்டன.

இனி எப்போதும், நம்நாடு மனிதாபிமானம் நிறைந்த நாடாகவோ, நீதி உள்ள நாடாகவோ ஆகிட முடியாது.

- ஹர்ஷ் மந்திர்.
The Hindu Dt. March-9,2020
தமிழ் வடிவம் - MGM

# நல்ல செய்தியும் நடந்ததும்

சில நேரங்களில் நமக்கோர் செய்தி சொல்லப்படுகின்றது. சில முஸ்லிம்கள் பலரைப் பாதுகாத்தார்கள். இன்னும் சில வேளைகளில் சில இந்துக்கள் பல முஸ்லிம் களைப் பாதுகாத்தார்கள். இந்த இனிய உள்ளங்கள் வாழ்க!

ஆனால், ஹர்ஷ் மந்திர் அவர்கள் சொல்லும் செய்தி நம்மை குஜராத்-ஐ யே நினைவுபடுத்து கின்றன. ஹர்ஷ் மந்திர் சொல்லுகின்றார்கள். கலவரக்காரர்களை முஸ்லிம்களின் வீடுகள் வரை வழிகாட்டி அழைத்து வந்தவர்கள், நம்மோடு பக்கத்து வீட்டுகாரர்களாக வாழ்ந்தவர்கள்தாம் என்பதே!

தமிழகத்தின் ஜமாஅத்துல் உலமா சபையினர் டெல்லிக்குச் சென்று கள ஆய்வு ஒன்றை நடத்தினார்கள். அதில் ஓர் உண்மையைக் கண்டெடுத்து நமக்குச் சொல்லுகின்றார்கள். அது, "கலவரக்காரர்கள் வரப்போகின்றார்கள் என்பதை அறிந்த முஸ்லிம்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு வெளியே புறப்பட்டிருக் கின்றார்கள். அவர்களை நீங்கள் போக வேண்டாம், அப்படியேதும் நடந்தால் நாங்கள் பாதுகாப்போம் எனக்கூறி உள்ளார்கள். இப்படி அந்த மக்களைத் தடுத்தவர்கள், பின்னர் கலவரக் காரர்கள் வந்தபோது அவர்களுடன் சேர்ந்து இவர்களும் கொலைகளைச் செய்திருக்கின் றார்கள்.


### காஸ் சிலிண்டர்கள், ஆயுதம்

குஜராத் 2002 கலவரங்கள் நடக்கப் போகின்றன என்பதை 1996 முதல் டீஸ்டா செட்ல்வாட் அரசின் பார்வைக்குக் கொண்டு வந்தார். எந்த அரசும், காவல்துறையும் கண்டு கொள்ளவில்லை.

தான் தொடர்ந்து வெளியிட்டக் கட்டுரை களில் இந்துத்துவ தீவிரவாதிகள் பயன்படுத்தும் ஆயுதங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவற்றை அப்போதே நாம் மக்கள் மன்றத்தில் வைத்தோம்.

அதில், அவர்கள் காஸ் சிலிண்டர்களை எப்படிப் பயன்படுத்துவார்கள் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

அதையே டெல்லியில் தாங்கள் நடத்திய இனப்படுகொலைகளிலும் நடத்திக் காட்டி இருக்கின்றார்கள்.




வீடுகளிலிருந்து காஸ் சிலிண்டர்களை கொளுத்திவிட்டு, வீட்டுக் கதவை மூடிவிட்டுப் போய்விட்டார்கள். சில கட்டிடங்களில் மூன்று தளங்கள், மூன்று தளங்களிலம் மூன்று குடியிருப்புகள். ஒவ்வொரு தளத்திலுள்ள சிலிண்டர்களை வீட்டில் நடுவில் கொண்டுவந்து வைத்து கொளுத்தி விட்டுவிட்டுப் போய் விட்டார்கள்.

### கொள்ளை

இத்தனையும் அந்த வீட்டில் இருந்தவற்றைக் கொள்ளையடித்தபின் செய்திருக்கின்றார்கள். ஒரு பகுதியில் கொள்ளையடித்த பொருள்களை மட்டும் 15 லாரிகளில் ஏற்றிச் சென்றிருக் கின்றார்கள்.

வீடுகளிலிருந்த எல்லா ஆவணங்களையும் கேஸ் சிலிண்டர்களை வெடித்து சாம்பலாக்கி விட்டதால், அவர்களிடம் NPR, NRC-களுக்கு எந்த ஆவணமும் இல்லை. இது தமிழ்நாடு ஜமாத்துல் உலமா சபையினர் டெல்லி கலவரப் பகுதிகளில் நடத்திய கள ஆய்வில் பெற்றவை.

With Inputs From, Elyas Riyagi
Sub-Editor V.V.

# ஆவணங்களை முறைப்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

நமது ஆவணங்களை முறைப்படுத்துவது சராசரியான இந்தியர்கள் ஒவ்வொருவரின் கடமையே. அதுமட்டுமல்லாமல் தற்போதைய மோடி அரசு நாடு முழுக்க NRCயை உருவாக்க திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே, அஸ்ஸாம் மாநிலத்தில் NRC நிறைவேற்றப்பட்டுள்ளது. அங்கே பல லட்ச மக்கள் தங்கள் குடியுரிமையை இழக்க முதற் காரணமாக இருந்தது அவர்களின் ஆவணங் களில் இருந்த சிறு சிறு எழுத்து பிழைகளே. நாமும் இந்த விசயத்தில் மிகவும் கவனக் குறைவாக இருக்கிறோம். அதனை சரி செய்து கொள்ள முன்வர வேண்டும்.

அதற்காக நாம் ஒவ்வொரு ஆவணங்களிலும் எப்படி முறைப்படுத்த வேண்டும் என்ற வழி முறையையும் கீழே கொடுத்திருக்கிறோம்.

## எதன் அடிப்படையில் ஆவணங்களை முறைப்படுத்த வேண்டும்?

- தனது அனைத்து ஆவணங்களிலும் தந்தையின் பெயரும் தனது பெயரும் எழுத்து பிழையில்லாமல் சரியாக இருக்க வேண்டும்.
- தந்தை மற்றும் தாய் பிறப்பு சான்றிதழ் அல்லது பள்ளி சான்றிதழில் எப்படி பெயர் இருக்கிறதோ அதன் படி தனது ஆவணங்களில் பெயர் இருக்க வேண்டும்.
- தாயின் பெயரும் சரியாக இருக்க வேண்டியது அவசியம்

( இதில் மூன்று குடியுரிமைச் சட்டம் 2003ல் பிரிவின் கீழ் சிலருக்கு மட்டும் பொருந்தும்)

## பிறப்பு சான்றிதழ் பெறுவது எப்படி? யாரெல்லாம் பெற வேண்டும்?

பிறப்பு சான்றிதழ் என்பது நாம் இந்தியாவில் தான் பிறந்தோம் என்பதற்கும், நாம் இன்ன நாளில் இந்த தாய், தந்தைக்கு தான் பிறந்தோம் என்று குறிப்பிடக்கூடிய ஒரு அரசு சான்றிதழ்.

இந்தியாவில் பிறப்பு இறப்பை கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டம் 1969ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதுவே தமிழகத்தில் 2000ம் ஆண்டு கட்டாயமாக்கப் பட்டது.

அதனால், தமிழகத்தில் 2000த்திற்கு பிறகு பிறந்தவர்கள் கட்டாயம் பிறப்பு சான்றிதழ் வாங்கியிருக்க வேண்டும். மத்திய அரசை பொறுத்த அளவில் 1969க்கு பிறகு பிறந்தவர்கள் பிறப்பு சான்றிதழ் வாங்கியிருக்க வேண்டும் என்று சொல்லலாம்.

2000க்கு முன் பிறந்தவர்கள் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள வேறு பாடுகளின் காரணம் கொண்டு நாம் அதனை கட்டாயமாக்காமல், பிறப்பு சான்றிதழ் பெற வாய்ப்பிருப்பவர்கள் மட்டும் எடுத்து கொள்ள லாம். ஆனால், 2000க்கு பிறகு பிறந்தவர்களுக்கு கட்டாயம் பிறப்பு சான்றிதழ் அவசியம்.

## பிறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? எப்படி தெரிந்து கொள்வது?..

அரசின் தரப்பில் ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட பிறப்புகள் ஆன்லைனில் ஏற்றி வைக்கப் பட்டுள்ளது. கிட்டத்தட்ட 1920களில் இருந்து அரசின் கெஜட்டுகளில் உள்ள பிறப்பு பதிவுகளை அரசு இணையத்தில் பதிவேற்றியிருக்கிறார்கள்.

2017வரை பிறந்தவர்களின் அரசு பதிவு பட்டியல் ஒரு இணையதளத்திலும், அதற்கு பிறகானவை வேறு இணையத்திலும் இருக்கிறது

அதனை உபயோகித்து தெரிந்து கொள்ளலாம்.

உங்களின் பிறப்பு மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்டிருந்தால் கண்டிப்பாக அரசு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இணையத்தளங்களின் மூலம் பிறப்பு பதிவு செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் அதை வைத்து பிறப்பு சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும்.

2017க்கு முன் பிறந்தவர்கள் <https://tnurbanepay.tn.gov.in/Search_BirthRegistration.aspx> என்ற இணையத்தின் வழியாகவும், 2017க்கு பின் பிறந்தவராகவும், அதற்கு முன்பு பிறந்தவராகவும் இருந்து தேதி, எந்த மருத்துவ மனைகளில் பிறந்தீர்கள் என்று தெரிந்தாலும் <http://gccapp.chennaicorporation.gov.in/> என்ற இணையத்தளத்தின் வழியாக பிறப்பு சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும். இந்த இணையத்தளங்களை பயன்படுத்துவது எப்படி என்பதை நம் யூடியூப் தளத்தில் பதிவேற்றியிருக்கிறோம். அதனை உபயோகித்து கொள்ளுங்கள். யூடியூப் தளத்தின் லிங்க்: < https://www.youtube.com/channel/UCNdfE_NJS5wzUk5j-abxjCw>

## பதிவு செய்யாதவர்களின் பிறப்பு சான்றிதழ் எப்படி பெறுவது?..

சிலர் வீட்டில் பிறந்திருப்பார்கள். தனியார் மருத்துவமனையில் பிறந்திருப்பார்கள். அவர்களின் பிறப்பு அரசு பதிவேட்டில் பதிவு செய்யாமல் இருந்திருப்பார்கள். அவர்களுக்கு எவ்வாறு பெறுவது?..

இதனை பொறுத்த வரையில் இரண்டு வெவ்வேறு வழிமுறைகள் இருக்கிறது. நகராட்சிக்கு உட்பட்ட எல்லைகளில் பிறந்தவர்களுக்கு ஒரு வழிமுறை, கிராமங்களில் ஊராட்சி பகுதிகளில் பிறந்தவர்களுக்கு வேறொரு வழிமுறை இருக்கிறது.

தற்போது நகராட்சி அலுவலகங்களில் 2000க்கு பிறகு பிறந்தவர்களுக்கு மட்டுமே பிறப்பு பதிவில்லா நபர்களுக்கு பிறப்பு சான்றிதழுக்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 2000க்கு முன்னால் பிறந்தவர்களுக்கு பிறப்பு சான்றிதழில் திருத்தம் செய்ய முடியாது என்று அரசாணை வெளியிடப்பட்டிருப்பதாக அலுவலகத்திலேயே செய்திதாள் அறிவிப்பை ஒட்டியிருக்கிறார்கள்.

ஆனால், நகராட்சிகளில் 2000க்கு பிறகு பிறந்தவர்களுக்கு அதிகமாக பிறப்பு சான்றிதழ் பெரிய பாதிப்பாக இருக்காது. அதிலும் பிரச்சனை என்றால் கமெண்டில் சொல்லுங்கள் அதற்கான தீர்வையும் சொல்வோம்.

## கிராமங்களில் உள்ளவர்களுக்கு எப்படி பிறப்பு சான்றிதழ் எடுப்பது?

நம்முடைய பிறப்பு தேதி தெரிந்திருக்காவிட்டாலும், பிறந்த வருடம் தெரிந்திருக்கும் அல்லது நமது பயன்பாட்டில் உள்ள அரசு அடையாள அட்டைகளில் நம் பிறந்த வருடம் இருக்கும். இதனை குறித்து கொள்ள வேண்டும்.


யாருக்கு பிறப்பு சான்றிதழ் தேவைப்படுகிறதோ அவர்களின் விவரங்கள்
மற்ற விவரங்கள் அனைத்தையும் அதிகாரிகளே பார்த்துக் கொள்வார்கள்

சார்பதிவாளர் அலுவலத்தில் பிறப்பு/இறப்பு தேடுதல் படிவத்தை வாங்கிக்கொள்ள வேண்டும் (அருகில் ஜெராக்ஸ் கடைகளில் இந்த படிவங்கள் கிடைக்கும்). அந்த படிவத்தையும் இணைத்திருக்கிறேன்.

இந்த படிவத்தை யாரும் கொடுக்கலாம். ஆனால் உறவினர் அல்லது பிறந்த சான்றிதழ் தேவைப்படுவர்கள் நேரடியாக சென்று கொடுத்தால் பிரச்சனை வராது.

இந்த சான்றிதழை படத்தில் குறிப்பிட்டிருப்பதை போல் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

பிறகு யாருக்கு பிறந்த சான்றிதழ் தேவைப் படுகிறதோ அவரின் ஆதார் கார்டை ஜெராக்ஸ் எடுத்து அதனுடன் இணைத்து சார்பதிவாளர் அலுலகத்தில் பிறப்பு/இறப்பு பதிவு செய்யும் பிரிவில் அமர்ந்திருக்கும் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும்.

நீங்கள் குறிப்பிட்ட வருடத்தில் உங்கள் பிறப்பு பதிவு செய்யப்பட்டிருந்தால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று பிறந்த சான்றிதழ் கொடுக்கப்படும். அல்லது பிறப்பு பதிவு செய்யப்படா விட்டால் கீழே கொடுத்திருக்கும் படிவத்தை போல பதிவுகள் இல்லா சான்று வழங்கப்படும். இந்த நடைமுறை ஓரிரண்டு நாட்களுக்குள் முடிந்து விடும்.

முக்கியமாக இந்த பதிவுகள் இல்லா சான்று வாங்குவதற்கு *200* ரூபாய் பணம் கட்ட வேண்டும். இந்த பணத்தையும் ஆன்லைன் மூலமாக மட்டுமே கட்ட வேண்டும். அதனால் ATM கார்டு கொண்டு போனால் வேலை எளிமையாக முடியும். (சில இடங்களில் தேடுதல் பணம் என *100-500* ரூபாய் வாங்கும் வழக்கும் உள்ளது.)




**(பதிவுகள் இல்லா சான்று)**

பதிவுகள் இல்லா சான்று வாங்கியவுடன் அருகிலிருக்கும் ஜெராக்ஸ் கடைகளில் மூன்று ஃபார்ம்களை வாங்க வேண்டும்.

- *20* ரூபாய் பத்திரம்
- பிறப்புக்கான டிடி படிவம் (DD CHALLAN)
- தாமத பதிவு - பிறப்பு பதிவு மனு.

(மூன்று மனுக்களின் போட்டோக்களையும் இதனுடன் இணைத்திருக்கிறேன்)

*20*ரூ பத்திரத்தை வாங்கி விட்டு, நோட்டரி பப்ளிக் என்று சில வழக்கறிஞர்கள் இருப்பார்கள். அவர்களிடம் கீழே படத்தில் காட்டியவாறு பூர்த்தி செய்து வாங்கி கொள்ள வேண்டும். இதற்கு *400*ரூபாய் வரை செலவாகலாம்.




**(20 ரூபாய் பத்திரம்)**

அடுத்தாக பிறப்பு டிடி படிவம், இந்த படிவத்தை பூர்த்தி செய்து ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் *500* ரூபாய் கட்ட வேண்டும். ஆனால், அதற்கு முன்னால் மூன்று அரசு முத்திரை (SEAL) அவசியம் வாங்கியிருக்க வேண்டும். இதனை சார்பதிவாளர் அலுவலகத் தில் வாங்கி விடலாம், கீழே பார்மில் இருக்கும் மூன்று SEALகளையும் வாங்கிய பிறகு வங்கியில் பணம் செலுத்தி ரசீதையும் வங்கி SEALயையும் பெற்றுக் கொள்ள வேண்டும். (வட்டாட்சியர் அலுவலக SEAL, பிறப்பு/இறப்பு அதிகாரி SEAL, கருவுலம் TREASERY SEAL மூன்றையும் வங்கிக்கு செல்வதற்கு முன்னால் வாங்கி கொள்ள வேண்டும்)



**(டிடி படிவம்)**

அடுத்ததாக, மனுதாரரின் இரண்டு ஆதாரங்களை இணைக்க வேண்டும். இரண்டு ஆதாரங்களாக ரேசன் கார்டு மற்றும் ஆதார் கார்டு இருந்தால் நல்லது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

பிறகு இறுதியாக தாமத பிறப்பு பதிவு படிவத்தில் கீழே குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.



**(தாமத பிறப்பு பதிவு மனு)**

## எல்லாம் நிறைவு செய்த பிறகு,

முதலில் தாமத பிறப்பு பதிவு மனு, அடுத்து பதிவில்லா சான்று, அடுத்து 20 ரூபாய் பத்திரம், அடுத்து வங்கி டிடி படிவம், அடுத்து இரண்டு ஆதாரங்களின் ஜெராக்ஸ் என வரிசையாக இணைத்து RDO (Revenue Divisional Officer) அலுவலகத்திற்கு சென்று அங்கிருக்கும் மேலதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். நாம் வழங்கிய படிவங்களின் ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். நாம் படிவங்களை கொடுத்ததற்கான ACKNOW LEDGEMENT FORM கொடுக்கப்படமாட்டாது.

இதன் பிறகு தாலுகா அலுவலகத்திற்கு சென்று நீங்கள் விசாரியுங்கள் என்பார்கள். கிட்டத்தட்ட 30 நாட்களுக்குள் பிறப்பு சான்றிதழ் கிடைத்துவிடும். சில நேரங்களில் காலதாமதம் ஏற்படலாம். இதுவே பிறப்பு சான்றிதழ் எடுப்பதற்கான வழிமுறை.

- தகவல்: அசார்

## வாக்காளர் அட்டையில் மாற்றம் செய்வது எப்படி?..

வாக்காளர் அட்டையை பொறுத்தவரை பெயர், போட்டோ, முகவரி, வாக்களிக்கும் தொகுதி என எல்லாவற்றையும் மாற்றலாம். இதனை மொபைல் மூலமாக கூட எளிதாக செய்யலாம்.

In cellphone - VOTER app
In website - www.nvsp.in <http://www.nvsp.in/>

எப்படி வாக்காளர் அடையாள அட்டையில் மாற்றம் செய்வது என்பதையும் வீடியோவாக வெளியிட்டிருக்கிறோம். உபயோகித்து கொள்ளுங்கள். (<https://www.youtube.com/watch?v=40MSVL0_DO4>)

## ஆதார் கார்டு

Website- www.uidai.gov.in

முகவரி மட்டுமே ஆன்லைன் வழியாக மாற்ற முடியும்.

### தேவையான ஆவணங்கள்

1. Address Proof

ஆதாரின் மற்ற விவரங்களை மாற்ற

நேரடியாக அரசு இ சேவை மையத்தையே நாட வேண்டும்.

## ரேசன் கார்டு

Website- https://www.tnpds.gov.in

Login with Registered Mobile number

1. உறுப்பினரை சேர்க்க
2. முகவரி மாற்றம் செய்ய
3. குடும்பத் தலைவர் மாற்றம் செய்ய
4. குடும்ப உறுப்பினர் நீக்க

மற்றபடி, பெயர் திருத்தம், மொபைல் நம்பர் மாற்றம் போன்றவற்றை நேரடியாக ஒவ்வொரு தாலுகா அலுவலகங்களிலும் உள்ள குடிமை பொருள் அலுவலகத்தில் மாற்ற வேண்டும்.

## ஓட்டுனர் உரிமம்

Website- <https://tnsta.gov.in/>

எல்லா விதமான மாற்றங்களையும் செய்யலாம்

### தேவையான ஆவணங்கள்

Application in Form-2 generated through online.

1. Valid Driving License.
2. Proof of Address.
3. Applicant License should not be disqualified.

செலவு: 500 ரூபாய்

இது முழுக்க ஆன்லைனிலேயே எல்லாம் மாற்றம் செய்திட முடியும், ஆனால் இறுதிக் கட்டமாக நாம் பதிவேற்றிய ஆவணங்களின் ஒரிஜினலை பதிவு செய்த முடித்த பின் ஆன்லை னில் காட்டும் தேதிகளில் ஒன்றில் RTOவிடம் எடுத்து சென்று காட்ட வேண்டும்.

## சாதிச் சான்றிதழ்

புதிய சாதிச் சான்றிதழை ஆன்லைன் வழியாகவே எடுத்து கொள்ள முடியும்.

WEBSITE: www.tnesevai.tn.gov.in

செலவு: 60 RUPEES

1. Photo
2. Any Address Proof
3. Community Certificate of Father or Community Certificate of Mother or Community Certificate of Siblings
4. Self-Declaration of Applicant
5. DNC Certificate

## பாஸ்போர்ட்

- APPLY FRESH PASSPORT/ RENEWAL
- WEBSITE: PASSPORTSEVA
- FEES:1500 RUPEES

இந்த ஆவணங்கள் அனைத்தும் நம் அன்றாட வாழ்க்கையில் அரசு சலுகைகளுக்காகவோ, தேவைக்காக ஏற்கனவே நாம் எடுத்து வைத்திருக்கிறோம். அவற்றை முடிந்த அளவில் சரி செய்து கொள்வோம்.

**- அபூ சித்திக்.**


அல்லாஹ்வின் திருப்பெயரால்.!

"அடிப்படை வாழ்வாதரமற்ற மக்களுக்காக எங்களால் முடிந்தளவு 10 நாட்களுக்கான 5 கிலோ அரிசியை வழங்கி வருகின்றோம் தேவைப்படுவோர்...

குறிப்பு: இதில் உதவி செய்வோரும் கீழ் உள்ள எண்ணுக்கு தொடர்புக்கொள்ளலாம், தேவைப்படுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.


"(என்னிடம்) அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், 'அபூதர்! நீர் குழம்பு சமைத்தால் அதில் அதிகமாகத் தண்ணீர் சேர்த்துக்கொள்வீராக. உம்முடைய அண்டை வீட்டாரையும் கவனித்துக்கொள்வீராக'என்று சொன்னார்கள். (ஸஹீஹ் புஹாரி)

தொடர்பு கொள்ளவும் - 86108 40476 , 94897 72763

இவன் : தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - மேட்டுப்பாளையம்.

## ஏப்ரல்-20

# தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான நாள்...



**கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத் (1930-1995) அவர்கள் ஷஹீதாகி 25 அண்டுகள் கடந்துவிட்டன.**

கூரியுர் ஜின்னா ஷஹீத் அவர்கள் இராம நாதபுரம் கூரியூரில் பிறந்தவர். சிளையான் என்ற செல்லைய்யா அவருடைய பெயர். காவல் துறையில் பணியில் சேர்ந்தபின் அவருடைய பெயர் கான்ஸ்டபுள் செல்லைய்யா.

கான்ஸ்டபுள் செல்லைய்யா என்றால் ரவுடிகள் உலகம் நடுநடுங்கும். ஆனால், அதே வேகத்தில் அலுவலகத்தில் நடக்கும் தீண்டா மைக் கொடுமைகளுக்கும் அவமானங்களுக்கும் எதிராக எழுந்தால், தண்டனைகள், இடமாற்றம், 100 முறை இடமாற்றம் செய்யப்பட்டவர் கான்ஸ்டபுள் செல்லைய்யா.

அலுவலகத்தில் அவரது வீரத்தையும் நேர்மையையும், பாராட்டுபவர்கள் கூட அவர் தண்ணீர் குடித்த பானையில் தண்ணீர் குடிக்க மாட்டார்கள். பானையையே உடைத்து விடுவார்கள். காரணம் அவர் தீண்டக்கூடாத சமுதாயத்தில் பிறந்தவர்.

இப்படி சொல்லொண்ணா அவலங் களுக்கும் அவமானங்களுக்கும் நாளும் ஆளாகி நின்ற நிலையில்தான் அந்த இராமநாத புரத்தையே கதிகலங்கிட செய்த ஜாதி கலவரம் நடந்தது (1981). தாழ்த்தப்பட்ட மக்களின் தலைகள் துண்டாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தாக்கிய ஆதிக்க ஜாதியினரை திருப்பித்தாக்கி யவர்களுக்கு தலைமை தாங்கினார். மக்களை அணி திரட்டினார் என்றெல்லாம் அவர் மீது பொய் வழக்குகள், சித்திரவதைகள், சிறைவாசம்.

இப்படி அவர் வாழ்க்கை மட்டுமல்ல, எண்ணிடலங்கா தலீத் மக்களின் - அமுக்கப் பட்ட மக்களின் - வாழ்க்கையும் இப்படித்தான். பொய் வழக்குகள், சிறைவாசம், சித்திரவதைகள் என்றெல்லாம் வாழ்நாள் முழுவதும் அலைக் கழிக்கப்படுகின்றன.

தன்னை மட்டுமல்ல, தான் சார்ந்த மக்களை யும் காலாகாலமாக - நிரந்தரமாக - அடிமைப் படுத்தி வரும் ஜாதிய அடுக்குமுறையிலிருந்து நிரந்தரமாக விடுதலை அடையச் செய்ய வழியைத் தேடினார்.

இந்த உலகில் உலவிக் கொண்டிருந்த கொள்கைகளையெல்லாம், ஆராய்ந்தார். இஸ்லாத்தையும் படித்தார். இன இழிவுகளை இல்லாமலாக்கிட இஸ்லாமே ஒன்றே வழி எனக் கண்டறிந்தார். இஸ்லாத்தை ஏற்றார். முஹம்மத் அலீ ஜின்னா என்றானார்.

பள்ளத்தை நோக்கிச் சீறிப்பாயுமாம் வெள்ளம் அதுபோல், பாய்ந்தன பலநூறு வழக்குகள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால்.

அவர் செய்த குற்றங்களாக புனையப் பட்டவை

1) தேசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டார்.

2) மத நல்லிணக்கத்திற்கு ஊறு செய்தார்.

3) பொது சொத்துக்களை சேதப்படுத்தினார்.

4) வன்முறையைத் தூண்டினார் என்பன.

அத்தோடு தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டர்கள் சட்டம்,

இவையும் அவர்மீது பாய்ந்தன...

போதாக்குறைக்கு கேடிகள் பட்டியலிலும் சேர்த்தார்கள்.

ஒரு வழக்கில் பிணை கிடைத்துவிடும் என்றால் உடனேயே இன்னொரு வழக்கு, நடந்துகொண்டிருக்கும் வழக்கில் இன்னொரு புதுப்பிரிவு என வழக்குகள் அவர்மீது பாய்ந்து கொண்டே இருந்தன.

தினமும் ஒரு வாய்தா, பிடி வாரண்ட் என அவரது வாழ்க்கை கலவரமானது. அனைத்தையும் சமாளித்துக்கொண்டே இஸ்லாத்தையும் பிரச்சாரம் செய்தார். ஆயிரக்கணக்கான மக்களை - பல கிராமங்களை - அதாவது ஆண்டாண்டுகாலமாக அடிமைப்பட்டுக்கிடந்த மக்களை, இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார், இணைத்தார். அல்லாஹ்வின் பாதையில்..!

பொறுத்துக் கொள்ளவில்லை பாசிச பரிவாரத்தினரால். மாநாடு போட்டு தீர்மானம் போட்டு 1995 ஆம் ஆண்டு, ஏப்ரல் 20-ஆம் நாள் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களைக் கொலை செய்தார்கள். இல்லை வீர மரணத்தை பரிசாகத் தந்தார்கள். முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத் என்றானார்.

இன்னாலில்லாஹி... இறைவனிடமிருந்தே வந்தோம், அவனிடமே மீண்டும் செல்வோம்.

அவரைப்போல் ஓய்வறியாமல் உழைப்போம்.

இஸ்லாத்தை ஏற்று அனைத்து அடிமைத் தளையிலிருந்தும் விடுதலை அடைவோம்.

"மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவி லிருந்தே படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவி யையும் படைத்தான். பிறகு அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்." அல்குர்ஆன் -4:1

பிறப்பால், படைப்பால் உலக மக்கள் அனைவரும் சமம் என்பதை உணர்வோம். அல்லாஹ்வின் வழிகாட்டுதலாம் இஸ்லாத்தை ஏற்போம்.!

"கடப்பாறையைத் தூக்கியக் காலம் போய்விட்டது. இஸ்லாம் எனும் கருத்தியலைத் தூக்கி இருக்கின்றோம். இன இழிவு ஒழிய இஸ்லாம் எனும் மருந்தை நாம் எடுத்தப் பிறகு அவர்களில் பலர் எரிச்சலைக் கொட்டுகின்றார்கள். சிலர் இன்றளவுமில்லாத அனுதாபத்தைக் கொட்டுகின்றார்கள். இதிலிருந்து இஸ்லாத்தின் மகிமையைப் புரிந்து கொள்ளுங்கள்."

- கூரியூர் ஜின்னா ஷஹீத்.


அவர் உடல் நல்லடக்கம் செய்த பின்பும் 40 இளைஞர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அவர்களிடம் கேட்டபோது, நாங்கள் அவரிடம் வாக்குக் கொடுத்திருந்தோம் என்றனர்.

கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்களின் வாழ்க்கையை முழுமையாக அறிந்திட படியுங்கள்


**வேர்கள் வெளியீட்டகத்தின்**

"கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத்"

எழுதியவர் **மு.குலாம் முஹம்மத்** செல்: 81481 29887



**சிலுவைப் போர்கள் 2.0**




# முஸ்லிம்களின் முதல் எதிரி!

இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாத்திற்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கெதிராகவும் அங்கிங்கொனாதபடி எங்கும் வியாபித்து நிற்கும் வெறுப்பு. இந்த வெறுப்பு திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரங்களால் கட்டமைக்கப் பட்டது.

இந்த பொய்கள் - அதாவது இஸ்லாத்திற்கு எதிரான இந்தப் பொய்களில் பல வரலாற்றுத் திரிபுகள். உண்மையைச் சொன்னால் வரலாற்றையும், யதார்த்தமான நிகழ்வுகளையும் திரித்தும், புரட்டிப்போட்டும் தான் இஸ்லாத்தின் மீது இந்த வெறுப்பை வளர்க்கின்றார்கள்.

இந்த வெறுப்பில் வளர்பவர்கள் தாம் முஸ்லிம்களையும் - இஸ்லாத்தையும் பரம எதிரியாக எடுத்துக் கொள்கின்றார்கள். (இந்த வெறுப்புகள், என்ன செய்யும் என்பதை புரிந்திட டெல்லி கலவரம் பிப்ரவரி-24,25,26-2020 பற்றிய ஹர்ஷ்மந்திர் உடைய அறிக்கையைப் படியுங்கள்)

இந்த வெறுப்பு எப்படியெல்லாம் வளர்க்கப்படுகின்றது என்பதை ஜான் பெஃபர் அவர்கள் இந்த நூலில் பட்டியலிடுகின்றார் படியுங்கள்...

ஜான் பெஃபர் கூறுகின்றார் :

காலங்காலமாக நாம் பரப்பி வந்த பொய்கள், குறிப்பாக 1) முஸ்லிம்கள் இயல்பாகவே வன்முறையை விரும்புபவர்கள். 2) அவர்கள் உலகை தங்கள் கைவசப்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். என்பன மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. அவர்கள் முஸ்லிம்கள் இந்த உலகில் வாழ்ந்திட தகுதியற்றவர்கள் என்பதே மக்களின் முடிவு என்றாக்கி விட்டார்கள்.

12-ஆம் நூற்றாண்டில் திருக்குர்ஆனை மொழிப்பெயர்த்த கேற்றானின் ராபர்ட் என்பவர், இறைவனின் தூதர் முஹம்மத் அவர்களை வசைபாடுவதில் புதிரானவராக இருந்தார். அவர் இப்படிதான் வசையைப் பாடினார். "Like the war you are you every where contradict yourself" எல்லாவகையிலும் முரண்பட்டு நிற்கின்றீர்.

(முதல்) சிலுவைப்போர் வீரர்களுக்கு தங்கள் எதிரிகள் (முஸ்லிம்கள்) அடிக்கடி நம்பிக்கை துரோகத்தைச் செய்தார்கள் என்றொரு புகாரை அடிக்கடிச் சொல்வார்கள். ஆனால் 14-ஆம் நூற்றாண்டின் ஃபிடன்டியஸ், என்ற ஆட்சியாளன் அடிக்கடி தான் தந்த வாக்குறுதிகளை மாற்றிக்கொண்டும், மீறிக் கொண்டும் இருந்தான். இதை அவன் தன்னுடைய புத்திசாலித்தனம் என எடுத்துக் கொண்டான். ஆனால் இவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்ட முஸ்லிம்கள், இவர் ஒப்பந்தத்தை மீறும் போதெல்லாம் அவர்களும் மீறினார்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஃபிடன்டியஸ் என்ற ஆட்சியாளர் தொடர்ந்து துரோகங்களைத் செய்து கொண்டிருந்ததால், முஸ்லிம்கள் பேச்சு வார்த்தைப் பயன் தராது, இனி போர்கள் மட்டுமே ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தார்கள். (Source : Christopher Tyerman : God's war. Page-688. and John Tolan - Sapacens Page-211)

நம்பிக்கையின்மை என்பது கிருஸ்தவர்கள் மீதும் வீழ்ந்தது. காரணம், அவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து வாழ்ந்திட லாயக்கற்றவர்கள் என்பதுதான். கிருஸ்தவர்களும், முஸ்லிம்களும் இணைந்து வாழ்ந்திட முடியாத நிலைக்குப் போனதற்கு காரணம் முஸ்லிம்களா? இல்லை கிருஸ்தவர்களா? எனக் கேட்டால் கிருஸ்தவர்களே இதற்குக் காரணம். இதுவே உண்மை!

எடுத்துக்காட்டாக போப் கிரிகோரி IX என்பவர் 13-ஆம் நூற்றாண்டின் கிருஸ்தவ மன்னன் பிடரிக் என்பவரைக் கிருஸ்துவுக்கு எதிரானவர் Antichrist என்றழைத்தார். காரணம் அவர் முஸ்லிம்களோடு நல்லுறவை வைத்துக் கொள்ள முயற்சி செய்தார்.

துரோகம் என்பது சிலுவைப்போர் வீரர்களின், அசைக்க முடியாத குணாதிசயங்களுள் ஒன்றாக இருந்தது.

இதற்கும் ஒரு எடுத்துக்காட்டைக் கூறிட இயலும். அது,

ஜெர்மனியில் யூதர்கள் பெரிய அளவில் படுகொலைகளுக்கு - கூட்டுப்படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

மெய்ன்ஸ்- என்ற (கிருஸ்தவ) தேவாலயத்தின் தலைமை பாதிரி அந்த நகரில் வாழ்ந்த யூதர்கள் அனைவரையும் பாதுகாப்பதாக வாக்களித்தார். யூதர்கள் அதற்காக, சில வெள்ளிகளைத் தர வேண்டும் எனக் கேட்டார். யூதர்கள் தங்களிடம் உள்ள வெள்ளிகளையெல்லாம் கொண்டு தலைமைப் பாதிரியிடம் கொடுத்தார்கள். யூதர்களைப் பாதுகாத்திட வேண்டிய தருணம் வந்தபோது, அந்த பாதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். இதனால் பாதிரியின் மாளிகையில் தங்கியிருந்த யூதர்களும் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள். (ஆதாரம் - Christopher Tyreman : Gods war : 102)

அதேபோல் 1099-இல் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழிருந்த ஜெரூசலம் துவம்சம் செய்யப்பட்டது. அப்போது சிலுவைப்போர் வீரர்களின் ஒரு தளபதி 'Tancred' டான்கிரட், அல்அக்ஸா பள்ளிவாசலில் வந்து தஞ்சம் புகும் முஸ்லிம்களைப் பாதுகாதுப்பேன். ஆனால் அவர்கள் தங்களிடமிருக்கும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட வேண்டும் என்றார். முஸ்லிம்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களைக் கீழே போட்டார்கள். அல்அக்ஸா மஸ்ஜித்-இல் தஞ்சம் புகுந்தார்கள். சிலுவைப் போர் வீரர்கள் தங்கள் துரோகத்தைத் தாராளமாகக் காட்டினார்கள்.

அல்அக்ஸாவில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள் அத்தனை பேரையும் வெட்டிச் சாய்த்தார்கள். (Source : karen armstrong holy war - 172)

கிருஸ்தவர்களின் துரோகம் இத்தோடு நின்றுவிடவில்லை. அவர்களின் மிகப்பெரிய துரோகம், ஒன்றை தேவனின் சாம்ராஜ்யம் 'Kingdom Heaven' என்ற 2005-ஆம் அண்டில் வந்த, திரைப்படத்தில் கோட்டிட்டுக் காட்டினார். அது, சுல்தான் சலாஹுத்தின் அய்யூபி அவர்களிடம் (கிருஸ்தவர்கள்) சிலுவைப்போர் வீரர்கள் செய்துகொண்ட ஒப்பந்தமும், அதனை அவர்கள் மீறியதும் சுல்தான் சலாஹுத்தின் அய்யூபி அவர்களிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், எக்காரணத்தைக் கொண்டும் ஹஜ்ஜுக்குச் செல்லும் புனிதப் பயணிகளைத் தாக்கிட மாட்டோம் என உறுதி கொடுத்தார்கள். ஆனால், அவர்களை ஹஜ்ஜுக்குச் செல்லும் புனித பயணிகளை ஒருமுறை அல்ல பலமுறை தாக்கினார்கள்.

**இப்படியெல்லாம் நடந்துகொண்ட சிலுவைப்போர் வீரர்களிடமும், கிருஸ்தவர்களிடமும் பின்னர் சிலுவைப் போரில் வெற்றிகளை ஈட்டிய முஸ்லிம்கள் எப்படி நடந்திட வேண்டும்?**

**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் அதுபற்றி ஜான்பெஃபர் கூறுவதைக் கேட்கலாம்.**

- தமிழில் MGM

பாகம்-4

- எஸ்.எம். முஷ்ரிப்




# பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

**இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 12 முஸ்லிம்களுக்கு 8 வருடத்திலிருந்து ஆயுள் தண்டனை வரை தீர்ப்பளிக்கப்பட்டது.**

## தில்சுக்நகர் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு 2013

(அ) இந்த வழக்கில் காவல்துறையின் கோட்பாட்டின் அடிப்படை குற்றம் சாட்டப்பட்டவர்களின் மின்னஞ்சல் ஐடிகளும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மின்னஞ்சல்களும் உரையாடல்களும். ஆனால் இந்த மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்ட இன்டர்நெட் புரோடோகால் முகவரிகள் எனப்படும் இணைய முகவரிகள் (IP Address) மாக் முகவரிகள் (MAC ((Media Access Control)) Address) எனப்படும் கணினிக்கான தனி வன்பொருள் எண்கள் (ஒரு வலைப்பின்னலில் ஒவ்வொரு கணினிக்கும் தனித்தனியாக ஒவ்வொரு எண் இருக்கும்), அதன் இடம், நாள், நேரம் போன்றவற்றை விசாரிப்பதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் மூலம் யார் இந்த மின்னஞ்சல் முகவரி கணக்குகளை உருவாக்கியது? யார் இந்த மின்னஞ்சல்களை அனுப்பியது? யார் இந்த மின்னஞ்சல்களை பெற்றுக்கொண்டது போன்ற விவரங்களை கண்டறிந்திருக்கலாம்.

(ஆ) இந்த மின்னஞ்சல்களை அனுப்பிய அல்லது பெற்றுக்கொண்ட எந்த ஒரு கணினியோ அல்லது மடிக்கணினியோ கைப்பற்றப்படவில்லை. ஆதாரமாக சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) இந்த மின்னஞ்சல் செய்திகள் கற்பனையான பெயர்களில் சங்கேத மொழிகளில் அனுப்பப்பட்டிருந்தன. காவல்துறையினர் இந்த சங்கேத மொழிகளை குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கொண்டே கண்டறிந்ததாக கூறினர். காவல்துறையினரால் அவர்கள் கட்டிவிட்ட கதைக்கு ஏற்ப இவை உருவாக்கப்பட்டவை என இதற்கு அர்த்தம் கொள்ளலாம்.

(ஈ) உச்சநீதிமன்றம் அவசியம் என்று கூறி இருந்த எந்தவிதமான சுதந்திரமான சுயபரிசோதனையும் மேற்கொள்ளாமல் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை ஏற்றுக்கொண்டது.

(உ) குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை மாற்றி அளிக்க கோரிய மனுவினை தள்ளுபடி செய்து

நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது.

(ஊ) குண்டுவெடிப்புகள் நிகழ்ந்த இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சிம் கார்டுகளை குறித்து ஆழமான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அது உண்மை குற்றவாளிகளை நோக்கி அழைத்து சென்றிருக்கும்.

(எ) ஒரு தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கியிருந்த கண்ணால் கண்ட நேரடி சாட்சியத்தின் வீடியோ குறுந்தகடு (சி.டி) நீதிமன்றத்தில் போட்டுக் காண்பிக்கப்படவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால், குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தவர்களுக்கும் தொலைக்காட்சி வீடியோவில் சொல்லப்பட்ட வர்ணனைக்கும் ஒத்துப்போகிறதா என அது சுட்டிக்காட்டியிருக்கும்.

இவ்வளவு பலவீனம் இருந்த நிலையிலும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேருக்கும் தூக்கு தண்டனை வழங்கப்பட்டது.

மேலே உள்ள நான்கு வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முஸ்லிம்கள். காவல்துறையினருக்கும் வழக்கு நடத்தியவர்களுக்கும் (அரசு தரப்பு வழக்கறிஞர்கள்) இவ்வழக்கில் இருந்த ஒரு பக்கசார்பான பாரபட்சமான மனோநிலை மிகத்தெளிவானது. நீதிமன்றங்களும் நம்பிக்கைக்குரியதாக நடந்து கொள்ளவில்லை. அவை பல நடைமுறைத் தவறுகளையும் சட்டரீதியான தவறுகளையும் இதில் செய்திருக்கின்றன. இதன் விளைவு, இந்த நான்கு வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளென தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

குற்றவாளிகளென தீர்ப்பு வழங்கப்பட்டவர்களை அப்பாவிகளென நிரூபிப்பதற்காக மட்டுமன்றி, மீண்டும் ஆழமாக மறுவிசாரணை நடத்தி உண்மையான குற்றவாளிகளை (அநேகமாக அவர்கள் பிராமணிஸ்டுகளாக தான் இருப்பார்கள்) கண்டுபிடிக்கவும் இந்த வழக்குகளில் மேல்முறையீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

## வலதுசாரி தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் வேறு விதமான கொள்கை

இந்த வழக்குகளின் நடைமுறைகளுக்கு முரணாக பிராமணிஸ்டுகள் குற்றவாளிகளென குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில் நடைமுறைகள் வேறுவிதமாக இருந்தன. அப்படி இரண்டு வழக்குகளை நான் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளேன். ஒன்று பர்பானி வழக்கு. இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பஜ்ரங்தள் அமைப்பை சேர்ந்தவர்கள். மற்றொன்று மெக்கா மஸ்ஜித் வழக்கு (ஹைதராபாத்). இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ்., ஜெய் வந்தே மாதரம் மற்றும் அபிநவ் பாரத் அமைப்பை சேர்ந்தவர்கள். இவ்வழக்குகளில் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டட்பபட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்களைப் போல நடந்து கொண்டார்கள். அதன் மூலம் அவர்களின் விடுதலையை உறுதி செய்தார்கள்.

## 5. முஹம்மதியா மஸ்ஜித் (பர்பானி) குண்டு வெடிப்பு 2003

i) இவ்வழக்கில் சாந்த், ஸய்தா என்ற இரண்டு கண்ணால் கண்ட நேரடி சாட்சிகள்





ஏற்கனவே கூறியிருந்ததை மாற்றி அப்பட்டமாக பொய் சொன்னார். இதற்காக அவர் தனியார் மருத்துவர் ஒருவரிடம் தனக்கு அவ்வப்போது தற்காலிகமாக மறதி ஏற்படும் என ஒரு மருத்துவ சான்றிதழை நீதிமன்றத்தில் அளித்திருந்தார். இதன் மூலம் அவர் தந்திருந்த வாக்குமூலத்தை ஒன்றுக்கும் உதவாததாக செய்துவிட்டார். அரசு தரப்போ அல்லது நீதிமன்றமோ இதில் தலையிட்டு உண்மையை கண்டறிய முயலவில்லை.

இருந்தனர். ஆனால் அவர்களை கண்டுபிடிக்கவில்லை. அவர்களை விசாரணை செய்யவில்லை.

ii) குற்றவாளிகளுக்கு சொந்தமான வெடிப்பொருட்களை கண்டெடுத்த குழந்தை விசாரிக்கப்படவில்லை.

iii) நந்தேத்தில் 2006ம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பு வழக்கு சம்பந்தமாக சஞ்சய் சவுத்ரி என்பவனிடம் நடத்தப்பட்ட நார்கோ அனாலிஸிஸ் டெஸ்டில் (மயக்கநிலை பரிசோதனை) அவன் தீவிரவாத வலைப்பின்னல் குறித்த பல முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்தியிருந்தான். ஆனால் அரசுத்தரப்பு அந்த நார்கோ அறிக்கைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. நீதிமன்றமும் அதனை கேட்டு அழுத்தம் தரவில்லை.

iv) சனத்குமார் பாடே என்பவன் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பஜ்ரங்தள் நடத்திய பல்வேறு தீவிரவாத முகாம்களில் பயிற்சியாளனாக கலந்து கொண்டான். அவனுடைய அறிக்கையில் அந்த தீவிரவாத முகாம்களின் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரங்கள் இருந்தன. ஆனால் இந்த தீவிரவாத சதித்திட்டங்களை வெளிக்கொணர அந்த அறிக்கை முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.

v) அரசுத்தரப்பும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பும், தீவிரவாத தடுப்புப்படையின் உதவி ஆணையாளர் அனில் தமய்சகர் என்பவரும் சேர்ந்து அனில் தமய்சகர் ஏற்கனவே கொடுத்திருந்த வாக்குமூலத்தை பொய்யாக்க சதி செய்தனர். ஏனெனில் அனில் தமய்சகர் தான் இந்த வழக்கின் பெரும்பகுதியை விசாரித்த விசாரணை அதிகாரி. பின்னாளில் அவர் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின் போது

இந்த வழக்கு முழுவதும் அரசு தரப்பு வாய்பொத்திக்கொண்டு ஒரு மௌனமான பார்வையாளராக நடந்து கொண்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு வழக்கறிஞர்கள் செய்த பம்மாத்து வேலைகளையோ அல்லது அவர்களின் உத்திகளையோ திறம்பட தங்களின் எதிர்வாதத்தால் முறியடிக்கவில்லை. அதன் செயலின்மை எதிர்தரப்பை வலுவடைய செய்தது. இதன் மூலம் வழக்கு ஒரு தரப்பாக நடந்தது.

**விளைவு : குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் எல்லா குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டனர்.**

## 6. மெக்கா மஸ்ஜித் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு வழக்கு, 2007

i) வெடிகுண்டுகளை வெடிக்க வைக்க பயன்படுத்தப்பட்ட அறிவியல், தொழிலுநுட்ப ஆதாரங்களான கைபேசிகளின் சிம்கார்டுகள் கண்டு கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டன.

ii) முழுக்க முழுக்க தன்னிச்சையாக தரப்பட்ட சுவாமி அசிமானந்தின் ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

iii) குற்றம் உறுதிபடுத்தப்பட்ட இதே சதித்திட்டத்தின் இன்னொரு பகுதியான அஜ்மீர் ஷெரீஃப் வழக்கின் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த பதிவுகள் நீதிமன்றத்தால் கேட்கப்படவில்லை.

இந்த புத்தகம் பாதியளவு எழுதப்பட்ட வேளையில் இன்னும் மூன்று வழக்குகளில் நீதிமன்றங்கள் முடிவெடுத்தன. அந்த தீர்ப்புகள் இந்த புத்தகத்தில் விவாதிக்கப்படவில்லை. ஆனால் அவை கடந்த சில வருடங்களில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளின் வரிசையிலேயே இருந்தன. புத்த கயா (பீஹார்) குண்டு வெடிப்பு வழக்கு 2013, சின்னசாமி ஸ்டேடியம் (பெங்களூர்) குண்டுவெடிப்பு வழக்கு 2010 போன்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்களை குற்றவாளிகள் என அவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. ஆனால் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பஜ்ரங்தள் சம்பந்தப்பட்ட பூர்னா மஸ்ஜித் (மஹாராஷ்டிரா) 2004 குண்டு வெடிப்பு வழக்கில் அறிவியல்பூர்வமான சாட்சியங்களும் பல முக்கிய சாட்சியங்களும் அரசுதரப்பு வழக்கறிஞரால் பர்பானி மஸ்ஜித் வழக்கைப் போலவே கண்டு கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லையென விடுவிக்கப்பட்டார்கள்.

நீதிமன்ற தீர்ப்புகளை ஆய்வுக்குட்படுத்தும் போது நீதிமன்றத்தின் விளக்கங்கள், அனுமானங்கள் அல்லது முடிவுகளை நான் ஏற்றுக்கொள்ளாமல் கருத்துவேறுபாடுகள் கொண்டிருக்கலாம். நீதிமன்றங்கள் செய்துள்ள சில தவறுகள் அல்லது செய்யத்தவறிய சில விஷயங்கள் குறித்து நான் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் நான் இதனை நீதிமன்றத்தை அவமானப்படுத்தும், சிறுமைப்படுத்தும் தவறான நோக்கத்திலோ, எண்ணத்திலோ செய்யவில்லை. கண்ணியத்தின் வரம்பை மீறவுமில்லை. என்னுடைய கருத்துகள் கீழ்நீதிமன்றங்களின் தீர்ப்புகளை எதிர்த்து மேல்நீதிமன்றங்களில் செய்யப்படும் மேல்முறையீடுகளைப் போன்றதே.

மாலேகான் 2008 குண்டு வெடிப்பு வழக்கின் விசாரணையானது சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ், அஜ்மீர் ஷரீஃப், மெக்கா மஸ்ஜித், ஹைதராபாத், 2007ல் நடந்த அனைத்தும், மாலேகான் 2006, மாலேகான் 2008, மொடஸ்ஸா (குஜராத்) 2008 போன்ற குண்டுவெடிப்புகள் அனைத்தும் ஒரே மாதிரியான சதி என்பதையும், இந்த அனைத்து குண்டுவெடிப்புகளுக்கும் ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து லெட்டினன்ட் கர்னல் புரோகித் என்பரால் விநியோகிக்கப்பட்டது என்பதையும் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டியது. (கர்கரேவை கொலை செய்தது யார்? அத்தியாயம் 5 மற்றும் 8). இவையனைத்தும் ஒரே சதி என்ற வகையில் விசாரிக்கப்பட வேண்டியது. ஆனால் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையும், மாநில தீவிரவாத தடுப்பு படைகளும், என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனமும் இதனை தனித்தனி சதிகளாக எடுத்துகொண்டு விசாரித்தன. அநேகமாக இவர்கள் இந்த பிராமணிய நிறுவனங்கள் மற்றும் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் பிரமாண்டமான பெரும் சதியை எல்லோருக்கும் முன் கொண்டு வர விரும்பவில்லை.



இந்த குண்டுவெடிப்புகளில் எல்லாம் உபயோகப்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ். வெடிப்பொருட்கள் அனைத்தும் லெட்டினன்ட் கர்னல் புரோகித்திடமிருந்து தான் பெறப்பட்டன என்பதும் தெள்ளத் தெளிவாகிறது. ஆனால், 2008 மாலேகான் வழக்கைத் தவிர்த்து மற்ற வழக்குகளில் ஆர்.டி.எக்ஸ். எங்கிருந்து பெறப்பட்டது என்பது கண்டறியப்படவில்லை. சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ், மக்கா மஸ்ஜித், மாலேகான் 2006 வழக்குகளை என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனம் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் ஆர்வத்துடனும் விசாரித்த போதிலும் இந்த குண்டுவெடிப்புகளில் ஆர்.டி.எக்ஸ். வெடிப்பொருட்களின் மூலம் எது என்பது கண்டறியப்படவில்லை.

இந்த வழக்குகளின் ஆவணங்களை கவனமாக ஆய்வு செய்தால், வெடிகுண்டுகளின் மூலம் குறித்த தேடல் குற்றம் சாட்டப்பட்ட ராமசந்திர கல்சங்ரா, சந்தீப் டாங்கே என்ற



இரண்டு நபர்களிடம் சென்று நின்று விடுகிறது. இந்த இருவரும் ஐ.பி. என்ற மத்திய உளவுத் துறையாலும் பிராமணிஸ்ட் சக்திகளாலும் 26/11 மும்பைத்தாக்குதல் 2008இல் கொல்லப் பட்டனர். இவர்கள் தான் சி.எஸ்.டி. - காமா - ரங்கபவன் பகுதிகளில் மற்ற தீவிரவாதிகளுடன் சேர்ந்து அழிவை ஏற்படுத்தியவர்கள் என சந்தேகிக்கப்படுகிறது. ஒருவேளை இவர்களின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால் "ஆபரேஷன் கர்கரேவை கொல்" என்ற சதித் திட்டம் ஒட்டுமொத்தமாக வெளிப்பட்டுவிடும்.

சோலாப்பூர் நீதிமன்றத்தில் 29 டிசம்பர் 2016இல் மும்பை தீவிரவாத தடுப்புப்படையில் சிறிது காலம் பணியாற்றிய ஓய்வு பெற்ற காவல்துறை ஆய்வாளர் மெஹ்பூப் முஜாவர் என்பவர் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரத்தில் ராமசந்திர கல்சங்ராவும், சந்தீப் டாங்கேவும் மஹாராஷ்டிர தீவிரவாதத் தடுப்புப்படை யினரால் கொல்லப்பட்ட செய்தி வெளிப்படுத் தப்பட்டுள்ளது. (மும்பை மிரர், இணைய செய்தி, 30 டிசம்பர் 2016). இவர்கள் கொல்லப் பட்டது வெளிப்படையாக ஐ.பி. மற்றும் பிராமணிஸ்ட் சக்திகளின் நன்மைக்காகவே.

மேலும், பல வழக்குகளில் விசாரணை நிறுவனங்கள் வேண்டுமென்றே பலமான முக்கியமான தடயங்களை பின்தொடராமல், முற்றிலும் மாற்றமானதொரு பாதையில் விசாரணையை கொண்டு சென்று அப்பாவிகளை கைது செய்தனர். அப்படிப்பட்ட வழக்குகள் பின்வருமாறு:-

1) மும்பை புறநகர் இரயில் குண்டுவெடிப்பு வழக்கு (7/11) 2006

2) ஜெய்ப்பூர் (இராஜஸ்தான்) குண்டு வெடிப்பு வழக்கு 2008

3) கான்பூர் (உத்தரபிரதேசம்) குண்டு வெடிப்பு வழக்கு 2008

4) ஜெர்மன் பேக்கரி, புனே (மஹாராஷ்டிரா) குண்டுவெடிப்பு வழக்கு 2010

5) சவேரி பசார் (மும்பை) குண்டுவெடிப்பு வழக்கு 2011

6) ஜங்லி மஹாராஜ் சாலை, புனே (மஹாராஷ்டிரா) வழக்கு 2012

7) மல்லேஷ்வரம் (பெங்களூர்) குண்டுவெடிப்பு வழக்கு 2013

8) புத்த கயா (பிஹார்) குண்டுவெடிப்பு வழக்கு 2013

9) ஃபரஸ்கானா (டக்துசேத் கணபதி) புனே (மஹாராஷ்டிரா) குண்டுவெடிப்பு வழக்கு 2014 போன்றவை.

இந்த வழக்குகள் அத்தியாயம் 3ல் விவாதிக் கப்பட்டுள்ளன. அதில் எப்படி உண்மை சதிகா ரர்களும் குற்றமிழைத்தவர்களும் பாதுகாக்கப் பட்டனர், அப்பாவிகள் சம்பந்தப்படுத்தப் பட்டனர் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த புத்தகம் 21 வழக்குகளில் முஸ்லிம்கள் வேண்டுமென்றே தவறாக சிக்கவைக்கப்பட்டு பலவருடங்களாக சிறை தண்டனையை அனுபவித்தப்பின்னரே நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டதைப் பற்றியும் தகவல்களை கொண்டுள்ளது. (அத்தியாயம் 4). சில வழக்கு களில் இவ்வாறு முஸ்லிம்கள் 12 முதல் 20 ஆண்டுகள் வரையில் சிறையில் இருந்து பின்னர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட வழக்குகளில் முடிவெடிப் பதில் நீதிமன்றங்கள் செய்துள்ள எல்லைமீறிய காலதாமதம் இதே போன்ற மற்ற தீவிரவாத வழக்குகளை சந்திக்கும் முஸ்லிம் இளைஞர் களிடம் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. அவர்களுக்கு முன்னால் இருந்த இதே போன்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பொய்யான ஜோடிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தன.

விடுதலை செய்யப்பட்ட வழக்குகளில்

கூட குற்றம் சாட்டப்பட்டவர்கள் 10 முதல் 15 வருடங்கள் வரை விசாரணை காலத்தில் சிறை யிலிருக்க வேண்டியிருந்தது. வழக்கின் முடிவு என்னவாகயிருந்தாலும் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்கள் தங்களுடைய இளமைக்காலத்தின் மதிப்புமிக்க பல வருடங்களை சிறையில் தியாகம் செய்ய வேண்டியிருந்தது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்த உணர்வு 10 வருடம் வரை தண்டனையளிக்கக் கூடிய தீவிரவாத குற்றச்சாட்டுடன் வழக்குகளை சந்தித்து கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர் களிடம் ஒது புதிய போக்கை உண்டு பண்ணியது. அதாவது இந்த வழக்குகளை தொடர்ந்த போராடி நடத்தி சிறையில் வாழ்க்கையை வீணடிக்காமல் குற்றத்தை ஒப்புக்கொண்டு 10 வருடத்திற்கு உட்பட்ட தண்டனையை பெற்றுக் கொள்வது. இதன் மூலம் அவர்கள் வாழ்க்கையில் வீணாகக்கூடிய 10 முதல் 15 வருடங்களை சேமிப்பது என ஒரு புதிய போக்கு முஸ்லிம் இளைஞர்களிடம் உண்டானது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்தது 3 வழக்குளில், முஸ்லிம் இளைஞர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர் அல்லது தங்களது மனுவை மாற்றிக்கொண்டனர் (அத்தியாயம் 11). இது மிகவும் துரதிருஷ்டவசமான போக்கு. இந்த போக்கு இந்த நாட்டில் உள்ள குற்றவியல் நீதி அமைப்பை குறிப்பாக முஸ்லிம்கள் குறித்த குற்றவியல் நீதி அமைப்பை பற்றி தெளிவாக எடுத்துரைக்கிறது.

இந்த புத்தகத்தில் விவாதிக்கப்பட்டுள்ள இன்னொரு முக்கியமான வழக்கு பட்டப் பகலில் காவல்துறையால் தீவிரவாதிகள் என கூறப்பட்டு, இரண்டு எதிர் தாக்குதல்களில் (என்கவுண்டர்கள்) கொடூரமாக கொலை செய்யப்பட்ட 5 நபர்கள் குறித்தது. அவர் களுக்கு எதிராக எந்தவிதமான ஆதாரங்களும் சிறிதளவும் இல்லாத போதும் அவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். (அத்தியாயம் 12). அது 2014இல் நடந்த ஃபரஸ்கானா (டக்துசேத் கணபதி), புனே வெடிகுண்டு வழக்கு. அதில் காவல்துறையினர் 3 நபர்களின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு 5 நபர்கள் மீது வழக்கு பதிந்தனர். அதில் ஒருவர் சந்தேகப்படுபவர்களில் முக்கியமானவர். இதற்கு ஆதாரமாக இருந்தது ஒரு சி.சி.டி.வி. காட்சிப் பதிவு. அது மோசடியாக உருவாக்கப்பட்டது என தீவிரமாக சந்தேகிக்கப்பட்டது.

இதன் பின்னர் காவல்துறையினர் இவர்கள் சிறைச்சாலையில் இருந்து தப்பித்தது போன்ற காட்சிகளை கட்டமைத்தார்கள். பின்னர் அவர்கள் இரண்டு எதிர்தாக்குதல்களில் கொன் றதை போன்று கொலை செய்துவிட்டார்கள். ஆச்சரியப்படும் விதமாக இந்த குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள் எந்த ஒரு குற்றவியல் நடுவர் முன்போ, நீதிபதியின் முன்போ ஒரே ஒரு முறைக்கூட ஆஜர்படுத்தப்படவில்லை. காவல்துறையினர் இவர்கள் தான் குற்றவாளிகள் என்று சொன்ன கதையை யாரும் ஆய்வு செய்யவுமில்லை. எனினும், குற்றம் சாட்டப்பட்ட 5 பேரையும் சுட்டுக்கொலை செய்த பின்பு காவல்துறையினர் உடனடியாக வழக்கு மூடல் அறிக்கை ஒன்றை புனே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. தெளிவாக அறிவுப்பிரயோகம் ஏதுமின்றி வழக்கும் முடித்து வைக்கப்பட்டது. இதன் மூலம் மேற்கொண்டு விசாரணை நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. மறுபுறம் காவல்துறை மிகக் கவனமாக முக்கிய குற்றவாளியான சிவ்ராஜ் குல்கர்னி என்பவனை பாதுகாத்தது. அவன் ஆழமாக விசாரிக்கப்படவும் இல்லை, அவனு டைய பெயரில் இருந்த அழைப்பு அறிக்கைகள், அவன் குண்டு வெடிப்பதற்கு முன்னர், பின்னர், குண்டு வெடித்த நேரத்தில் எங்கிருந்தான் என்பதை அறிய கவனத்துடன் ஆய்வு செய்யப் படவும் இல்லை.

இந்த புத்தகத்தில் நான் குறிப்பிட்டுள்ள வழக்குகள் எல்லாம் மாதிரிகள் (உதாரணங்கள்) தான். இது போன்ற ஏகப்பட்ட வழக்குகள் நாடெங்கிலும் உள்ளன. அவற்றில் எல்லாம் முஸ்லிம் இளைஞர்கள் காவல்துறையால் பொய் யாக சம்பந்தப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் முடிவிற்காக வரிசையில் காத்திருக்கின்றனர். அவற்றில் பல 10 முதல் 15 வருடங்கள் ஆனவை.

ஒருவேளை கடந்த சில வருடங்களில் விசாரணை நீதிமன்றங்களால் தீவிரவாத வழக்கு களில் தரப்பட்டுள்ள தீர்ப்புகளை காணும் போது, (அதில் சில இந்த புத்தகத்தில் விவாதிக் கப்பட்டுள்ளது) இதே நிலை நீடிக்குமானால்

மீதமுள்ள வழக்குகளின் தலையெழுத்தை நாம் கற்பனை செய்து மட்டுமே பார்க்க முடியும்.

இவை அனைத்திலும் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை தான் முக்கிய குற்றவாளியாக தனித்து நிற்கிறது. ஆனால் கேள்வி என்னவென்றால் யார் அதற்கு கடிவாளமிடுவது? பொது மக்களை பொறுத்தவரை முஸ்லிம் தீவிர வாதத்தை குறித்து ஏற்றுக்கொள்கின்றனர். அரசியல்வாதிகளோ தங்கள் அரசியல் விளையாட்டுகளிலேயே மும்முரமாக இருக்கின்றனர். முஸ்லிம் தலைவர்களோ ஜனரஞ்சக வாதத்தில் மூழ்கி கிடக்கின்றனர். நீதிபதிகளோ ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையின் தொந்தரவுகளுக்கு பயப்படுகின்றனர். சட்டக்குழுமங்களோ சுலபமாக கிடைக்கக்கூடிய பணத்திற்கு பின்னால் ஓடிக்கொண்டிருக்கின்றனர். நல்ல சமூக ஆர்வலர்களும் மதச் சார்பற்றவர்களும் விசாரணைகளிலும் நீதிமன்ற நடவடிக்கைகளிலும் உள்ள பிரச்னைகளை புரிந்து கொள்வதில்லை. ஆக ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறைக்கும் அதன் கைக்கூலிகளுக்குமான கள நாள் இது.

இந்த புத்தகம் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை முஸ்லிம் சமூகத்திற்கு கடந்த காலங்களில் ஏற்படுத்தியுள்ள பேரழிவை பொதுமக்களுக்கும், குறிப்பாக சட்ட குழுமங்களுக்கும் கொண்டு சேர்ப்பதற்கான ஒரு நேர்மையான முயற்சி. ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையை தடுப்பதற்கான கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்த புத்தகம் பரிந்துரைக்கிறது.

இந்த புத்தகத்தின் முடிவில், இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் பொதுநல வழக்கொன்று சில சமூக ஆர்வலர்களால் பின்வரும் கோரிக்கைகளோடு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என நான் பரிந்துரைத்திருக்கிறேன்.

*1)* உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் தகுதி வாய்ந்த விசாரணை அதிகாரிகளையும், கணினி தொழில்நுட்பம் மற்றும் செல்போன் தொழில்நுட்பம் அறிந்த வல்லுனர்களையும் கொண்ட ஒரு விசாரணை கமிட்டி *2002*ம் ஆண்டிலிருந்து நடந்த தீவிரவாத வழக்குகளை மேற்கொண்டு விசாரணை செய்ய கோரியும்




*2)* குறைந்தபட்சம் அந்த கமிட்டியை கொண்டு ஏற்கனவே நடந்த விசாரணையை மீளாய்வு செய்ய உத்தரவிட கோரியும்

*3)* உண்மை குற்றவாளிகளை பாதுகாத்து அப்பாவிகளை தவறாக இவ்வழக்குகளில் சம்பந்தப்படுத்தியதற்கு காரணமான விசாரணை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தரவிட கோரியும்

*4)* தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட பிராமணிஸ்ட் இயக்கங்களை தடை செய்ய பரிசீலிக்க அரசுக்கு உத்தரவிட கோரியும் அந்த பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இதற்கு மாற்றாக, சமூக ஆர்வலர்கள், என்.ஜி.ஓ.க்கள் (அரசு சாரா நிறுவனங்கள்), நீதியாளர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு வழங்க வேண்டும் என நான் பரிந்துரைத்திருக்றேன். அதில் முதன்மை குற்றவியல் நடுவரில் இருந்து ஆரம்பித்து உச்சநீதிமன்றம் வரை நீதித்துறையின் எல்லா மட்டத்திலும் இந்த புத்தகத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடுபட்டுபோனவை, தேவையில்லாமல் சேர்க்கப்பட்டவை குறித்த சுயபரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என கோர வேண்டும். குடியரசுத் தலைவரும் பிரதமரும் வட வளையத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டும். இந்த முடிவை என்.ஜி.ஒக்களிடம் (அரசு சாரா நிறுவனங்கள்), சமூக ஆர்வலர்களிடமும், மதச்சார்பற்றவர்களிடமும் சட்ட வல்லுனர்களிடமும் விட்டுவிட்டு நான் இந்த புத்தகத்தை முடித்து இருக்கிறேன்.

**- அடுத்த இதழில் தொடரும்**

சத்தியத்துடன் யுத்தம் 2



# அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தோற்றது ஏன்?

அமெரிக்க ஏகாதிபத்திய அரசுக்கு யுத்தத்தை ஆரம்பித்திடும் வழி தெரிந்ததே தவிர ஆரம்பித்த யுத்தத்தை எப்படி முடிப்பது. அதிலிருந்து எப்படி இலகுவாக வெளியே வருவது என்பது தெரிந்திட வில்லை. அல்கொய்தா அமைப்பை அழித்திடுவது. தாலிபான்களை ஆட்சியை விட்டு அப்புறப்படுத்துவது. 9/11 தாக்குதலை போன்று மீண்டும் ஒரு தாக்குதல் நடந்து விடாமல் தடுத்திடுவது. இவைகள்தான் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்க போர் தொடுப்பதற்கு கூறப்பட்ட காரணங்கள். யுத்தம் தொடங்கிய ஆறுமாதத்தில் இந்த இலக்கில் பெரும்பகுதியை அமெரிக்கா அடைந்துவிட்டது. அல்கொய்தா, தாலிபான் அமைப்புகளின் தலைவர்கள் கொல்லப்பட்டனர். கைது செய்யப்பட்டனர் அல்லது அவர்கள் தப்பியோடி மறைந்து விட்டனர் என அறிவிக்கப்பட்டது

இதன்பின்பு வேறு இலக்கை நோக்கி அமெரிக்கா பயணிக்க ஆரம்பித்தது. போரினுடைய இலக்கை விரிவுபடுத்தியது யுத்த தந்திரத்தில் ஏற்பட்ட தோல்வி. 19 ஆண்டுகள் போர் தொடர்ந்து நடைபெற இது காரணமாக அமைந்தது. 2006லிருந்து 2009 வரை தெற்கு ஆசியாவிற்கான அமெரிக்க அரசின் உயர்மட்ட பிரதிநிதியாக செயல்பட்டவர் ரிச்சர்ட் பௌச்சர். 2015இல் அரசுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறினார் "சாத்தியமானதை செய்து முடிப்பதற்கு பதிலாக சாத்தியமில்லாததை செய்து முடிக்க நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்".

அடையக் கூடிய இலக்கை தீர்மானிப்பதில் புஷ், ஒபாமா இருவரும் தோல்வி அடைந்து விட்டனர் என்று கூறியுள்ளார் இவர்களின் ஆட்சியின் கீழ் பணிபுரிந்த ஒரு அதிகாரி.

2001, 2002 ஆரம்பத்தில் கிடைத்த ராணுவ வெற்றிக்குப்பின் ஆப்கானிஸ்தானில் குறைவான அமெரிக்கப் படைகளை காலவரையின்றி நிறுத்தி, சந்தேகப்படும் தீவிரவாதிகளை முற்றிலுமாக அழிக்க புஷ் திட்டமிட்டார்.

விரைவிலேயே ஈராக்கின் மீது படையெடுக்கும் திட்டமும் அவருக்கு இருந்தது.

நம்முடைய அசட்டு தைரியத்தால் நாம் செய்த தவறு இது என்கிறார் ஜேம்ஸ் டாபின்ஸ். புஷ், ஒபாமா ஆட்சியில் ஆப்கானிஸ்தானிற்கான சிறப்பு தூதராக பணியாற்றியவர் இவர். ஒரே நேரத்தில் ஒரே ஒரு நாட்டின் மீது மட்டுமே படை எடுக்க வேண்டும் என்கிறார் டாபின்ஸ்.

இந்த நேரத்தில்தான் 2009இல் அமெரிக்க அதிபராக ஒபாமா பதவி ஏற்றார். அப்பொழுது

ஆப்கானிஸ்தானிலிருந்து அல்கொய்தா கிட்டத் தட்ட முழுவதுமாக துடைத்தெறியப்பட்டி ருந்தது. ஆனால் தலிபான்கள் மறு அவதாரம் எடுத்திருந்தனர்.

1,50,000 அமெரிக்க படைவீரர்களையும், நேட்டோ துருப்புகளையும் ஆஃப்கானிஸ் தனிற்கு அனுப்பி அத்தோடு டன் கணக்கில் உதவிகளையும் ஆப்கான் அரசுக்கு வழங்கிட ஒப்புதல் வழங்கினார் ஒபாமா. தன்னுடைய பதவிக்காலம் முடிவடையும் தருவாயில் அனைத்து அமெரிக்க துருப்புகளும் மீண்டும் தாயகம் திரும்பி விடுவார்கள் என வாக்குறுதி அளித்தார்.

அவரின் திட்டம் எடுபடவில்லை. யுத்தம் முடிவடைவதற்கு முன்பாகவே அதற்கு செயற்கையான இறுதிநாளை நிர்ணயித்திட முயற்சித்தார்.

கடந்த 18 வருடங்களில் மட்டும் 775,000 அதிகமான அமெரிக்க படைவீரர்கள் ஆப்கானிஸ் தானில் களமிறக்கப் பட்டுள்ளனர். அதில் 2,300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20,589 பேர் காயமுற்றுள்ளனர் என்கிறது அமெரிக்க பாதுகாப்புத்துறை. இன்று 13,000 அமெரிக்கத் துருப்புகள் ஆப்கானிஸ்தானில் நிற்கின்றன. 2001-இல் இருந்ததைக் காட்டிலும் தலிபான்கள் தற்போது வலிமையுடன் இருக்கின்றனர் என்பதை ஒத்துக் கொண்டுள்ளது அமெரிக்க ராணுவம். எனினும் அமெரிக்க வரலாற்றில் நீண்டநாள் நீடித்த யுத்தத்தின் தோல்விக்கான காரணத்தை வெளிப்படையாக மதிப்பீடு செய்திடவில்லை அமெரிக்கா.

9/11 தாக்குதல் நடந்ததற்கு பின் தோல்வி களுக்கு அரசை பொறுப்பேற்க செய்யும் ஓர் ஆணையம் நியமிக்கப்படவில்லை. ஆப்கானிஸ் தானிலும் ஈராக்கிலும் நடந்திடும் போரைப் பற்றிய முழு விசாரணை இல்லை.

இந்த இடைவெளியை நிரப்புவதற்காக 2014 இல் சிகார் (Office of the Special Inspector General of Afghanistan Reconstruction-ஆப்கானிஸ்தான் புனரமைப்பிற்கான சிறப்பு பொது காவல்துறை அலுவலகம்) முயற்சி செய்தது. போரில் நடந்த தவறுகளை ஆராய்ச்சி செய்வதற்காக 11 மில்லியன் டாலர் செலவில் கற்றுக்கொண்ட பாடங்கள் (Lesson learned) என்ற செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. 600 பேரை நேரடியாக பேட்டி எடுத்த பின் ஏழு அறிக்கைகளை வெளி யிட்டது சிகார். இதில் திட்டத்தில் எங்கே மாற்றம் செய்ய வேண்டும் என பரிந்துரைத்தது.

சச்சரவுகளை தவிர்த்திட வேண்டி கடுமை யான விமர்சனங்களை அறிக்கையில் சிகார் இடம்பெறச் செய்யவில்லை. பேட்டி காணப் பட்ட வர்களில் 90 சதவீத பெயர்களை மறைத்து விட்டது. மூன்று வருட சட்ட போராட்டத்திற்கு பின் நானூறு பேருடைய பேட்டியின் குறிப்புகள், அறிக்கைகள், ஒலிப்பேழை களை பெற்றுக்கொண்டது வாஸிங்டன் போஸ்ட்.

பேட்டி காணப் பட்டவர்களில் ஒருவரான ஜெப்ரி எக்கர்ஸ் இவ்வாறு வினா எழுப்பி யுள்ளார். "நம்மை தாக்கியது அல்கொய்தா வாக இருந்திடும் பொழுது நாம் ஏன் தாலிபான்களை எதிரியாக கருதினோம்? அவர்களை தோற்கடிக்க நாம் ஏன் விரும்பினோம்?. இவர் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி. புஷ், ஒபாமா ஆட்சியில் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்தவர். 9/11 தாக்குதலுக்கும் தலிபான்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. விமானத்தை கடத்திய வர்கள் அல்லது தாக்குதலுக்கு திட்டமிட்டவர் களில் எவரும் ஆப்கனை சார்ந்தவர்கள் அல்ல.

ஆனாலும் ஒசாமா பின்லேடனை ஒப்படைக்கவில்லை. அல்கொய்தா அமைப் பிற்கு புகலிடம் அளித்தனர் என்பதனால் தலிபான்களை தீவிரவாதிகளாக அடையாளப் படுத்தியது புஷ் அரசு. இஸ்லாத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருந்ததால் தாலிபான்களை தீவிரவாதிகளாக பிரச்சாரம் செய்தல் அமெரிக் காவிற்கு எளிதான காரியமாகிவிட்டது. எனினும் ஆப்கான் மக்களிடத்தில் ஒன்றர கலந்திருந்த தலிபான்களை அடியோடு அழித்துவிட முடிய வில்லை. அழித்து விடவே நினைத் தார்களே தவிர தலிபான்களை சமாதானத்தின் பக்கம் கொண்டுவந்திட விரும்பவில்லை. ஆட்சியில் பங்கு கொடுக்க விரும்பவில்லை. அப்படி செய்திருந்தால் போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். அந்நேரத்தில் ஆட்சியில் பங்கெடுக்க பெரும்பாலான தலிபான் தளபதிகளும் விருப்பம் தெரிவித்திருந்தனர். அந்த வாய்ப்பை முன்னர் தவற விட்டனர்.

*தலிபான்களை இல்லாமல் ஆக்குவது சாத்தியமில்லை என்பதை காலம் கடந்த பின்பு உணர்ந்தனர் அமெரிக்க அதிகாரிகள். ஆப்கான் அரசாங்கத்தில் தலிபான்களும் பங்கெடுப்பதன் மூலமே போரை நிறுத்த முடியுமென்று கூறுகின்றனர் பென்டகன் அதிகாரிகள்.*

*அதன் பின்பு, 2018 இல் அமெரிக்காவும் தலிபான்களும் நேரடியான உயர்மட்ட சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாரானது.*

*தலிபான் சார்பாக சமரசப் பேச்சுவார்த்தைக்கு வந்தவர்களில் ஐந்துபேர் இதற்கு முன்பு அமெரிக்காவால் போர்க் கைதிகளாக கைது செய்யப்பட்டு குவாண்டனாமோ சிறையில் 10 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்கள். அமெரிக்கா சார்பாக பேச வந்தவர்களுக்கு சல்மே கலில் சாத் தலைமை தாங்கினார். ஆப்கானிஸ்தானிற்கான அமெரிக்க தூதராக 2003இல் இருந்து 2005 வரை பணியாற்றியவர் இவர். அதன்பின்பு ஈராக் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதராக இவர் பணியாற்றியுள்ளார்.*




*2016 டிசம்பரில் அரசுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படி ஒத்துக்கொண்டார். "தலிபான்களுடன் பேச மறுத்ததன் மூலம் போரை முடிவுக்கு கொண்டு வரும் வாய்ப்பை ஆரம்பத்தில் புஷ் அரசு தவறவிட்டது".*

*ஆப்கனில் துருப்புகளை குறைவாக வைத்திருந்து அதேநேரம் ஈராக்கிலும் துருப்புகளை அனுப்பி இரு முனைகளிலும் வெற்றிக்கனியை சுவைத்திட எண்ணினார் புஷ்.*

*2003 மே 1 அன்று வானூர்திகளை தாங்கி நிற்கும் கப்பலில்* Mission Accomplished - *இலக்கு அடையப் பட்டுவிட்டது என்ற பேனரை தொங்கவிட்டு அதன் முன்பு நின்று ஈராக்கில் நடந்த சண்டை முடிவுக்கு வருவதாக அறிவித்தார் புஷ்.*

*அதே நாளில் ரம்ஸ்பில்ட் காபூலுக்கு விஜயம் செய்து ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சண்டை முடிவுக்கு வருவதாக அறிவித்தார்.*

*இரண்டு அறிவிப்புகளுமே பின்னர் அவர்களை நொந்து கொள்ளும்படி செய்தது. ஈராக்கில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்தது. ஈராக்கில் அமெரிக்கா கவனம் செலுத்தி கொண்டிருந்த வேளையில் தலிபான்கள் தங்களை மீண்டும் வலுப்படுத்திக் கொண்டனர்.*

*பல ஆண்டுகளாக யுத்தத்தையே சந்தித்துக் கொண்டிருந்த போதிலும், தொடர்ந்து சண்டையிடுவதற்கு எது நம் எதிரிகளை ஆர்வமூட்டு கின்றது என்பது இன்றுவரை இதுவரை அமெரிக்காவிற்கு புரியவில்லையாம்.*

*ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன்களின் நிலைகுலையாமை அமெரிக்கர்களுக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. வீழ்த்த முடியாத கொள்கையை பின்பற்றுபவர்கள் அல்லவா அவர்கள். பின் எப்படி வீழ்ந்து போவார்கள் என நினைத்தார்கள்?. எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும் இஸ்லாம் என்ற கொள்கைக்கு முன் சரணடைவதே அதற்கு பலன் தரும். அதை அமெரிக்கா உணர்ந்துள்ளது. உணராதவர்கள் அமெரிக்காவைப் பார்த்து உணர்ந்து கொள்ளட்டும்.*

*ஆதாரம் :* Washington Post

- *அபூஹாசின்*

டாக்டர் புரூஸ் எய்ல்வாட்





# கொரோனா தாக்குதலை சீனா எப்படி சமாளித்தது?

நியூயார்க் டைம்ஸ் இதழில் வெளிவந்துள்ள இந்த நேர்காணல் சீனா எவ்வாறு இந்த கொடிய நோயை இத்தனை விரைவாகச் சமாளித்தது என்பதைச் சொல்கிறது. இது பிற முதலாளிய நாடுகளில் எந்த அளவு சாத்தியம் என்பது சிந்திக்கத் தக்கது. பெரிய அளவு மருத்துவம் தனியார் மயப்படுத்தப்பட்ட இந்தியாவில் இது சாத்தியமா என்கிற கேள்விக்குறி நம்முன் பெரிதாக எழுகிறது.

டாக்டர் புரூஸ் எய்ல்வாட் உலக நல நிறுவனத்தின் சார்பாக சீனாவுக்கு கொரானா தாக்குதலை அந்நாடு எவ்வாறு சமாளிக்கிறது என்பதை நேரில் கண்டறிய அனுப்பபட்ட குழுவின் தலைவர். இரண்டு வார காலங்கள் அங்கு தன் குழுவுடன் தங்கி சீனா எவ்வாறு வியக்கத்தக்க முறையில் அந்தக் கொடுந்த் தாக்குதலைச் சமாளிக்கிறது என்பதை நியூயார்க் டைம்ஸ் இதழுக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் சொல்லியுள்ளார்.

சீன அரசின் உடனடித் தீவிர நடவடிக்கை களின் ஊடாக பிப்ரவரி தொடக்கத்தில் தினம்தோறும் 3,000 கொரோனா நோயாளிகள் வருகை என்பது இரண்டே வாரங்களில் வெறும் 200 என்பதாகக் குறைக்கப்பட்டதை அவர் வியந்து இந்த நேர்காணலில் பேசுவது நம் கவனத்திற்குரியது. நோய்த்தாக்குதல் எண்ணிக்கை இப்படிக் குறைந்தவுடன் சீனாவின் தேங்கிக் கிடந்த பொருளாதாரம் உயிர் பெறும் போது மீண்டும் இந்தத் தாக்குதலால் பாதிக் கப்படுபவர்களின் எண்ணிக்கை மிகுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இப்போதைக்கு அதிக எண்ணிக்கையில் உலகின் வேறுபகுதிகளில் தான் மக்கள் இந்நோய்த் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

இன்றைய தாக்குதல் உலகளாவிய தாக்குதல் அல்ல. மாறாக உலக அளவில் ஆங்காங்கு நடக்கும் தாக்குதல் என்பதால் நாம் இதனை ஓரளவு வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்கிறார் எய்ல்வார்ட்

சீனாவின் இந்த அனுபவம் பிற நாடுகளிலும் பயன்படுத்தப்படலாம். ஆனால் அது அதி வேகம், பொருட் செலவு, அரசியல் துணிவு, கற்பனைத் திறன் ஆகியவற்றைக் கோரும் ஒரு நடவடிக்கையாக அமையும் என்கிறார் நியூயார்க் டைம்ஸ் சார்பாக இந்த நேர்காணலைச் செய்தவர். போலியோ, எபோலா முதலான உலக அளவிலான நலம் சார்ந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதில் அனுபவம் மிக்கவர் டாக்டர் எய்ல்வார்ட் என்பது குறிப்பிடத் தக்கது.

நோய்க்குறிகளைத் தொடக்கத்தில் வெளிப் படுத்தாத ஒருவகையான நோய் இது. சோதிக்கும் போது பலருக்கு இந்தத் தாக்குதலுள்ளது தெரியாது. ஓரிரண்டு நாட்களில் அது வெளிப் படத் தொடங்கும். அதேபோல நாட்டில் ஒரு மிகப் பெரிய நோய்த் தாக்குதல் ஏற்பட்டுள்ளது என்பதும் முதலில் தெரியாது. பனிமலை ஒன்றின்மேல் நுனியைத்தான் நாம் பார்த்துக் கொண்டுள்ளோம் என்பது முதலில் தெரியாது.

பாதிக்கப்படும் பகுதியில் உள்ள எல்லோரும் முதலில் சில அடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கைகழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், வாய்க்கு மூடி அணிதல், கைகுலுக்காது இருத்தல் முதலியன. எல்லா இடங்களிலும் மக்களை நிறுத்தி காய்ச்சல் உள்ளதா எனப் பரிசோதித்தல். அவசியம்.

இவை அனைத்தும் முறையாக சீனாவில் மேற்கொள்ளப்பட்டன.

கொத்துக் கொத்தாக நோய்த்தாக்குதல்கள் இருப்பது ஒரு பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட உடன் பள்ளிகள், தியேட்டர்கள், ஓட்டல்கள் மூடப்பட்டன வுஹான் மற்றும் அதற்கு அருகில் உள்ள நகரங்கள்தான் முழுமையாக 'லாக் டவுன்' செய்யப்பட்டன.

மொத்த மருத்துவ அமைப்பில் 50 சதத்தை சீன அர்சு 'ஆன்லைன்' தொடர்புக்கு மாற்றியது. மக்கள் நேரடியாக வந்து நோய்ப் பரப்பலைச் செய்வது இவ்வாறு தடுக்கப்பட்டது. உங்களுக்கு இன்சுலின் அல்லது இதய நோய் மருந்துகள் என எது தேவையோ அது அவர்கள் இருக்கும் இடத்திற்குக் கொண்டு சேர்க்கப்பட்டன.

ஒருவருக்குக் கொரோனா தாக்குதல் இருப்பதாக அவர் கருதினாரானால் அவர் காய்ச்சலுக்கான கிளினிக்கிற்கு அனுப்பட்டார். காய்ச்சல் அளவு, பிற நோய்க்குறிகள் ஆகிய வற்றை அவர்கள் சோதிப்பார்கள். உங்கள் மருத்துவ வரலாற்றைக் கேட்பார்கள். நீங்கள் சமீபத்தில் எங்கேனும் பயணம் செய்தீர்களா, வைரஸ் தாக்குதல் உள்ள யாருடனாவது உங் களுக்கு ஏதும் தொடர்பு இருந்ததா என்றெல் லாம் கேட்பார்கள். பிறகு முழுமையாக உங்கள் உடலை 'ஸ்கான்' செய்து பார்ப்பார்கள், ஒவ்வொரு ஸ்கான் எந்திரமும் நாளொன்றுக்கு 200 ஸ்கான்களைச் செய்தன. ஒரு ஸ்கானுக்கு ஐந்து அல்லது பத்து நிமிடங்கள்தான்!. சில நேரங்களில் பகுதி ஸ்கான்கள் மட்டும் செய்யப் பட்டன. மேலைத் தேசத்தில் உள்ள மருத்துவ மனைகளில் ஒரு ஸ்கான் எந்திரம் ஒரு மணி நேரத்தில் ஒன்று அல்லது இரு ஸ்கான்களைத் தான் செய்ய இயலும். ஸ்கான்தான் செய்தாக வேண்டும். எக்ஸ்ரேக்கள் போதாது. பாதிப்புகள் அதில் தெரியாது. நாம் தேடும் குறிகள் உள்ளனவா இல்லையா என்பதை சிடி ஸ்கான்கள்தான் தெளிவாகக் காட்டும்.

நீங்கள் நோய்த் தாக்குதலுக்கு உட்பட்டதாக ஐயம் உண்டானால். உங்கள் உடலிலிருந்து சோதனைக்குத் தேவையானவை சுரண்டி எடுக்கப் படும். சளி (ஜலதோஷம்), ஃப்ளு, மூக்குச்சளி ஆகியவற்றுடன் மக்கள் வருவார்கள். ஆனால் அவை கோவிட் அல்ல. உடல் குறிகளை வைத்துப் பார்த்தால் 90% காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள்; சளி இல்லாத வரட்டு இருமல் உடையவர்களில் 70%, மூச்சுத் திணரல் அல்லது ஏதோ ஒரு சோர்வு என வந்தவர்களில் 30%, மூக்கு ஒழுகலுடன் வந்தவர்களில் வெறும் 4% மக்கள்தான் கோவிட் பாதிப்பு உடையவர்களாக இருந்தனர்.

சுரண்டி எடுக்கப்பட்டது சோதனை செய்து ரிசல்ட் நான்கு மணி நேரத்தில் தெரிவிக்கப் பட்டது. சமீப காலம்வரை அமெரிக்காவில் கூட அது அட்லான்டா வுக்கு அனுப்பித்தான் சோதனை முடிவுகள் அறியப்பட்டு வந்தன என்பது நினைவுக்குரியது.

அதுவரை மக்கள் வீட்டுக்கு அனுப்பட வில்லை. ரிசல்ட் வரும் வரை அவர்கள் அங்கு தான் காத்திருக்க வேண்டும். அலைந்து திரிந்து அவர்கள் நோயைப் பிறருக்குக் கடத்துவது

இவ்வாறு தடுக்கப்பட்டது.

சோதனை முடிவு 'பாசிட்டிவ்' ஆக இருந்தால் அவர்கள் தனிமைப் படுத்தப்படுவார்கள். நோய் பாதிப்பிலிருந்து மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதற்குத் தொடக்கத்தில் 15 நாட்கள் பிடித்தன. குறிகள் கண்டுபிடிக்கப் பட்டு இரண்டே நாட்களில் அவர்கள் தனிமைப் படுத்தப்படுவது எனும் நிலை விரைவில் ஏற்படுத்தப்பட்டது. இது மிக முக்கியமான ஒன்று. நோய்த்தாக்குதல் எளிமையாக ஏற்படக் கூடியவர்களுக்கு நோய் கடத்தப்படுவது இவ்வாறு தடுக்கப்பட்டது.

"சீனாவுக்கு இணையான மருத்துவம் அமெரிக்கா, சுவிட்சர்லாந்த், ஜெர்மனி முதலான நாடுகளில் இல்லை!

இந்த நாடுகள் சீனாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்!" - டாக்டர் எய்ல்வர்ட்

வைரஸ் தாக்குதல் உறுதியானால் அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர். ஆரம்பத்தில் நோய்த் தொடக்கத்திற்கும் அவர்கள மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மருத்துவம் தொடங்கு வதற்கும் 15 நாட்கள் இடைவெளி இருந்தது. விரைவில் அது வெறும் இரண்டு நாட்களாகக் குறைக்கப்பட்டது. மற்றவர்களுக்கு நோய் பரவுதல் இதன் மூலம் பெரிய அளவில் தடுக்கப்பட்டது.

தனிமைப்படுத்தப்படல் என்பதற்கும் மருத்துவமனை சிகிச்சை என்பதற்கும் என்ன வேறுபாடு? நோய்க்குறிகள் கடுமையாக இல்லாத நோயாளிகள் தனிமைப்படுத்தப்படும் மையங்களுக்கு (ISOLATION CENTRES) அனுப்பப் பட்டனர். 'ஜிம்நாசியம்கள்', 'ஸ்டேடியம்கள்' முதலியன 1000 படுக்கைகள் வரை அமைக் கப்பட்டு அங்கே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. வைரஸ் தாக்குதல் அதிகமாக இருக்கும்போது அவர்கள் நேரடியாக மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார்கள். 65 வயதுக்கு மேற்பட்ட வர்களும் அவ்வாறே நேரடியாக மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர்.

தாக்குதல் மெலிதானது (Mild) என்றால் சோதனையில் நோய்த் தொற்று தெரியும். காய்ச்சல், இருமல் இருக்கும். நிமோனியாவாகக் கூட அது இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு ஆக்சிஜன் புகட்டுவது தேவைப்படாது. கடுமை யான தாக்குதல் (Severe) என்றால் மூச்சு இழுத்து விடும் வீதம் மிக அதிகமாக இருக்கும். ஆக்சிஜன் 'சேசுரேஷன்' அளவு குறையும். அவர்களுக்கு உடன் ஆக்சிஜன் அளிக்கப்பட வேண்டும் அல்லது வென்டிலேடர் பொருத்தப் பட வேண்டும்.

ஆபத்தான நிலை (Critical) என்றால் சுவாசம் சாத்தியமற்றுப் போகும் நிலை மற்றும் பல உறுப்புக்கள் செயலிழக்கும் (Respiratory failure or multi-organ failure) நிலை. இப்படியானவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டோரும் நேரடியாக மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

மருத்துவமனைகளும் பலதரமாகப் பிரிக்கப் பட்டன. தலைசிறந்த மருத்துவமனைகள் அனைத்தும் 'கோவிட் 19' தாக்குதல் சிக்கிச்சைக்கு மட்டும் என ஒதுக்கப்பட்டன. உடனடி அறுவை சிகிச்சை தேவையில்லாதவர்களுக்கு அறுவை சிகிச்சைகள் ஒத்தி வைக்கப்பட்டன. மற்ற மருத்துவ மனைகள் வழக்கமான சிகிச்சைகளுக்கு ஒதுக்கப்பட்டன. பெண்கள்





பிரசவத்துக்கு வருவார்கள், வேறு நோய்களால் நெருக்கடியான நிலையில் உள்ளவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த மருத்துவமனைகளில் தடங்கலின்று மருத்துவ சேவை தொடர்ந்தது.

புதிய மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன. ஏற்கனவே இருந்த மருத்துவ மனைகள் கோவிட் தாக்குதல் சிகிச்சைக்காகச் சீர்திருத்தப்பட்டன. தனிமைப்படுத்தப்படுவதற்கான போதிய வசதிகள் இல்லாதபோது நீளமான சிகிச்சைக் கூடங்கள் சுவர்கள் எழுப்பிப் பிரிக்கப்பட்டு சன்னல்கள் பொருத்தப்பட்டன. இப்படியாக "அழுக்கான" மற்றும் "தூய" பகுதிகள் உருவாக் கப்பட்டன. மருத்துவர்கள் உள்ளே நுழைந் தவுடன் உடலை மறைக்கும் 'கவுனை" அணிந்து நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கலாம். பின்னர் மாற்றுவழி மூலமாக வெளியே வந்து போட்டிருந்த 'கவுனை" களைந்துவிட்டுச் செல்லலாம்.

எபோலா வைரஸ் சிகிச்சை போலத்தான் இதுவும். ஆனால் உடல் திரவக் கசிவுகள் இல்லை என்பதால் அந்த அளவு கிருமி நீக்கம் இங்கு தேவையில்லை.

தீவிர சிகிச்சை எந்த அளவிற்குத் தரமாக இருந்தது எனும் கேள்விக்கு டாக்டர் எய்ல்வர்ட் சொல்வது:

"மக்களின் உயிரைக் காப்பது என்பதில் சீனா மிகவும் அக்கறையுள்ள அருமையான நாடு. நமது ஊர்களில், சுவிச்சர்லாந்த் போன்ற நாடுகளில் உள்ள மருத்துவ மனைகளைக் காட்டிலும் சீனாவில் மருத்துவ மனைகள் சிறப்பாக உள்ளன. எத்தனை 'வென்டிலேட்டர்கள்' இங்கே உள்ளன என நாம் கேட்டால் "50" என்பார்கள். அம்மாடி! வியப்போம். எத்தனை ECMO (extracorporeal membrane oxygenation machines) உங்களிடம் உள்ளன என்றால் "ஐந்து" என்பார்கள். எங்கள் குழுவில் ஒருவர் புகழ்பெற்ற 'ராபர்ட் கோச்' நிறுவனத்தில் இருந்து வந்தவர். "ஐந்தா? ஜெர்மனியில் மூன்று இருந்தாலே அதிகம்!" என்றார் அவர்.

சரி, இந்த சிகிச்சைக்கெல்லாம் யார் பணம் செலுத்தினார்கள்? அரசு இது குறித்துத் தெளிவாக இருந்தது. சோதனைகள் இலவசம். கோவிட் 19 என்பது உறுதியானால் உங்கள் காப்பீட்டுத் திட்டம் முடியும்போது அரசு எல்லாப் பொறுப்பையும் உடன் ஏற்றுக் கொள்ளும்.

ஆனால் அமெரிக்காவில் இந்த காப்பீடுத் தொகை பெறுவது முதலான பிரச்சினைகளில் சிகிச்சை தாமதமாகும். மக்களுக்குக் கவலை ஏற்படும். "நான் மருத்துவரைச் சென்று பார்த்தால் அதற்கு 100 டாலர் ஆகும். நான் I.C.U வுக்கு அனுப்பப்பட்டால் ஐயோ அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?" - இந்த சிந்தனையே ஒருவரைக் கொன்றுவிடும். அழிவிற்கு இட்டுச் சென்றுவிடும். 'முழுமையான நலப் பாதுகாப்பு' என இவர்கள் முழக்குவதும் உயிர் காப்பும் மோதிக்கொள்ளும் புள்ளி இது. அமெரிக்கா இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும்." - என்கிறார் டாக்டர் எய்ல்வர்ட்.

மருத்துவத் துறை அல்லாதவர்கள் இதை எப்படி எதிர்கொண்டனர் என்கிற கேள்விக்கு டாக்டர் எய்ல்வார்ட் சொல்வது:

தேசிய அளவில் மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணை நின்றனர். "பாதிக்கப்பட்ட வுகான் மக்களுக்கு நாம் உதவ வேண்டும்" என்கிற எண்ணம்தான் அவர்களிடம் வெளிப்பட்டது, ,"அட இந்த வூகான் நம்மை இந்த ஆபத்தில் சிக்க வைத்ததே" என அவர்கள் யாரும் நினைக்க வில்லை, பிறமாநிலங்களிலிருந்து வூகானுக்கு 40,000 வாலண்டியர்கள் வந்தனர். இவர்களில் பலர் பணி நிமித்தமாக அல்லாமல் தொண்டுள் ளத்துடன் பங்கேற்றனர்.

ஒரு நள்ளிரவில் வூகானை எங்கள் ரயில் அடைந்தது. நாங்கள் இறங்கத் தயாரானோம். இன்னொரு குழுவும் அதில் வந்திருந்தது. அது உதவி புரிய வந்த ஒரு மருத்துவக் குழுவும்.




## வூகானில் முடக்கப் பட்டிருந்த மக்களுக்கு எப்படி உணவு கிடைத்தது?

15 மில்லியன் - ஒன்றரைகோடி மக்கள். அவர்கள் அனைவரும் 'ஆன் லைனில்' உணவு ஆர்டர் பண்ணினார்கள். அத்தனை பேர்களுக்கும் சரியாக உணவு கொண்டுவந்து சேர்க்கப்பட்டது.

"சில நேரங்களில் வரும் உணவில் ஏதாவது ஒரு 'ஐட்டம்' குறையும். ஆனால் எனக்கொன்றும் எடை குறையவில்லை." - என்றார் ஒரு பெண்.

அரசு ஊழியர்கள் அவர்களது பணி தவிர மற்ற வேலைகளையும் செய்தனர். ஒரு நெடுஞ் சாலை ஊழியர் காய்ச்சல் இருக்கிறதா எனச் சோதிப்பார். அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு கொண்டு வந்து தருவார். ஒரு மருத்துவமனையில் அந்தப் பெண் எவ்வாறு பாதுகாப்பு 'கவுனை' அணிந்துகொள்வது என மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். "நீங்கள் என்ன தொற்றுத் தடுப்பு குறித்துப் படித்தவரா?" எனக் கேட்டேன். "இல்லை. நான் இங்கே 'ரிசப்ஷனிஸ்ட்'. இதை நானாகக் கற்றுக் கொண்டேன்" என்றார்,

தரவுகளைக் கையாள்வது பெரிய பிரச்சினை. 70,000 நோயாளிகள். பள்ளிக்கூடங்கள் மூடப் பட்டன என்றால் பள்ளிக் கட்டிடங்கள் மூடப் பட்டன என்பதுதான். மற்றபடி மாணவர்களுக்கு ஆன்லைனில் பாடங்கள் நடந்தன.

சிசுவான் எனும் பகுதிக்குப் போனோம். மிகப் பெரிய பரப்பு. கிராமப்புறம். ஆனால் 5G தொடர்புகள் இருந்தன. நாங்கள் தலை நகரில் இருந்தோம். ஒரு அவசர உதவி மையம் அது. மிகப் பெரிய ஒளித் திரை அங்கு அமைக் கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்கள் குறித்த ஏதோ ஒன்றைப் புரிந்து கொள்ளும் பிரச்சினை அவர்களுக்கு. தலைநகர அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டும் பிரச்சினை தீரவில்லை. எனவே அவர்கள் அந்தக் குழுவின் தலைமைக்கு தொலை பேசினர், அவர் 500 கி.மீ தொலைவில் இருந்தார். தொலைபேசியில் வீடியோ காலில் பேசினார். அவர்தான் ஆளுநர்.

Weibo, Tencent, WeChat முதலான செயலிகளின் ஊடாக துல்லியமான தகவல்கள் அவ்வப்போது கேட்பவர்களுக்குத் தரப்பட்டன. கூடவந்த நமது ஊடகவியலாளர்கள், "இதெல்லாம் நம்ம நாட்டில் நடக்காது" என அவ்வப்போது சொல்லிக் கொண்டிருந்தனர்.

சில பத்திரிகையாளர்கள், "இது ஒரு சர்வாதி கார நாடு. மக்கள் பயந்து கொண்டு வேலை செய்கிறார்கள்". அபத்தம். அமைப்புக்கு அப்பாற் பட்ட பலரிடமும் பேசினேன். ஓட்டல்கள், ரயில்கள் இங்கெல்லாம் சந்திப்பவர்களிடம் பேசினேன். ஒரு போர்க்கால நடவடிக்கையைப் போல செயல்பட அவர்கள் திரண்டிருந்தனர். தாங்கள் முன்னணியாளர்கள். மக்களைப் பாது காக்கும் பொறுப்புள்ளவர்கள் என்கிற உணர் வுடன் அவர்கள் செயல்பட்டனர். சீனர்களை மட்டும் பாதுகாப்பது என்பதல்ல. உலக மக்கள் அனைவரையும் பாதுகாக்கும் கடப்பாட்டுடன் அவர்கள் இருந்தனர். வைரஸ் அச்சம்தான் அவர்களின் தூண்டு சக்தியாக இருந்தது.

படிப்படியாக ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு மாதிரி அவர்கள் மீண்டும் வாழ்வைத் தொடங்கிக் கொண்டுள்ளார்கள். சில இடங் களில் பள்ளிகள் இன்னும் மூடிக் கிடக்கின்றன. சில இடங்களில் அத்தியாவசியப் பொருள்கள்

மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. செங்டுவில் 5 மில்லியன் புலம் பெயர் தொழிலாளிகள் உள்ளனர். வேலைக்கு வருபவர்கள் ஒரு மருத்துவரிடம். 'ரிஸ்க்' இல்லை என ஒரு சான்றிதழ் வாங்க வேண்டும். அது 3 நாட்களுக்குச் செல்லும். பின் ஒரு ரயிலைப் பிடித்து நீங்கள் வேலை செய்யும் இடத்திற்குப் போக வேண்டும். அங்கே இரண்டுவாரம் நீங்களாக குவாரண்டைனில் இருக்க வேண்டும். உங்கள் உடல் வெப்பம் முதலியன ஃபோன் மூலமே நேரடியாகவோ தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

பாரம்பரிய மருந்துகளும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவை சில எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில கலவைகள்தான். காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் என அவர்கள் நினைக்கிறார்கள். அவை வைரல் எதிர்ப்பு மருந்துகள் அல்ல. ஆனால் அது அவர்களுக்குப் பழக்கமான மருந்து. அவர்கள் அதன் மூலம் நன்றாக இருப்பதாக உணர்கிறார்கள்.

கைகளைக் கிருமிநீக்கம் செய்யப்பயன்படுபவை குவிந்து கிடக்கின்றன. முகமூடியை நாமும் அணிந்துகொள்ள வேண்டும். அது அவர்கள் அரசின் கொள்கை. நாங்கள் நோயாளிகளைச் சந்திப்பதில்லை. மருத்துவமனைகளின் ஆபத்தான பகுதிகளுக்கும் (hospital dirty zones) செல்வதில்லை.

சமூக ரீதியாகவும் நாம் அவர்களுக்குத் தொலைவாக உள்ளவர்கள். பேருந்துகளில் வரிசைக்கு ஒருவர் என அமர்ந்து கொள்கிறோம். ஓட்டல் அறைகளுக்குச் சாப்பாடு வந்துவிடுகிறது. இல்லாவிட்டால் ஒரு மேசையில் ஒருவர் மட்டும் அமர்ந்து சாப்பிட வேண்டும். கருத்தரங்க அறைகளிலும் அப்படித்தான். ஒரு மேசையில் ஒருவர். மைக் மூலம் பேசிக் கொள்ளலாம். அல்லது குரலை உயர்த்தி சத்தம் போட்டுப் பேசலாம்.

அதனால்தான் நான் கொஞ்சம் முரட்டுத்தனமாக இருக்கிறேன். ஆனால் என்னை சோதித்துக் கொண்டேன். எனக்கு கோவிட் இல்லை. சோதித்துப் பார்த்துவிட்டேன்.

- (From Marx Facebook post)


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா

டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது

உரிமை: S.B.S. பஷீர்

- பாஸ்போர்ட் ஆன்லைன்
- விமான டிக்கெட்
- விசா சர்வீஸ்
- ECNR & PCC
- எம்பஸி அட்டெஸ்டட்
- GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:

12, களைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# நீதிபதி பா.குலாம் முஹம்மத் அவர்களின் துணைவியார் ஆயிஷா அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் அழகியப் பணியை அதாவது, முஸ்லிம் களின் அடிப்படைக் கடமையை சமுதாயத்தின் சார்பில் நாம் கடந்த (40) நாற்பது ஆண்டுகளாக இடைவிடாமல் நிறைவேற்றி வருகின்றோம். அல்லாஹ் அவனுக்கே அனைத்துப் புகழும்.

நம்மைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் ஓர் உயர்ந்த உன்னதமான லட்சியத்திற்காகப் படைக்கப்பட்டவர்கள். அந்த லட்சியம் "இஸ்லாம்" என்ற அல்லாஹ்வின் வாழ்க்கை வழிகாட்டுதல்களை அனைவருக்கும் விளக்கிச் சொல்லி, அவர்களையும் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின் ஓர் இறைத்தூதர் இல்லை.

திருக்குர்ஆனுக்குப் பின் ஓர் இறைவேதம் இல்லை. இவையெல்லாம் மறுக்க இயலாத உண்மைகள். இதனால் முஸ்லிம்கள். இனி அல்லாஹ் அருளிய வழிகாட்டுதல்களை தம்மோடு வாழும் சகோதர சமுதாயத்தவருக்கு எடுத்துச் சொல்லிட வேண்டும்.

*(அல்குர்ஆன் - 2:143)*

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்திடும் வகையில் பல அழைக்கும் முகாம்களைத் தமிழகம் எங்கும் நடத்தி வருகின்றோம்.

இந்த வகையில் நமது சீர்த்திருத்த நகரமாக சீர்காழியில் 2010-ஆம் ஆண்டு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

அதில் பிரபல்யங்கள் கலந்துகொண்டார்கள். அவர்களுள் ஒருவர்தான் நீதிபதி பா.கோபால கிருஷ்ணன் அவர்கள். அவர்களும் அந்த நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியை சீர்காழியைச் சார்ந்த நண்பர்கள் வட்டத்தினர் ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்புச் சகோதரர் தாஹா அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களில், ஓய்வு பெற்ற நீதிபதி பா.கோபாலகிருஷ்ணன் அவர்கள் அடிக்கடி நம்மோடு தொடர்பு கெண்டார்கள். நாமும் அவருக்கு விளக்கங் களைச் சொல்லி வந்தோம்.

சீர்காழி பக்கம் போகும் போதெல்லாம் இஸ்லாத்தின் கொள்கைகளை அவருக்கு விளக்கிச் சொல்லி வந்தோம்.

ஒருநாள், கடந்த 40 ஆண்டுகளாக நம்மோடு களப்பணி ஆற்றிவரும் தம்பி அப்துல் ரவூஃப் அவர்கள், தொலைபேசியில் அழைத்து நீதிபதி அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள தயாராகிவிட்டார்கள். நீங்கள் வந்து கலிமா சொல்லித் தந்திட வேண்டுமாம் என்றார்.

நான் அப்போது டெல்லியில்- ஜாதி ஒழிந்தது நூலின் ஆங்கில ஆக்கத்தை வெளியிடச் சென்றிருந்தேன். அதனால் சீர்காழி வந்திடக் காலதாமதமாகும், நீங்கள் நீதிபதி அவர்களுக்கு உடனேயே கலிமாச் சொல்லிக் கொடுத்து விடுங்கள் என்றேன்.

ஏனெனில் இதுபோன்ற விவகாரங்களில் கால தாமதம் ஆகிவிடக்கூடாது என்பது பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்...

கலிமா சொல்லிக் கொடுத்தார்கள், அத்தோடு இன்னொரு மகிழ்ச்சியான செய்தி யையும் சொன்னார்கள். அது, நீதிபதி அவர்கள், குலாம் முஹம்மது என உங்கள் பெயரையே வைத்துக் கொண்டார்கள் என்பதே!



இயலவில்லை. காரணம், நான் காலமெல்லாம் இறைவனை இல்லை என்று சொல்லியே வாழ்ந்தவன். அதனால் இறைவன் இருக்கின்றான் என்று நம்பிட இயலவில்லை. ஆனால் வைகறை வெளிச்சம் ஆசிரியர், இறைவன் இருக்கின்றான் அவன் ஒருவன்தான் என விளக்கிச் சொல்லியது எனக்கு எற்புடையதாக இருந்தது. அதனால்தான் இஸ்லாத்தை ஏற்றேன் என்றார்.



நீதிபதி.குலாம் முஹம்மது அவர்களின் மனைவி அடக்கம் செய்யப்பட ஜனாஷா தொழுக்காக நின்றபோது

அவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு மிகவும் உந்துதலாக இருந்தது அவருடைய துணைவியார் ஆயிஷா அவர்கள் பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றியக் காலந்தொட்டே முஸ்லிம்களோடு தொடர்புடையவராக இருந்தார். அன்றைய நாட்களில் இஸ்லாத்தை ஏற்பதைப் பற்றிச் சிந்தித்திருக்கின்றார்.

'நான் முஸ்லிமாக அல்லாமல் மரணிக்க மாட்டேன்' எனத் தன் தோழியர்களிடம் அடிக்கடி கூறி இருக்கின்றார். இதனை அவரை அழைத்துக் கொண்ட நாளில் அனைவரும் நினைவு கூர்ந்தனர். கணவர், நீதிபதி அவர்களுடன் அவரும் இஸ்லாத்தை ஏற்றார் என்பது மட்டுமல்ல, இஸ்லாத்தைக் கற்றிட சிறப்பான முயற்சிகளையும் மேற்கொண்டார். தனது உறவினர்களுக்கும் இஸ்லாத்தை விளக்கிச் சொல்லி தன் குடும்பத்தில் இஸ்லாத்திற்கு சாதகமானதொரு சூழலை ஏற்படுத்தினார்.

காரணம் கேட்டேன், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான கடைசி உந்துதல், அவரிடமிருந்துதான் வந்தது என்றாராம். அல்ஹம்து லில்லாஹ்.

ஹிதாயத்-ஐ நேர் வழியை வழங்குபவன் அல்லாஹ் ஒருவனே அவனுக்கே எல்லாப் புகழும்.

பின்னர், நிடூர்-ஆன்லைன் என்ற ஊடகத்திற்குப் பேட்டிக் கொடுக்கும்போது, எனக்கு இஸ்லாத்தின் எல்லா பகுதிகளும் நன்றாகப் பிடித்தது. ஆனால், இறைவன் இருக்கின்றான் என்பதை என்னால் நம்பிட

**குடும்ப நிகழ்ச்சிகளில் இஸ்லாம்**

தனது குடும்பத்தில் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிட குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்தையும் பயன்படுத்தினார்.

60-ஆம் வருட திருமண நிகழ்ச்சி ஒன்றை தனது வீட்டில் ஒருபெரும் நிகழ்ச்சியாக, நீதிபதி பா.கோபாலகிருஷ்ணன் அவர்களும், அவருடைய துணைவியார் ரஜ்ஜிதம் அவர்களும் மேற்கொண்டார்கள்.

அப்போது நமது வைகறை வெளிச்சம், மாதஇதழில் ஓர் அட்டைப் படக் கட்டுரையை வெளியிட்டிருந்தோம். அது, பா.ரஜ்ஜிதம் அவர்களின் உரையும், டி.எம்.உமர் ஃபாருக் அவர்களின் கவலையும்,

அதில் டி.எம்.உமர் ஃபாருக்-ஐ போலவே, பா.ரஜ்ஜிதம் அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதே, இருக்கும் ஒரே வழி என்பதைக் கோடிற்றுக் காட்டியிருந்தார்கள். இந்த அட்டைப்படக் கட்டுரையில் கவரப்பட்ட நீதிபதியும் அவருடைய துணைவியார் அவர்களும் 100 வைகறை வெளிச்சம் பிரதிகளை வாங்கித் தங்கள் உறவினர்களிடம் தந்து இஸ்லாத்தை அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

தான் தீராத நோயால் பீடிக்கப்பட்டிருந்த நிலையிலும் அன்னை ஆயிஷா அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதிலும், அல்லாஹ்விடம் துஆ செய்வதிலும் உறுதியாக இருந்தார்கள். நாமும் சந்திக்கும் போதெல்லாம் எனக்காக துஆ செய்யுங்கள் என்றே சொல்வார்கள்.

கணவர் நீதிபதி பா. குலாம் முஹம்மத் அவர்களும் துணைவியர் ஆயிஷா அவர்களும் வைகறை வெளிச்சம் பத்திரிகையின் நீண்ட நாள் வாசகர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னை ஆயிஷா அவர்களை அல்லாஹ் 5-02-2020 அன்று அழைத்துக் கொண்டான். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர்களின் நல்லடக்கம் சீர்காழி மார்கப் மஸ்ஜித் கபருஸ்தானில் நடைபெற்றது. இந்த அடக்க நிகழ்ச்சியில் முஸ்லிம்களும் - சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

சீர்காழியிலிருந்து நமது நிருபர்.





# வீடு விற்பனைக்கு

**கோட்டூர் மஸ்ஜிதே ஹபீப் அருகில்**
**மேற்கு நோக்கிய மனையின்**
**பரப்பளவு - 1350 சதுரடி**

**கட்டுமான விபரம்**

**தரைத் தளம் : 1034** ச.அடி
**(2 BHK+CCP+STORE ROOM)**

**முதல் தளம் : 1100** ச.அடி
**(3 BHK +1** பால்கனி**)**

**2-வது தளம் : 1060** ச.அடி

**(2 BHK / KITHCHEN CUM DINING + 2** பால்கனி - அளவு **(2½"x8" & 8"x3")**

- TOP FLOOR - 1 BHK – 500 **ச.அடி**
  Open Space Covered TIN Roof – 550 **ச.அடி** & 1 WBC (Servant use)
  1 HEAD ROOM - 160 **ச.அடி**
- ALL ROOMS WITH ATTACHED WBC
- G + 2 FLOORS • 3 PHASE EB CONNECTION
- ALL BED ROOMS AND KITCHEN HAVE WOOD WORK WITH LOFT AND CUPBOARD
- 2 OVER HEAD TANKS – EACH 6000 LTRS CAPACITY FOR METRO AND BOREWELL WATER
- 2 BORE WELLS AND BOTH SWEET WATER
- ALL WINDOWS WITH STAINLESS STEEL MOSQUITY NET WITH SHUTTERS

தொடர்புக்கு
**M Mohamed Gani**
அலைபேசி எண்
**98840 22155**



# நீதிபதி குலாம் முஹம்மது அவர்களின் மனைவி மரணத்தை நினைவு கூறும் நிகழ்வு

இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற முன்னாள் நீதிபதி ப.கோபாலகிருஷ்ணன் (எ) குலாம் முஹம்மது அவர்களின் துனைவியார் கடந்த 11.02.2020 அன்று வஃபாத்தானார்கள்.

நீதிபதி அவர்களின் மனைவி இறப்பதற்கு முன்பாக மகன்களை அழைத்து சொன்னார்கள்

"முஸ்லிம்கள் இறந்து விட்டால் எப்படி அடக்கம் செய்யப்படுவார்களோ அந்த முறைபடி அடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார் அவர்களின் விருப்பப்படி அடக்கம் செய்யப் பட்டது.







இதன் பிறகு கடந்த 21.03.2020 அன்று நீதிபதி குலாம் முஹம்மது அவர்களும், மகன்களும் தாயை நினைவு கூறுகிறோம் என்கிற பெயரில் நிகழ்ச்சி (தாஃவா நிகழ்ச்சி) ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சியினை சீர்காழி ஜாமிஆ மஸ்ஜித் பள்ளிவாசலின் தலைமை இமாம் அவர்கள் குர்ஆன் வசனங்களை படித்து நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியை நீதிபதி அவர்களின் துனைவியரின் தங்கை அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டில் பல ஆண்டுகாலமாக இஸ்லாமிய அழைப்பாளராக இருந்த ஜக்கரிய்யா பாய் அவர்கள் பேசியபோது,

"பெரியாரின் போராட்டங்கள், கம்யூனிசம் இன்னும் பல கொள்கைகள் பார்த்துள்ளோம் அதில் எதிலும் மனிதனுக்கான தீர்வு விடுதலை கிடைக்கவில்லை இஸ்லாத்தில் மட்டும் கிடைக்கின்றது என்பதை தெரிந்து இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்றுக் கொண்டு, என் மூலமாக பல ஆயிரக்காணக்கான மக்களுக்கு சமூக விடுதலை அல்லாஹ் என்மூலமாக அவனது பணியை நிறைவேற்ற வைத்துள்ளான் அல்ஹம்துலில்லாஹ்.

அதன்பின் ADMK கட்சியின் முன்னாள் MLA அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இறுதியாக சுதாகர் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் செயலாளர் அப்துல் ரவூப், தாஃவா குழு தாஹா, ஜமாஅத்தார்கள் மற்றும் நீதிபதி அவர்களின் உறவினர்கள் உட்பட சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் வைகறை வெளிச்சம் மாத இதழ்களை நீதிபதி குலாம் முஹம்மது அவர்கள் இலவசமாக வழங்கினார்கள்.

- தகவல்: யாசர் அரஃபாத்.S

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்

**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

*நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.*

*ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.*

*இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.*



அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங் கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து “எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது” என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி தொடர்ச்சி...

அவர்கள் இருவரும் நூருத்துன் ஸங்கி அவர்களிடம் சென்று நடந்ததை எடுத்து கூறினர். தங்களின் சிற்றப்பாவை குறித்து புகார் அளித்தனர். ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்களோ ஃபிரான்குகளுக்கு எதிரான ஜிஹாதில் மும்முரமாக இருந்தார். ஷைஸர் கோட்டையை ஃபிரான்குகள் கைப்பற்றி விடக் கூடும் என்ற எண்ணத்தில் அதை தடுக்கும் வேலைகளில் மும்முரமாக இருந்தார். எனவே, இவர்களின் சிற்றப்பாவின் செய்கைகளுக்காக பதிலடி கொடுக்கமுடியவில்லை. எனவே, அவர் களை தங்களின் வீடுகளுக்கு திரும்பி விடும்படி நூருத்தீன் ஸங்கி அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அபூ அஸாகிர் அல் சுல்தான் இறந்தவுடன் அவருடைய பிள்ளைகள் ஆட்சியாளர்களா னார்கள். அவர்கள் ஃபிரான்குகளுடன் கூட்டணி வைத்தனர். பலமுறை நூருத்தீன் ஸங்கி அவர்கள் அறிவுறுத்தியிருந்தும் அவர்கள் சிலுவைப்படை-யினருடனான தங்களின் உறவை விடவில்லை. எனவே, நூருத்தீன் ஸங்கி அவர்கள் அவர்களை தண்டிப்பதற்காக சரியான தருணத்தை எதிர் பார்த்து காத்திருந்தார்.

எதிர்பார்த்தது போலவே ஒரு நில நடுக்கத் தில் கோட்டை தகர்ந்தது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஷைஸர் கோட்டையை தாக்கி

கைப்பற்றி தன் ஆட்சியை விரிவாக்கிக் கொண்டார். அவர் அந்த கோட்டையை புணரமைத்தார். அந்த கோட்டை நிலநடுக்கத்தில் தகர்ந்த கோட்டை என்று சொல்லமுடியாத அளவிற்கு அதனை சீர் செய்தார். இதேப்போல் ஹமா கோட்டையையும் இன்னும் லெவான்தின் மற்ற பகுதிகளையும் சீர் செய்தார்.

## நூருத்தீன் ஸங்கிக்கு இறைவனின் உதவி

இதற்கிடையே நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன் படையுடன் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கி சிலுவைப்படையினரின் பெரும்படை யொன்று வந்து கொண்டிருப்பதாக செய்தி வந்தது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் உடனடியாக தன்னுடைய படையை தயார் நிலையில் இருக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் அப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் மிகச்சிறிய படையே இருந்தது. இரண்டு படைகளுக்குமிடையே போர் நடந்தது. முஸ்லிம்களின் படை தோல்விமுகமாக இருந்தது. இஸ்லாமிய படையின் தலைவர்களின் சிலர் போர்களத்தை விட்டு வெருண்டு ஓடினர்.

ஆனாலும் நூருத்தீன் ஸங்கி அவர்களும் அவர்களுடன் சில தீரமான வீரர்களும் தளபதி களும் உறுதிகுலையாமல் நின்று எதிரிகளின் படைகளை சின்னாபின்னமாக்கி விட்டனர். பெரிய எண்ணிக்கையிலான சிலுவைப்படை-யினரை நூருத்தீன் ஸங்கி அவர்களின் படை கொன்றுவிட்டது. பெரிய அளவிலான குதிரை களை கைப்பற்றியது.

ஆனால் அப்போதும் நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் இருந்தது மிகக்குறைவிலான எண்ணிக்கையிலான படையே. நிச்சயமாக நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் பெரும் படை ஒன்று தங்களை தாக்க தயாராக காத்திருக்கிறது என்ற தவறான எண்ணத்தில் சிலுவைப்படை-யினர் பின்வாங்கி சென்றுவிட்டனர். அல்லாஹ் நூருத்தீன் ஸங்கி அவர்களை பாதுகாத்தான். நூருத்தீன் ஸங்கி அவர்கள் பாதுகாப்பாக தன் முகாமிற்கு திரும்பினார். இப்போது ஃபிரான்கு களின் மன்னன் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் சமாதான ஒப்பந்தத்திற்கு கோரினான். அவர் களுக்கிடையே நிறைய செய்தி பரிமாற்றங்கள் நடந்து கொண்டே இருந்தன. இதற்கிடையே நூருத்தீன் ஸங்கி அவர்கள் பாதுகாப்பாக டமாஸ்கசுக்கு திரும்பி விட்டார்.

இந்த சம்பவத்தை இன்னும் சற்று விரிவாக பார்ப்போம்.

நூருத்தீன் ஸங்கி கி.பி. **1161**இல் தன்னுடைய படையுடன் ஜிஹாதிற்கு புறப்பட்டு சென்றார். நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஒரு மலைக்குன்றின் மீது நின்றிருந்தார். அவருடன் மிகச்சிறிய படையொன்றே இருந்தது. இறை மறுப்பாளர் களின் படை (சிலுவைப்படையினரின் படை) மிக நெருக்கமாக வந்து விட்டது. எந்த அளவிற்கு நெருக்கமாக வந்து விட்டது என்றால் அவர்கள் முஸ்லிம்களுடன் கலந்து விட்டனர். நூருத்தீன் ஸங்கி இந்த இக்கட்டில் இருந்து தப்பிக்க எந்த வழியும் இல்லை. இறைவன் நாடினால் ஒழிய. எனவே, சூழ்நிலையை உணர்ந்து கொண்ட நூருத்தீன் ஸங்கி அவர்கள் எழுந்து நின்று கிப்லாவின் பக்கம் தன் முகத்தை திருப்பி இறைவனிடம் கையேந்தி பின்வருமாறு பிரார்த்தித்தார்,

"எங்களின் இறைவா! நான் ஒரு பலஹீனமான அடிமை. நீ தான் எனக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருக்கிறாய். நான் உனக்கான நிலங்களை உருவாக்கி அதில் உன்னுடைய கட்டளைகளை நிறைவேற்றவும், நீ தடுத்திருப்பதை தடுக்கவும் என்னுடன் சேர்த்து உன்னுடைய அடிமை களுக்கு உத்தரவிட்டுள்ளேன். நான் உன் உதவி கொண்டு அவர்களிடையே இருந்த குழப்பங் களை நீக்கினேன். உன்னுடைய மார்க்க கட்ட ளைகளை அவர்களின் நிலங்களில் செயல்படுத் தினேன். ஒருவேளை இப்போது முஸ்லிம்களின் கூட்டம் தோற்கடிக்கப்பட்டால் உன்னுடைய மார்க்கத்தின் எதிரிகளை தோற்கடிக்க இயலா மல் போய்விடக்கூடும். நான் உன் மார்க்கத்தை காப்பாற்றுவதற்காக அர்ப்பணித்துக் கொண்ட என் உயிரை தவிர இந்த அடியானிடம் வேறு ஒன்றும் இல்லை. இறைவா உதவி செய்வாயாக."

அல்லாஹ் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டான். எதிரிகளின் இதயத்தில் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தினான். இதனால் அவர்கள் முன்னேறாமல் தாங்கள் இருந்த இடத்திலேயே நின்று கொண்டனர். நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஏதோ தந்திரம் செய்வதாக அவர்கள் நினைத்தனர். முஸ்லிம்களின் பெரும்படையொன்று பதுங்கி



இருக்கிறது. தாங்கள் மேலே சென்றதும் அவர்கள் நம் மீது பாய்ந்து நம் அனைவரையும் அளித்து விடுவார்கள் என்று சிலுவைப்படை-யினர் நம்பினர். இதன் காரணமாக அவர்கள் மேலே ஏறிச்சென்று நூருத்தீன் ஸங்கி அவர்களை தாக்கத் துணியாமல் அவர்கள் இருந்த இடத்திலேயே இருந்தனர்.

அவ்வாறு அவர்களின் மனதில் அந்த குழப்பம் ஏற்படாமல் அவர்கள் முன்னேறி சென்றிருந்தால் அன்றைய தினமே நூருத்தீன் ஸங்கி அவர்களின் கதை முடிந்திருக்கும். முஸ்லிம்களின் ஒட்டு மொத்த படையும் பிடிபட்டிருக்கும். அல்லாஹ் வின் மிகப்பெரிய கருணையினால் அன்றைய தினம் அவர்கள் தப்பித்தனர்.

இப்போது எதிரிகள் வேறுவிதமாக சண்டை-யிட முடிவு செய்தனர். அவர்களின் படையில் இருந்து இரண்டு பேர் வெளியில் வந்து முஸ்லிம் களுக்கும் சிலுவைப்படையினருக்கும் இடையில் நின்று கொண்டு முஸ்லிம்களில் இருந்து இரண்டு வீரர்களை தங்களுடன் சண்டையிடும் படி முழக்கமிட்டனர். நூருத்தீன் ஸங்கி அவர்கள் கட்லக் என்ற இமாதுத்தீன் ஸங்கி அவர்களின் பணியாளை அவர்களுடன் சண்டையிடும் படி கட்டளையிட்டார். அதேப்போல் கட்லக் அவர்களும் அந்த இருவருடனும் சண்டையிட்டு அவர்களை கொன்றுபோட்டார்.

ஷேக் தாவுத் அல் மக்திஸி என்பவர் ஒரு கோவேறு கழுதையை கட்டிப்போட்டு விட்டு நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் நின்று கொண்டி ருந்தார். சிலுவைப்படையினர் நூருத்தீன் ஸங்கி அவர்களை நோக்கி முன்னேறி வந்த போது அந்த கழுதை அவர்களை பார்த்து பயந்து கத்தியது. இதனை கண்ட சிலுவைப்படையினர் அதனை கெட்ட சகுனமாக எடுத்துக்கொண்டனர்.

அவர்கள் ஷேக் தாவுத் அல் மக்திஸியைப் பார்த்து "இவர் நபி தாவுத் (அலை) அவர்களை போல தெரிகிறார். இது நிச்சயமாக ஒரு தந்திரமாகத் தான் தெரிகிறது. நிச்சயமாக முஸ்லிம்கள் படையொன்று அங்கே பதுங்கி யிருக்க வேண்டும். இவ்வளவு சிறியப்படையுடன் நூருத்தீன் ஸங்கி இப்படி நிற்க சாத்தியமே இல்லை" என்று கூறிக்கொண்டு அங்கேயே நின்று பின்னர் தங்கள் பகுதிக்கு திரும்பி விட்டனர்.

இதன் பின்னர் நூருத்தீன் ஸங்கி அவர்களின் தோழர்கள் அவரை கட்டி அவரின் கரங்களில் முத்தமிட்டு "எங்களின் தலைவரே நீங்கள் இஸ்லாத்தின் கேடயம், இறைவனின் உதவியுடன் உங்களையன்றி யார் எதிரிகளிடமிருந்து எங்களை பாதுகாக்க இயலும்" என்று கூறினர்.


பின்னாட்களில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தந்திரம் ஏதும் செய்யவில்லை, அங்கே படைகள் ஏதும் பதுங்கி இல்லை, முன்னேறி சென்றிருந்தால் அவரை கொன்றிருக்க முடியும் என்று அறிந்த சிலுவைப்படையினர் தங்களின் முட்டாள்தனத்தை எண்ணி எண்ணி மனம் நொந்தனர்.

கி.பி 1163ம் ஆண்டு நூருத்தீன் ஸங்கி அவர்கள் திரிப்போலியை கைப்பற்ற சென்ற போது தான் அவருக்கு மரணஅடி காத்திருந்தது.

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

# சென்னை ஈத்கா பள்ளிவாசலில் NRC பற்றிய விழிப்புணர்வு கூட்டம்





சென்னை மந்தைவெளி ஈத்கா பள்ளிவாசலில் 22.02.2020 அன்று மாலை NRC பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மூத்த வழக்கறிஞர் ஹாபிஸ் ரஷீது அஹமது சௌத்ரி அவர்கள் கலந்துக் கொண்டார்கள். NRC நேரத்தில் அசாமில் என்ன நடந்தது? என்கிற தலைப்பில் உரையாற்றினார். நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட மக்கள் கேட்கப்பட்ட கேள்வி களுக்கு பதில் அளித்தார். இந்நிகழ்ச்சிக்கு முன்பதிவாக 150 நபர்களுக்கு மட்டுமே சொல்லியிருந்தும் இதற்கும் மேற்பட்ட ஏராளமானமக்கள் கலந்துக் கொண்டார்கள்.

- தகவல்: சென்னையிலிருந்து நமது நிருபர்





# கும்பகோணத்தில் கள்ளத் துப்பாக்கியை விற்க முயன்ற

## டாக்டர் உள்பட 3 பேர் கைது

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே சோழபுரத்தை சேர்ந்தவர் ராம்குமார். டாக்டராக உள்ளார். இவர் சோழபுரத்தில் உள்ள ஒரு கிளினிக்கில் மருத்துவம் பார்த்து வருகிறார். இவர் ரஷ்யாவில் மருத்துவ படிப்பு படித்துள்ளார்.

இவருக்கு துப்பாக்கி சுடுவதில் தனி ஆர்வம் இருந்து வருவதாக கூறப் படுகிறது. மேலும் பெரம்பலூரில் உள்ள துப்பாக்கி சுடும் கிளப்பில் உறுப்பின ராக உள்ளார். இதனால் இவரிடம் பல்வேறு ரகங்களில் துப்பாக்கிகள் உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான லைசென்ஸ் அவர் வாங்கவில்லையாம்.

இந்நிலையில் தன்னிடம் உள்ள ஒரு கள்ளத்துப்பாக்கியை சோழபுரம் அருகே உள்ள விளந்தகண்டம் பகுதியை சேர்ந்த தனது நண்பரான சக்திவேல் (வயது40) என்பவரிடம் தந்து ரூ.80 ஆயிரத்துக்கு விற்று தரும் படி கூறியுள்ளார். சக்திவேல் மீது சிலை கடத்தல் வழக்கு நிலுவையில் உள்ளது.

இதனால் போலீசார் சக்திவேலை தொடர்ந்து கண்காணித்து வந்தனர். இந்நிலையில் கள்ளத்துப்பாக்கியை சக்திவேல் விற்க முயற்சிப்பதாக போலீ சாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அவரை தீவிரமாக கண்காணிக்க தொடங்கினர்.

அப்போது சக்திவேல் தனது நண்பரான திருப்பனந்தாள் அருகே உள்ள முட்டக்குடி பகுதியை சேர்ந்த நாம் தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்ட நிர்வாகி அரவிந்தன் என்பவர் மூலமாக ராம்குமார் கொடுத்த கள்ளத் துப்பாக்கியை விற்பனைக்காக கொண்டு சென்ற போது கும்பகோணம் போலீசார் அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

விசாரணையில் சோழபுரத்தை சேர்ந்த டாக்டர் ராம்குமார் துப்பாக் கியை கொடுத்து விற்று கொடுக்கும்படி கூறியதாக அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் போலீசார் அதிரடியாக ராம்குமார் வீட்டிற்கு சென்று சோதனை நடத்தினர்.

அப்போது அவரிடம் லைசென்ஸ் பெறாத துப்பாக்கிகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் டாக்டர் ராம்குமார் மற்றும் சக்திவேல், அரவிந்தன் ஆகிய 3 பேரையும் கைது செய்து கும்பகோணத்தில் நீதிமன்ற குடியிருப்பில் உள்ள நீதிபதி இல்லத்தில் நீதிபதி மாதவராஜன் முன்பு 3 பேரையும் ஆஜர்படுத்தினர்.

3 பேரையும் 15 நாட்கள் சிறை யில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டதன் பேரில் மருத்துவ பரிசோதனைகளுக்கு பிறகு 3 பேரும் சிறையில் அடைக்கப் பட்டனர்.

மேலும் டாக்டர் ராம்குமாரிடம் எத்தனை துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன என்பதை போலீசார் தெரிவிக்க மறுத்துவிட்டது குறிப்பிடத் தக்கது. இந்த சம்பவம் கும்பகோணம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

- நன்றி மாலை மலர்



சக்திவேல்



டாக்டர் ராம்குமார்



அரவிந்தன்

# அன்பகம் மதரஸாவில் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு 15.03.2020 அன்று நடைபெற்ற திருமணம் புகைப்படங்கள்









# பரங்கிப்பேட்டையில் NRC,NPR, CAA சட்ட விளக்க கூட்டம்

கடலூர் மாவட்டம் பரங்கிப் பேட்டையில் *14.03.2020* அன்று மாலை அஸர் தொழுகைக்கு பிறகு NRC,NPR, CAA சட்ட விளக்க கூட்டம் ஆரம்பமானது.



முதலாவதாக நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் மதுரை மாவட்ட தலைவர் ஜாகீர் ஹூஸைன் அவர்கள் NRC பற்றிய தோற்றத்தையும், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட காரணத்தையும் சொல்லி விரிவான விளக்கம் கொடுத்தார்.

அடுத்ததாக பத்திரிகையாளர் அபூ சித்தீக் அவர்களும் ஜாகீர் ஹூஸைன் அவர்களும் வந்திருந்த மக்கள் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆதாரத்தோடு பதில் கொடுத்தார்கள். இதில் கலந்துக் கொண்ட மக்கள் இது பற்றிய விரிவான தகவல்கள் நாம் இதுவரை கலந்துக் கொண்ட NRC, NPR, CAA பொதுக்கூட்டங்களில் கேட்டதில்லை இதைப் பற்றிய அனைத்து விசயங்களையும் நாம் மக்கள் மன்றத்திற்கு கொண்டுச் சென்று இதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் என்று கூறி விடைபெற்றனர். இக்கூட்டம் சுமார் மாலை *5:45*க்கு தொடங்கி இரவு *9:15* மணிவரை நடைபெற்றது. **- தகவல்: யாசர் அரஃபாத். S**

# இஸ்லாத்தை ஏற்ற 35 ஆண்டுகளாக அந்தக் கேள்வி இல்லை..!

## - கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

அடிக்கடி தொலைபேசி வழியாக என்னைத் தொடர்பு கொள்வார்கள்... இப்போதெல்லாம் நாங்கள் பேசுவது பல மணித்துணிகள் தொடருகின்றன. *10-02.2020* அன்றும், அதே போல் தொடர்ந்தது. அதில், அண்ணன் கொடிக்கால் ஷேக் அவர்கள், அண்மையில் குமரி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நிகழ்வுகளைப் பற்றிய ஓர் அறிமுகத்தைத் தந்தார்கள். அதில், ஓர் நிகழ்வில் தான் ஒருமணி நேரத்திற்குமேல் ஆற்றிய உரையைக் குறிப்பிட்டார்கள்.

அந்த உரை தான் குறிப்பேதுமின்றி, சங்கிலித் தொடராய் தகவல்களைத் தொடுத்தது, அனைவரையும் கவர்ந்தது எனக் குறிப்பிட்டார்கள்.


இறுதியில், தன்னிடம் ஒரு கேள்வியை கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கேட்டார்கள் என்றார். அந்தக் கேள்வி "நீங்கள் ஏன் மதம் மாறினீர்கள்?" அதற்கு கொடிக்கால் அவர்கள் தந்த பதில்,

"நான் இந்தக் குமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளேன். பல வெற்றிகளை ஈட்டி இருக்கின்றேன். நான் பெற்ற பாராட்டுகள் ஏராளம். ஆனால் அவற்றையெல்லாம் இறுதியில் ஒரு கேள்வியைக் கேட்பார்கள். அது நீங்கள் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதே.!

இந்தக் கேள்வியை நேரடியாகக் கேட்டவர்கள் சிலர், பலர் இந்தக் கேள்வியை சுற்றி வளைத்துக் கேட்டார்கள். என்னுள் ஓர் ஆதங்கம், என்னதான் நாம் உழைத்து ஊரைக் கூட்டி வெற்றிகளை ஈட்டினாலும், இவர்கள் நம் பூர்வீகத்தைதத் தெரிந்துகொள்ளத்தானே முயற்சி செய்கின்றார்கள்.



# உலகில் ஓர் நூலுக்கு கிடைத்த மரியாதை



- ஹாஜி. பி.எம். அப்துல் கரீம்,
குளச்சல்

பஃதாதை தலை நகராக்கிக் கொண்டு அப்பாசியக் கலீபாக்கள் சீரோடும், சிறப்போடும் ஆட்சி செய்துள்ளனர். உலகினர் புகழும்படி சீரிய ஆட்சி செய்தவர் கலீபா ஹாரூன் அல்றஸீது. அவர் காலத்தில் நாடு விரிவடைந்திருந்தது. நம் நாட்டு சமஸ்கிருத பண்டிதரிலிருந்து கிரேக்க நாட்டு தத்துவ வாதிகள், உலகில் எங்கெல்லாம் அறிஞர்கள் இருந்தார்களோ அவர்களெல்லாம் கலீபா அரசவையில் அழைத்து கௌரவிக்கப்பட்டார் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

கலீபா ஹாரூன் அல்றஸீது குடிமக்கள் குறை அறிய மாறுவேடம் பூண்டு நாடு சுற்றிய நிகழ்வுகள் இன்றும் ஐரோப்பிய நாடுகளின் சரித்திரங்களில் காணலாம். உலகம் போற்றும் நல்லாட்சியை நல்கியவர் அப்பாசிய கலீபாக்கள்.

ஒருநாள் மதீனாவில் கலீபா ஹாரூன் அல்றஸீது யானை, குதிரை, ஒட்டகை போன்ற படை சூழ பல்லக்கில் பவனி வருகிறார். கலீபா தன் அதிகாரிகளை அழைத்து இங்கு ஓர் பேரறிஞர் இருக்கிறாராமே? அவர்கள் நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளை நூலாக ஆக்கி யுள்ளதாக அறிகிறேன். அவரை அந்நூலுடன் வந்து என்னை பார்க்க அழையுங்கள் என ஆணைப் பிறப்பித்தார்கள்.

இமாம் மாலிக்கை சந்தித்து அரசு அதிகாரிகள் கலீபாவின் கட்டளையைச் சொன்னார்கள். இது கேட்ட மாலிக் இமாம் பதில் ஏதும் சொல்லவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் "கல்வி நபிமார்களின் சொத்து அந்தக் கல்வியை ஒருவர் போய் தான் பார்க்க வேண்டும் அது. இருப்பிடம் தேடிவராது, நான் கல்வியை கேவலப்படுத்த விரும்பவில்லை. இதனால்தான் நான் ரொம்பவும் யோசனையில் ஆழ்ந்துள்ளேன்" என்றனர்.

இமாம் மாலிக்கிடம் அருகில் இருந்த நண்பர்கள், "நீங்கள் கலீபா அழைப்புக்கு செவி சாய்க்காவிட்டால் எதுவும் நடக்கலாம். இதுபற்றி நல்லபடி யோசித்து முடிவு செய்யுங்கள்." என்றனர். "சரி நான் கலீபாவை பார்க்க போகிறேன். ஆனால் 'முவத்தா' என்ற நூலைப் பார்க்க வேண்டுமானால் கலீபா இங்கு வந்து பார்க்கட்டும், நான் இதுபற்றி நேரில் சென்று பேசிக் கொள்கிறேன்" என மொழிந்த வாறு அரசு அதிகாரிகளுடன் கலீபாவைப் பார்க்க புறப்படலானார்கள்.

பாருலகத்தவரால் பாராட்டப்பெற்ற கலீபா ஹாரூன் அல்றஸீது இமாம் மாலிக்கை கண்டதும் முக மலர்ச்சியும், உளப்பூரிப்புடனும் வரவேற்று தன்னருகே அமர வைத்தார்கள். இருவரும் வாழ்த்தும் சுக விபரமும் விசாரித் தனர். இமாம் மாலிக், கலீபாவிடம் "கல்வி நபிமார்களுடையச் சொத்து கல்வியை நாம் தான் சென்று கற்க வேண்டுமே தவிர, கல்வி

நம்மைத் தேடி வராது. நான் உங்கள் கட்டளையை ஏற்று வந்திருக்கிறேன். நீங்கள் நான் எழுதிய பெருமானார் பொன்மொழிகள் அடங்கிய நூலாகிய 'முவத்தா' என்ற நூலைப் பார்க்க வேண்டுமானால் என் இருப்பிடம் வந்து கல்விக்கு கண்ணியம் கொடுங்கள் என்றார்கள்.

கல்வியாளர்களை பெரிதும் மதிக்கும் அப்பாசியக் கலீபா ஹாரூன் அல்றஸீது இமாம் மாலிக்கின் அறிவுரையைக் கேட்டு நான் உங்கள் இருப்பிடம் வந்து தங்களால் இயற்றப்பட்ட 'முவத்தா' என்ற நூலைப் பார்க்க விரும்புகிறேன் என கூறி புறப்பட ஆயத்தமானார்கள்.

இமாம் மாலிக், "கலீபா அவர்களே! பெருமானார் சொன்னார்கள் ஒருவன் கல்வி கற்க பணிவுடன் செல்லும் பொழுது வானவர்கள் தம் இறக்கையை நிழல் விரிக்கச் செய்கிறார்கள். கல்வி கற்க செல்லும் ஒருவன் விளம்பரமின்றி, படோடோபமின்றி செல்வது தான் மேலானது. ஆகவே நீங்கள் பணிவுடன் படாடேபமின்று நடந்து வாருங்கள்" என அறிவுரை நல்கினர்.

மாமன்னர் ஹாரூன் அல்றஸீது முதியவரே! நான் அரசு பரிவாரங்களின்றி பணிவுடன் நூலைப் பார்க்க வருகிறேன் எனச் சொல்லி கால் நடையாகவே நடந்து சென்றார்கள். இந்நிகழ்வு மாலிக் இமாம் கல்வியை மலிவுப் பொருளாக ஆக்காமையும், கலீபா ஹாரூன் அல்றஸீது கல்விக்கு மரியாதை கொடுத்து 'முவத்தா' என்ற நூலைப் பார்வையிட நடந்தே சென்ற வரலாற்று நிகழ்வும் பொன்னெழுத்துக் களால் பொறிக்கத் தகுந்தவையாகும். உலக வரலாற்றில் ஒரு நூலுக்கு மரியாதை கிடைத்த நிகழ்வு அன்றும் இன்றும் என்றும் இதுதான்.

"கல்வி கற்கபோகும் ஒருவனுக்காக வானவர், பறவைகள், மீன் இனங்கள், ஊர்வன அனைத்தும் துஆ செய்கின்றன" (நபிமொழி)

"யாதானும் நாடாமல் ஊராமல் என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு" (குறள்)

## இமாமும் இளைஞரும்

**ஹிஜ்ரி 80-வது ஆண்டில் பிறந்த சட்டமேதை இமாம் அபூ அனீபா (ரலி) ஒருநாள் தாம் வசிக்கும் பகுதியில் பாதை வழியாக நடந்து வந்து கொண்டிருந்தனர். மழைக்காலம், பாதைகள் தோறும் சேறும், சகதியுமாக தேங்கியிருந்தது.**

**இமாம் பாதையில் நடந்து வந்து கொண்டிருக்கும் பொழுது எதிரே வந்த இளைஞன் கால் சறுக்கி விழப்போய் தன்னை சுதாகரித்துக் கொண்டான். இதனைக் கண்ட இமாம் இளைஙனே! சேறும், சகதியுமான பாதையில் மிகவும் கவனத்துடன் நட. சறுக்கி விழுந்துவிடாதே எனச் சொன்னார்கள்.**




**இமாமின் வேண்டுகோளைக் கேட்ட இளைஞன் சட்டமேதையவர்களே! உங்களை இவ்வுலகம் உற்று நோக்குகிறது. நீங்கள் வாழ்க்கை சேற்றில் சறுக்கி விழாமல் மிகவும் கவனமாக நடந்து கொள்ளுங்கள் என்றான். இந்நிகழ்வு உபதேசிக்கக் கூடியவர்கட்கோர் படிப்பினை ஆகும்.**

## தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக கோரொனா 144 தடையின் காரணமாக

# வாழ்வாதாரமற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கியது

















தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம். மேட்டுப்பாளையம் சார்பாக முதல் கட்டமாக அடிப்படை வாழ்வாதரமற்ற 22 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.

21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு காரணமாக பல மக்கள் பசியால் வாடுவது தெரியவந்து. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் முடிவெடுத்து முதல் கட்டமாக 22 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் பொருள் உதவி, பொருளாதார உதவி, உடல் உழைப்பு கொடுத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மேட்டுப்பாளையம் சார்பாக நன்றிகளை தெரிவித்துகொள்கிறோம்.

**– தகவல்: உமர் ஃபாரூக்**

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மேட்டுப்பாளையம் வட்டம் சார்பாக 2வது கட்டமாக 30 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது







இரண்டாம் கட்டமாக 31-03-2020 அன்று காரமடை பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு 11 குடும்பங்களுக்கு ஓர் குடும்பம் வீதம் 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

மேலும் மேட்டுப்பாளையம் பகுதியில் 17 குடும்பங்களுக்கு ஓர் குடும்பம் வீதம் 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

3 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசியுடன் 10 நாட்களுக்கு மளிகை செலவு வழங்கப்பட்டது.

இதில் பொருள் உதவி, பொருளாதார உதவி, உடல் உழைப்பு கொடுத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மேட்டுப்பாளையம் சார்பாக நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

**- தகவல்: உமர் ஃபாரூக்**



# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக சென்னையில் அத்தியாவசியப் பொருட்கள் உதவி







சென்னையில் தாருல் இஸ்லாம் சார்பில் வாழ்வாதாரமற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களும், அதெல்லாமல் இதர வாழ்வாதாரமற்ற ரூபாய் 2000 வழங்கப்பட்டது.

# ‘என் சாவுக்கு பிரதமர் மோடியே காரணம்’

## கடிதம் எழுதி வைத்து விவசாயி தற்கொலை

மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர், கடன் தொல்லை தாங்க முடியாமல், தற்கொலை செய்து கொண்டார். தான் எழுதிவைத்த கடிதத்தில், தனது தற்கொலைக்கு பிரதமர் மோடியே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

மஹாராஷ்டிரா மாநிலம், யவத்மால் மாவட்டம், ரஜுவர்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சங்கர் பாபுராவ் சாவ்ரே (வயது55). இவருக்கு மனைவியும், திருமண வயதில் 3 மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். சங்கர் தனக்குச் சொந்தமாக 9 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வந்தார்.

இந்நிலையில், சமீபத்தில் தனது நிலத்தில் பருத்தி பயிரிடுவதற்காக தனியார் நிதி நிறுவனத் திடம் இருந்து ரூ.1.50 லட்சம் கடன் பெற்றுள் ளார். ஆனால், பருத்தியில் நோய் தாக்கல் ஏற்பட்டு, வேளாண்மையில் நஷ்டம் ஏற்பட்டது. இதனால், கடனை திருப்பிச் செலுத்த முடிய வில்லை. நிதிநிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கடனை திருப்பிச் செலுத்தக்கோரி சங்கருக்கு நெருக்கடி கொடுத்தனர்.

இதனால், கடந்த சில நாட்களாக மன வேதனையில் இருந்த சங்கர் நேற்று வீட்டில் இருந்த பூச்சிமருந்தை குடித்து தற்கொலை செய்து கொண்டார். தனது தற்கொலைக்கு முன் 6 பக்கங்களில் ஒப்புதல் கடிதம் எழுதியுள்ளார். அதில் தான் இந்த நிலைக்கு கடனாளியாக பிரதமர் மோடியே காரணம். அவரின் அரசின் செயல்பாடுதான் காரணம் என்று குறிப்பிட் டுள்ளார்.

மேலும், தனது மறைவுக்கு பின் முதல்வர் பட்நாவிஸ், மத்திய அமைச்சர் ஹன்ஸ்ராஜ் அஹிர், பாஜக எம்எல்ஏ ராஜு தோட்ஸம் ஆகியோர் தனது குடும்பத்துக்கு உதவி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

- நன்றி தி இந்து தமிழ்

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக மேட்டுப்பாளையத்தில் 3வது கட்டமாக 35 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது


































மூன்றாம் கட்டமாக 02/04/2020 அன்று மேட்டுப்பாளையம் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு 13 குடும்பங்களுக்கு ஓர் குடும்பம் வீதம் 5 கிலோ அரிசி வழங்கப் பட்டது. மேலும் 17 குடும்பங்களுக்கு ஓர் குடும்பம் வீதம் 10 நாட்களுக்கான ரூபாய் 730 மதிப்பான அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது. மற்றும் 3 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபாயும் ரொக்கமாக வழங்கப் பட்டது. இதில் பொருள் உதவி, பொருளாதார உதவி, உடல் உழைப்பு கொடுத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் தாருல்இஸ்லாம் ஃபவுண் டேஷன் டிரஸ்ட் மேட்டுப்பாளையம் சார்பாக நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

# நாகர்கோயிலில் NRC, NPR, CAA பற்றிய விழிப்புணர்வு கூட்டம்






வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக நாகர்கோயிலில் *10.03.2020* அன்று NRC, NPR, CAA விளக்க கூட்டம் நடைபெற்றது. மோடி அரசு கொண்டுவந்துள்ள NRC எப்படி அமல்படுத்தப்படும், NPR என்றால் என்ன?, NPR-ஆல் யாருக்கு பாதிப்புகள் ஏற்படும், CAA குறித்த தகவல்கள் விரிவாகவும், விளக்கமாகவும் கொடுக்கப்பட்டது. இதில் சுமார் *25*க்கும் மேற்பட்ட சகோதரர்கள் கலந்துக் கொண்டார்கள்.

**தகவல்: அப்துல் பாசித்**

# அன்றும் இன்றும் தொடரும் தீண்டாமை!

தொடர்-6



# நீதிமன்ற தீர்ப்புகளும் தீண்டாமையும்!

## 01) புல்சிங் வழக்கு

மத்தியப் பிரதேசத்தில் 'லோதி தாக்கூர்' என்னும் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த நிலப் பிரபு புல்சிங், 'சமர்' என்னும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பல்லாவின் வீட்டை இடித்ததோடு பல்லாவின் மனைவியையும் 5 நாட்கள் கடத்திச்சென்று விட்டான். மேலும் டிராக்டரை ஏற்றிக் கொன்றுவிடுவேன் எனச் சொல்லி பல்லாவை மிரட்டவும் செய்தான். இது குறித்து போலீசில் புகார் செய்ததற்காக பல்லாவை நோக்கி, "ஏய் சமரா, என்னைப்பற்றி புகாரா கொடுக்கிறாய்? என்னை அவமதித்த தற்காக உன்னிடம் 5000 ரூபாய் வாங்கியே தீருவேன்" என்றான்.

இதே புல்சிங் மீது இன்னொரு வழக்கும் உண்டு. "சமர்" சாதியைச் சேர்ந்த பர்சாதி என்பவருடன் அவருக்கு ஒரு நிலத்தகராறு இருந்தது. இது தொடர்பாக ஒரு நிகழ்வில் பர்சாதியை நோக்கி, "ஏய் சமர்! இங்கிருந்து ஓடிவிடு. இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுக் கொல்வேன்," என்றான். சாலை வழியே தன் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த பர்சாதியின் மனைவியை நிறுத்தி, "ஏய் சமரிச்சி, இதென்ன உங்கப்பன் வீட்டு ரோடா, இந்த வழியே நீ போனால் உன்னை உதைப்பேன்' என்றும் கூறினான்.

PCRA சட்டத்தின் 7(d) பிரிவின் கீழ் இவ்விரு சம்பவங்களின் அடிப்படையிலும் இரு தனித்தனி வழக்குகள் புல்சிங்கின் மீது பதிவு செய்யப்பட்டன. இப்பிரிவின் கீழ் புல்சிங்கின் குற்றங்கள் அமைகின்றனவா என்பதை அறிய மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம் இரு அளவு கோல்களை உருவாக்கியது.

*1) பாதிக்கப்பட்ட நபர் பட்டியல் சாதியைச் சார்ந்தவராக இல்லாத போதிலும் கூட இந்த அவமானம் நேர்ந்திருக்குமா?*

*2) இரண்டாவது கேள்வி: உயர்சாதிக் காரர்களுக்கும் தாழ்ந்த சாதிக்காரர்களுக்கும் இடையிலான பிரச்சினை தனிப்பட்ட காரணங் களினால் இருக்கிற தென்றால் செய்யப்பட்ட அவமானம் "தீண்டாமை" அடிப்படையிலாகாது. சண்டை, தகராறு எதுவும் இல்லாத நிலையில் செய்யப்பட்ட அவமானமே தீண்டாமைக் குற்றத்தின் கீழ் வரும்.*

மேற்கண்ட நீதிமன்றத்தின் இரண்டு அளவுகோல்களின் அடிப்படையில் புல்சிங் செய்தது சாதாரண குற்றமே தவிர. அது தீண்டாமை வன்கொடுமைக் குற்றங்கள் இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 02) துனிசிந்த் வழக்கு

துனிசந்த் என்னும் ஒரு நபர், தலித்துகள் உள்பட தனது கிராமத்திலுள்ள அனைவரையும் தன் மகளின் திருமண விருந்திற்கு அழைத் திருந்தார். அப்போது நங்கு, சனா என்கிற இரு பட்டியல் சாதியினர் திருமணத்திற்கு வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்திருந்த உயர் சாதியினர் ஏழுபேர்

“தாங்கள் அங்கே சாப்பிட மாட்டோம்” என்றனர். பின்னர் வேரு வழியில்லாமல் நங்கு, சனா எனும் அந்த இரு பட்டியல் இன சாதியினரும் அங்கிருந்து வெளியேற நேர்ந்தது. பின்னர் இது புகார் அளிக்கப்பட்டு வழக்காக மாறியது. துனிசந்தும், நேரடி சாட்சிகளும் அளித்த சாட்சியங்கள் “பொதுத் தன்மையில்” (General nature) இருந்தது எனவும், அந்த நேரத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஏழுவரும், தீண்டாமைக் குறித்த எந்தக் குறிப்பிட்ட சொற்களும் கூறப்படவில்லை எனவும் கூறிய உச்சநீதி மன்றம், இது PCRA 7ம் பிரிவின் கீழான குற்றமல்ல எனக்கூறி குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்தது.

## 03) பன்வாரி தேவி வழக்கு

ராஜஸ்தானில் பன்வாரி தேவி என்கிற கிராமப்பணியாளர் ஒருவரை 1992 செப்டம்பர் 22 அன்று ராம்கரன் குஜார் தலைமையில் வந்த ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று பாலியல் வன்முறைக்குட்படுத்தியது. 1985 முதல் அரசின் வளர்ச்சித் திட்டம் ஒன்றில் பணியாற்றி வந்த பன்வாரிதேவி குழந்தைத் திருமணத்திற்கு எதிராக வெற்றிகரமான இயக்கம் நடத்தியவர். ராம்கரன் குஜாரின் ஒரு வயது மகளின் ‘திருமணம்’ உள்பட பல குழந்தைத் திருமணங்கள் நிறுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தார். இந்த வழக்கில் 1995 நவம்பர் 15 அன்று ஜெய்ப்பூர் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி வழங்கிய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட எல்லோரும் நடுத்தர வயதினர், பொறுப்பான குடிமக்கள் எனக் கூறப்பட்டது.

பொதுவாகப் பதின் வயதிலுள்ளவர்கள் தான் பாலியல் வன்முறைக் குற்றங்களை இழைப்பர் என்று கூறியதோடு நிற்காத நீதிமன்றம், “குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எல்லோரும் உயர் சாதி ஆண்கள், பன்வாரியோ, தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவள். எனவே, பாலியல் வன்முறை சாத்தியமில்லை” எனச் சாதியை மையப்படுத்தியே தீர்ப்பளித்து குற்றவாளிகளை விடுவித்தது.

– தகவல்: பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்களின் “சாதிப்பிரச்சனைகளில் நீதிமன்றத் தீர்ப்புகள்” எனும் கட்டுரையிலிருந்து.

இந்தியாவில் உள்ள நீதிமுறைமைக்கும், இந்து மதத்தின் வருணாசிரம சாதிய கட்டமைப்பிற்கும் உள்ள தொடர்புகளை மிகத் தெளிவாக விளக்குகிறது மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்புகள். இந்தியாவின் எல்லாத் துறைகளிலும் பற்றிப் படர்ந்துள்ள சாதீய தீண்டாமைகள் நீதிமன்றங்களையும் விட்டு வைக்கவில்லை.

தமிழகத்தை பொருத்தவரை கடந்த ஆறு ஆண்டுகளில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளில் 94% வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2011 முதல் 2016 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள 1,934 வழக்குகளில் 108 வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். இந்திய அளவில் இது மேலும் குறைவாக வெறும் 1.6 சதவிதமாக இருக்கிறது. இதில் பெரும்பான்மை வழக்குகளில் அரசுத் தரப்பு வழக்கை முறையாக நடத்தாததுதான் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இந்திய நீதிமன்றங்கள் மோடியின் ஆட்சிக்குப் பின்னால் பாசிசமயமாகிவிட்டன என்று கூறுவார்கள். ஆனால் உண்மை என்னவெனில் இந்திய நீதிமன்றங்கள் பெரும்பாலும் இந்து மதத்தின் வருணாசிரமக் கொள்கைகளை தூக்கிப் பிடிப்பதாகவே அப்போதிலிருந்து செயல்பட்டு வருகின்றது எனும் கூற்று எனக்குள்ளது. என்னுடைய இந்தக் கூற்றை வலுப்படுத்தும் வகையில் முன்னாள் சட்ட அமைச்சரும் ஒரு தலித்துமாகிய பி.சிவசங்கர் அவர்களின் கருத்தை இங்கே பதிவு செய்கின்றேன். அவர் இப்படிக் கூறினார்;

“ஒரே நாளில் இரு நீதிபதிகள் பதவி ஏற்றால் அவர்களில் மேல்சாதிக்காரரை முதலில் பதவிப் பிரமாணம் எடுக்க வைப்பது என்பதை சில மாவட்டங்களில் கொள்கையாகவே வைத்துள்ளனர். அப்போதுதான் பதவி உயர்வு வரும் போது அவருடன் பதவி ஏற்ற குறைந்த சாதிக்காரரைக் காட்டிலும் அவருக்கு முன்னுரிமை கிட்டும்”.

## என்னதான் செய்வது?

அடித்தட்டு மக்களுக்கான அரசை கட்டமைப்பதில், விருப்பு வெறுப்பின்றி நீதி செலுத்துவதில், உலக வரலாற்றில் வெற்றிக் கண்ட ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டும் தான்.

தந்தை பெரியார் இப்படிச் சொல்லுவார்;

"'மதங்கள் ஒழிந்த பிறகுதான் உலக சமாதான மும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்பட முடியும், என்பது அநேக அறிஞர்களது அபிப்ராயமா னாலும் அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போதே 'உலக சமாதானம் ஏற்பட்டு விட்டது.' சாந்தி ஏற்பட்டு விட்டது என்று சொல்லப்படுமானால் அது இஸ்லாம் கொள்கை களாகத் தான் இருக்கக்கூடும் என்று கருதுகின் றேன். ஏனெனில் அத சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் மற்றெல் லோரைக் காட்டிலும் அதிகமான கவலை எடுத்து வருகின்றது" (குடிஅரசு, ஆக.23,1931)

## இதோ பல அழகிய முன்மாதிரிகள்

### சம்பவம் எண் -1

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் ஆட்சியாளராக இருந்த வேளையில், அவர் களிடம் ஒரு வழக்கு தீர்ப்புக்காக வந்தது. உயர் குலத்தைச் சார்ந்த ஒரு பெண் திருட்டுக் குற்றம் புரிந்தது உறுதியாயிற்று. பெருமானார் அந்தப் பெண்ணுக்குத் தண்டனையை முடிவு செய்தார்கள். உயர் குலத்தைச் சேர்ந்த பெண் ணுக்குத் தண்டனையா என்று அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் பதற்றமடைந்தார்கள். அப்பெண்ணை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன் எவரையாவது நபிகளாரிடம் சிபாரிசுக்கு அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தனர்.

நபிகளாரின் அன்புக்குரியவரான உசாமா இப்னு ஜைத் என்பவரை பெருமானாரிடத்தில் பரிந்துரைக்காக அனுப்பி வைத்தனர்.

உசாமாவின் பரிந்துரையைக் கேட்ட நபிகளாரின் முகம் சினத்தால் சிவந்தது. "இறைவன் விதித்த தண்டனையை மாற்றும் படியாகவா நீங்கள் பரிந்துரை செய்கிறீர்கள்" என்று கேட்டார்கள். பின்னர் நபிகளார் எழுந்து நின்று சொற்பொழிவு ஆற்றினார்கள்:

"உங்களுக்கு முன் வாழ்ந்து சென்ற மக்கள் அழிந்ததற்குக் காரணம் என்னவெனில் அவர் களில் செல்வாக்கு மிக்க ஒருவன் திருடினால் அவனைத் தண்டிக்காமல் விட்டு விடுவார்கள். ஆனால் பலவீனமான ஒருவன் திருடிவிட் டாலோ, அவன் மீது தண்டனையை நிறை வேற்றி விடுவார்கள். இறைவன் மீது ஆணை! என்னுடைய மகள் பாத்திமா திருடினாலும் நான் அவளுடைய கையைத் துண்டிப்பேன்" (நூல்: புகாரி, முஸ்லிம்)

### சம்பவம் எண்-2

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள், அப்பாஸ் (ரலி) அவர்களை சந்திக்க அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். உரையாடலின் போது உமர் (ரலி) அவர்கள், அப்பாஸ் (ரலி) அவர்களிடம் நபி{ஸல்} அவர்கள் தாங்கள் உயிரோடு இருக்கும் போதே மஸ்ஜிதுன் நபவீயை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று என்னிடம் விருப்பம் தெரிவித் தார்கள். ஆனால், அந்த விருப்பத்தை நிறைவு செய்யும் முன்னதாகவே அல்லாஹ்வின் தூதர் {ஸல்} அவர்களை மரணம் தழுவிக் கொண்டது. ஆகவே, நான் நபி{ஸல்} அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றலாம் என நினைக்கிறேன்" என்று கூறினார்கள்.

அது கேட்ட அப்பாஸ் (ரலி) அவர்கள் "ஓ தாராளமாக நிறைவேற்றுங்கள்! இதையெல் லாமா என்னிடம் நீங்கள் கேட்பீர்கள்?" என் றார்கள். அதற்கு, உமர் (ரலி) அவர்கள் விஷயம் அதுவல்ல! மஸ்ஜிதுன் நபவியை விரிவாக்கம் செய்ய வேண்டுமானால் அதற்கு சுற்றியுள்ள இடங்கள் தேவைப்படுகிறது. மஸ்ஜிதுன் நபவியை ஒட்டினாற்போல் உங்களின் வீடும் இருக்கிறது; விரிவாக்கம் செய்வதற்கு உங்களின் வீட்டை விட்டுக் கொடுத்தீர்களானால், அதற்கு சிறந்த, தகுதியான பகரத்தை உங்களுக்குத் தருவதாக நான் உறுதியளிக்கின்றேன்" என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட அப்பாஸ் (ரலி) அவர்கள் "இல்லை, என்னால் தர இயலாது" என்று கூறி விட்டார்கள்.

இதைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள் "ஒன்றும் பிரச்சனையில்லை, நீங்கள் தர மறுக்கிற போது ஆட்சியதிகாரத்தை வைத்து உமது நிலத்தை கையகப்படுத்த எமக்கு முழு சுதந்திரம் இருக்கிறது" என்று கூறினார்.

அதற்கு, அப்பாஸ் (ரலி) அவர்கள் "உம் முடைய அதிகாரத்திற்கு அதற்கான சுதந்திரம் வழங்கப்படவில்லை, உம்முடைய அதிகாரத் திற்கு அது அழகும் இல்லை" என்று கூறி விட்டு, என்னுடைய உரிமையை பறிக்கிற உம்

அதிகாரத்திற்கெதிராக நான் வழக்கு தொடுக்கப் போகின்றேன்" என்றார்கள்.

"ஆட்சியாளர் நான் இருக்க எனக்கு எதிராக யாரிடம் வழக்கு தொடுப்பீர்? யார் எம்மை அழைத்து விசாரிக்கத் தைரியம் படைத்தவர்கள்?" என்று கோப வேசத்தோடு சீறவில்லை உமர் (ரலி) அவர்கள். அமைதியான குரலில் உமர் (ரலி) அவர்கள் "சரி! இந்த விவகாரத்தில் நீர் யாரை நீதிபதியாக தேர்ந்தெடுக்கின்றீரோ அவர் வழங்கும் நீதிக்கு இந்த உமர் கட்டுப்படுவார்" என்று கூறினார்கள். அதற்கு, அப்பாஸ் (ரலி) அவர்கள் இந்த விவகாரத்தில் தீர்ப்பு வழங்க நபித்தோழர் ஹுதைஃபா இப்னு அல் யமான் (ரலி) அவர்களிடம் நாம் இருவரும் செல்வோம்" என்றார்கள்.

ஹுதைஃபா(ரலி) அவர்கள் வரவழைக்கப் பட்டார்கள். மஸ்ஜிதுன் நபவீ முழுவதிலும் நபித்தோழர்கள் நிறைந்து காணப்பட்டனர். பின்னர் அப்பாஸ் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் அழைக்கப்பட்டு அவர்களின் வாதப் பிரதிவாதங்களை கேட்டறிந்தார்கள் இடைக்கால சிறப்பு நீதிபதி ஹுதைஃபா (ரலி) அவர்கள்.

ஏனென்றால், ஃகலீஃபா அவர்கள் தான் இஸ்லாமிய தேசத்தின் பிரதான நீதிபதி, அதற்கு அடுத்து அந்தந்த மாகாண ஆளுநர்கள் நீதிபதியாக செயல்பட்டுக் கொண்டிருந்தனர். இப்போது, பிரதான நீதிபதி ஆட்சியாளர் உமர் (ரலி) அவர்களின் மீது தான் அப்பாஸ் (ரலி) அதிகார துஷ்பிரயோக வழக்கு தொடர்ந் திருந்தார்கள். முதலில் அப்பாஸ் (ரலி) அவர் களிடம் ஹுதைஃபா (ரலி) அவர்கள் வழக்கு குறித்து விசாரித்தார்கள். பின்னர், இந்தக் குற்றச் சாட்டு குறித்து உமர் அவர்களே! உங்களின் நிலைப் பாடு என்ன? என்று ஹுதைஃபா(ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு, உமர் (ரலி) அவர்கள் "நீதிபதி அவர்களே! நான் என் சொந்த காரியத்திற்காக நிலம் கையகப்படுத்த என் அதிகாரத்தைப் பயன் படுத்துவேன்! என்று கூறவில்லை. மாறாக, முஃமின்களோடு தொடர்புடைய ஒரு விவகாரத் தில், அல்லாஹ்வின் இல்லம் சம்பந்தப்பட்ட ஓர் விஷயத்தில் அதுவும் முதலில் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் அந்த இடத்திற்கு ஈடாக சிறந்த பகரம் செய்யப்படும் என்று வாக்குறுதி தந்தேன். அவர் மறுக்கவே, எனக்கு வழங்கப்பட்டிருக்கிற ஆட்சியதிகாரத்தின் துணை கொண்டு நான் உம் நிலத்தை கையகப் படுத்துவேன்" என்று கூறினேன். எனவே, நான் எப்படி குற்றமிழைத் தவனாக கருதப்படுவேன்!" என்று உமர்(ரலி) அவர்கள் ஹுதைஃபா(ரலி) அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள்.

அதற்கு, ஹுதைஃபா(ரலி) அவர்கள்:

"உமர் அவர்களே! நபி(ஸல்) அவர்கள் கூற நான் செவியேற்றிருக்கின்றேன் "அல்லாஹ்வின் தூதர் தாவூத்(அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸ் பள்ளியை நிர்மாணிக்க ஆயத்தமான போது, இட விசாலத்திற்காக அருகே இருந்த ஓர் அநாதைச் சிறுவனுக்குச் சொந்தமான இடத்தை அவனின் அனுமதி பெறாமலே பள்ளியின் ஒரு பகுதியாகச் சேர்த்த போது அல்லாஹ் தம் தூதர் தாவூத் {அலை} அவர்களை அழைத்துச் சொன்னானாம் "ஓ தாவூதே! அநியாயமாக அபகரிக்கப்பட்ட இடத்தை விட்டும் தூய்மை யானதாக என்னை வணங்கும் இடம் அமைந் திருக்க வேண்டுமென்று" அதற்குப் பின்னர் அந்த இடத்தை விட்டு விட்டு தாவூத் {அலை} அவர்கள் பைத்துல் முகத்தஸை கட்டினார்கள்."

உமரே! உம் நோக்கம் உயர்வாக இருப்பினும் அதைக் கையாண்ட விதம் தவறானது! என்று கூறினார்கள்.

அப்போது, அப்பாஸ் (ரலி) அவர்கள், உமர் (ரலி) அவர்களிடம் "இதற்கு மேலும் எம்மிடம் இருந்து நீர் வலுக்கட்டாயமாக எம் வீட்டை பறித்துக் கொள்வீரா?" என்று கேட்டார்கள். அதற்கு, உமர்(ரலி) அவர்கள் "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ஒரு போதும் நான் உம்மிடம் அப்படி நடந்து கொள்ள மாட்டேன்" என உறுதி கூறினார்கள்.

அதற்குப் பிறகு, அப்பாஸ்(ரலி) அவர்கள் "தங்களுடைய வீட்டை எந்தப் பிரதிபலனும் வேண்டாம்" என்று கூறி ஆட்சியாளர் உமர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். அதன் பின்னர் மஸ்ஜிதுன் நபவீ விரிவாக்கம் செய்யப்பட்டது. (நூல்: ஃகுலஃபாவுர் ரஸூல் (ஸல்), பக்கம்:147)

## சம்பவம் எண்-3

மொகலாய மாமன்னர் ஜஹாங்கிர் அரச அவையிலே இருந்தார்.அவையில் முக்கியமான

பிரச்சினை மீது விவாதம் நடைபெற்று கொண்டு இருந்தது. அப்பொழுது கதறி அழுதவளாக தன் கணவனின் பிணத்தை சுமந்து வந்து நீதி கேட்டு நின்றாள் சலவை தொழிலாளியின் மனைவி ஒருவள்!

யாரம்மா நீ, என்ன நேர்ந்தது உனக்கு? என்று கேட்டார் மன்னர் ஜஹாங்கீர்!

அரசே, நானும் என் கணவரும் சலவை தொழில் புரியும் கூலிகள். சற்று நேரத்திற்கு முன்பு நாங்கள் இருவரும் ஆற்றங்கரையில் வேலையில் இருந்தபோது, திடீரென வந்த அம்பொன்று என் கணவனின் கழுத்தில் பாய்ந்து அவர் உயிரை குடித்து விட்டது. இது விஷயத்தில் தாங்கள்தான் எனக்கு நீதி வழங்கிட வேண்டும்.

உன் சோகம் புரிகிறதம்மா. அதற்கு நீ இங்கே வரவேண்டாமே. தாரோகா (காவல்துறை ஆணையர்)விடம் சென்று முறையிடு. அவர் தீர விசாரித்து உனக்கு நீதி வழங்குவார். என்றார் மன்னர்.

மன்னிக்க வேண்டும் அரசே. அந்த நடை முறை எனக்கு தெரியும். ஆனால் என் கணவரின் உயிரை பறித்த அம்பு உங்கள் அரண்மனையில் இருந்து தான் பாய்ந்து வந்துள்ளது.

இதைக் கேட்ட மன்னர் ஜஹாங்கிர் (கடும் கோபத்துடன்) அரண்மனையில் இருந்து அம்பெய்த அந்த நபரை அழைத்து வாருங்கள். என்று உத்தரவு பிறப்பிக்கிறார்.

அப்போது அங்கு மயான அமைதி நிலவ மேலரங்கிலிருந்து,ஒரு குரல் "அது நான் செலுத்திய அம்புதான்" என்று. யாரது? என்று சினத்துடன் கேட்கிறார் அரசர் ஜஹாங்கீர்.

அதற்கு அந்த குரல், நான் தான் நூர்ஜஹான்.

ஓஹோ! நீங்கள்தான் இதற்கு காரணமோ? அப்படியானால் நீங்கள் குற்றவாளிகள் பகுதிக்கு வந்து கூண்டிலல்லவா நிற்கவேண்டும்? வாருங்கள் கீழே.

அப்போது அவை முழுவதும் சலசலப்பும் பரபரப்பும் நிலவ பேரரசி குற்றவாளி கூண்டில் வந்து நிற்க வைக்கப்படுகிறார்.

சற்றும் தாமதிக்காத்த மன்னர் ஜஹாங்கிர், "ஒ ஏழை குடிமகளே, உனக்கு நேர்ந்தது ஈடு செய்ய முடியாத ஒன்று. இருந்தும் இவ்வழக்கின் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை உன்னிடமே வழங்குகிறேன். இதோ இந்த வில் அம்பை எடுத்துக்கொள். எப்படி இவள் உன்னை விதவையாக்கினாளோ, அதேபோன்று நீயும் இவளை விதவையாக்கிடுவாயாக." இதுவே எனது தீர்ப்பாகும்.

ஹிந்துஸ்தானை ஆண்ட ஒரு முஸ்லிம் மன்னன் தன் குடும்பத்திற்காக, நீதியை புதைத்தான் என்கிற வரலாறு வேண்டாம்.

பாதிக்கப்பட்ட அந்தப் பெண் அம்பெடுத்து குறி பார்க்கிறாள். அவையே பதறுகிறது. திடீரென மனம் மாறி அழுதவளாக அரசி நூர்ஜஹானை மன்னித்து தனது கணவனின் இழப்பிற்கு ஈடான ஈட்டுத்தொகையை பெற்றுக் கொண்டாள். - உமாபாரதி அவர்களின் கட்டுரையிலிருந்து.

இதுதான் இஸ்லாம் வழங்கும் நீதி. ஆட்சி யதிகாரம் கையில் இருக்கின்றது என்பதற்காக அடித்தட்டு மக்களுக்கு ஒரு நீதி, உயர்நிலை மக்களுக்கு ஒரு நீதி, ஏழைக்கு ஒரு நீதி, பணக் காரனுக்கு ஒரு நீதி என்ற பாகுபாடுகளெல்லாம் இங்கில்லை. நீதி செலுத்துவது என்று வந்து விட்டால், ஆட்சியாளனோ, ஆண்டியோ பார பட்சம் இல்லாமல் நீதி வழங்கும் ஓர் அரசாட் சியை, அடித்தட்டு மக்களுக்கான ஓர் அரசாங் கத்தை கட்டமைப்பதில் வரலாற்றில் இஸ்லாம் மட்டுமே வெற்றிகரமாக செய்து காட்டியது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

எனவே அனைவரும் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்வோம். உலகம் முழுவதும் சகோதரத்துவமான, சமத்துவமான மனித சமூகத்தை கட்டமைப்பதில் நம்மிலிருந்து தொடங்குவோம்.

இறைமறையாம் அருள்மறைக் குர்ஆன் கூறுகின்றது;

முஃமின்களே! நியாயத்தை நிலைநாட்டு வதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செலுத் தாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்.**



# நடிகர் பாண்டேவும் அப்பாவி சமூகமும்

**மௌலானா - இல்யாஸ் காஷிஃபி**
**மேட்டுப்பாளையம்.**

ரங்கராஜ் பாண்டே அவர்கள் பயோ ஜிஹாத் பரப்புரை பற்றி நடுநிலையோடு பதிவு செய்துள்ளார் என்று ஒரு நண்பர் கூறிய போது

நான் சொன்ன பதில் " புலி பசித்தாலும் புல்லைத் திண்ணாது. அது ரத்த வாடையில் இன்பம் காணக்கூடியது. வேட்டையாடுவதை வெறியோடு வேட்கையோடு செய்யக் கூடியது. அதற்கென இலக்கு இருக்கிறது.அந்த இலக்கை அடைய சில நேரம் பாயும்.சில நேரம் பதுங்கும். ஆனால் தன் இலக்கை விட்டு இம்மியளவும் தடம் புரளாது. உலகமே கொரோனாவை ஒன்று சேர்ந்து எதிர் கொள்ளும்போது வக்கிரபுத்தி கொண்ட இந்திய மீடியாக்கள் மட்டும் அதை அருவருப்பான அசிங்கமான மனநிலையோடு எதிர்கொண்டது.

காந்தியின் தேசம் கோட்சேயின் தேசமாக மாற்றப்பட்டு பல தசாப்தங்களாகி விட்டதை இது உணர்த்தியது.

இந்திய மீடியாக்களின் கழிவுகளை கேட்டு கேட்டு விரக்தியின் விளிம்பில் நிற்கும் ஒரு பாமர முஸ்லிம் குறைந்தபட்ச ஆதரவான வார்த்தையாவது யாராவது சொல்லமாட்டார்களா? என்று கழிவிரக்கத்தோடு காத்திருந்த போது நடிகர் பாண்டேயின் வீடியோ சமூக வலைதளங்களில் குறிப்பாக முஸ்லிம்களுக்கு மத்தியில் வைரலானது. பாண்டேயின் வாதங்களை மிதவாத வலதுசாரியின் கருத்தாக பார்க்காமல் நடுநிலையான நிலைப்பாடாக சிலர் எண்ணுவது அபத்தமானது.

மரத்தின் பலன் அதன் பழங்களை பொறுத்தே முடிவாகும் என்பார் அறிஞர் அண்ணா.

சாணக்யா யூட்யூப் சேனலின் பலன்கள் அதன் வீடியோக்களின் கீழ் வரும் கமெண்ட்களின் மூலம் தெரிந்துகொள்ளலாம். அந்த வெறுப்பான கமெண்ட்களுக்கு பின்னால் நடிகர் பாண்டேயின் பல்லிளிக்கும் விகார முகம் வெளிப்படும். இந்த யுக்தியை உணர்ந்ததால்தான் மரியாதைக்குரிய ஐயா நல்லகண்ணு அவர்கள் சாணக்யாவின் விருதை நிராகரித்து நடிகர் பாண்டேயின் முகத்தில் கரியை பூசினார்.

நடுநிலை என்றால் என்ன? என்பதற்கு பாண்டே அவர்களே ஒரு பேட்டியில் அழகாக விளக்கம் கொடுப்பார்.

"யாரையும் சாராமல் இருப்பதற்கு பெயர் நடுநிலை அல்ல, பாதிக்கப்பட்டவரின் பக்கம்

நிற்பதுதான் நடுநிலை." உண்மையில் நடிகர் பாண்டே நடுநிலையாளராக இருந்தால் இப்பிரச் சனையில் பலிகடாவாக்கப்பட்ட நிஜாமுத்தீன் மர்கஸின் பக்கம் நின்றிருக்க வேண்டும். ஊரடங்கு உத்தரவுக்கு முன் கூடிய கூட்டத்தை எப்படி குற்றம் சாட்ட முடியும் என்ற அடிப்படை கேள்வியை கேட்டிருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையாக நிஜாமுத்தீன் மர்கஸ் நிர்வாகிகள் கூட்டத்தை தவிர்த்திருக்கலாம் என்ற விமர்சனத்தை மட்டுமே வைக்க முடியும்.

சட்ட அடிப்படையில் எந்த தவறும் அவர்க செய்யவில்லை என்பதை உரக்க சொல்லியிருக்க வேண்டும். இத்தாலியில் கொரோனா பரவ காரணமாக இருந்த கால்பந்து போட்டியின் மீது யாரும் வெறுப்பை பரப்பவில்லை. எதேச்சையாக நடந்தது என்பதை இத்தாலி மக்கள் எளிதாக விளங்கினார்கள்.அந்த அறிவு கோட்சே தேசத்துக்கு ஏன் இல்லை என்று பாண்டே கேட்டிருக்க வேண்டும்.

இங்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படுபவர்கள் முஸ்லிம்கள், தனிமைப் படுத்தப்பட்டவர்கள் முஸ்லிம்கள், மன அழுத் தத்துக்கு உள்ளாக்கப்படுபவர்கள் முஸ்லிம் குடும்பங்கள்.

ஆனால் குற்றவாளிகளாக சித்தரிக்கப்படு பவர்களும் இவர்கள்தான். இந்த இரக்கமற்ற சமூக புரிதலுக்கு காரணமானவர்கள் மீது நடிகர் பாண்டே சாட்டையை சுழற்றியிருக்க வேண்டும். உண்மையில் தான் சார்ந்திருக்கும் சித்தாந்தத்தின் வெறியர்கள் மீது பாண்டே சுழற்ற வேண்டும். பாவம் அவர் எப்படி அதை செய்வார்?. அர்ஜூன் சம்பத், ராஜா போன்ற அருவருப்புகளின் கழிவுகள் தன் மீது படாமல் தமிழ் சமூகம் எளிதாக ஒதுங்கி சென்றுவிடும்.

ஆனால் நடிகர் பாண்டே ஆழமான தேடல் உள்ளவர். தனக்கு இருக்கும் டீடெயிலிங் திறனை வைத்தே நடுநிலை முகமூடி அணிந்திருப்பவர். அதை நம்பும் ஒரு சிறு கூட்டம் தமிழ் சமூகத்தில் இருக்கிறது/. "பயோ ஜிஹாத்" என்ற பதம் தன் அரிப்பை கோபத்தை தீர்க்க சில பிணந்தின்னிகள் ட்ரண்டாக்கியது என்பது பாமர தமிழனுக்கும் தெரியும்.

நடிகர் பாண்டே சொல்லித்தான் தெரிய வேண்டும் என்ற நிலையில் தமிழகம் இல்லை இங்கு முஸ்லிம்கள் மீது உண்டான அடிப்படை தவறான புரிதல் சட்டத்தை மீறி சட்டத்தை மதிக்காமல் நிஜாமுத்தீன் மர்கஸில் கலந்து கொண்டார்கள் என்பதுதான் பாதிக்கப்பட்ட வரின் பக்கம் நிற்பேன் என்பதில் உண்மை யாளராக திரு பாண்டே இருந்திருந்தால் இதைப்பற்றி விரிவாக பேசியிருக்கவேண்டும்

அந்த நேரத்தில் டெல்லியில் எந்த நெருக் கடியும் இல்லாமல் பொதுவான மக்கள் கலப்பு இருந்ததை பேசியிருக்க வேண்டும். நிஜாமுத்தீன் நிர்வாகிகளின் விளக்கத்தையாவது அலசியிருக்க வேண்டும். தமிழக மக்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் நடிகர் பாண்டே போன்ற தேடல் உள்ளவருக்கு நிச்சயம் இந்த உண்மை தெரியும். ஆனால் நடிகர் பாண்டே அதை எளிதாக கடந்து செல்கிறார்

அடுத்து தவறான புரிதல் திட்டமிட்டு தப்லீக் ஜமாத்தின் மீது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது மீடியாக்களின் வெளிச்சம் இல்லாமல் எளிமை யான முறையில் தனது ஆன்மீக பணியை செய்து வரும் இந்த அமைப்பை பற்றி முஸ்லிம்களோடு தொடர்புள்ள அனைவருக்கும் தெரியும்.

சமீபத்தில் அதிகமான மாநிலங்களில் நடந்த தப்லீக் இஜ்திமாக்களை முழு நாடும் அதிசயத்தோடு பார்த்தது பாஜக கூட இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களை வரவேற்று பேனர் வைத்திருந்ததை நானே போபாலில் பார்த்திருக்கிறேன் வடமாநிலங் களில் தப்லீக் ஜமாத்தில் சென்றபோது பல டாக்ஸி டிரைவர்கள் (இந்து சகோதரர்கள்) வாடகை வாங்காமல் விட்டுச்சென்றது இன்றும் கண்முன்னால் நிற்கிறது

தப்லீக் ஒரு சாத்வீகமான அமைப்பு. ஆன்மீக அமைப்பு. முஸ்லிம்களை நல்வழிப் படுத்தும் அமைப்பு. முஸ்லிம்களின் அரசியல் நெருக்கடிகளில் தலையிடாத அமைப்பு தனது கூட்டங்களில் அரசியல் பேசவே கூடாது என்பதை அடிப்படை சட்டமாக வைத்திருக்கும் அமைப்பு இதன் காரணமாக முஸ்லிம்களுக்கு மத்தியிலிருந்து வரும் விமர்சனங்களை

பொறுத்துக்கொண்டு முஸ்லிம்களுக்கு மத்தியில் உலகப்பற்றை குறைத்து இறை அச்சத்தை உண்டாக்கும் தனது இலக்கில் பயணித்துக் கொண்டிருக்கும் அமைப்பு

நெருக்கடியான காலகட்டத்திலும் நடந்த ஒரே அமைப்பு இதுதான். இந்த உண்மைகள் நடிகர் பாண்டே போன்ற ஆழமான தேடல் கொண்டவருக்கு தெரியவில்லை என்பதை நம்பும் அளவுக்கு நாங்கள் முட்டாள்கள் இல்லை நடிகர் பாண்டே நடுநிலையாளர் என்பதில் உண்மையாளராக இருந்தால் இந்த உண்மைகளை ஆண்மையோடு பதிவு செய்திருக்க வேண்டும். இதை எல்லாம் விட்டுவிட்டு ஏதோ ஒரு ஆங்கில கட்டுரையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் தீவிரவாத குற்றச்சாட்டுகள் இருக்கிறது இந்தியாவில் இந்த அமைப்பில் உள்ளவர்கள் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லையே என்ற கவலையோடு சொல்வதில்தான் நடிகர் பாண்டேயின் நரித்தனம் வெளிப்படுகிறது.

வெளிநாடுகளில் தப்லீக் ஜமாத்தில் தொடர்புள்ளவர் தீவிரவாத செயலுக்கு சென்றிருந்தால் தப்லீக் ஜமாத்தின் சாத்வீக முறை பிடிக்காமல் வெளியே சென்ற பிறகுதான் செய்திருப்பார் என்பது உலகம் அறிந்த உண்மை.

நிஜாமுத்தீனுக்கு வந்து செல்லும் உளவுத் துறையிடம் கேட்டு தமிழ் சமூகத்துக்கு உண்மையை சொன்னால் நடிகர் பாண்டேயின் நடுநிலை ஆண்மையுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்வோம்

தப்லீக் ஜமாத்தை "ஆர்.எஸ்.எஸ்ஸோடு" ஒப்பிட்டதில்தான் நடிகர் பாண்டேயின் யுக்தி முழுமையாக வெளிப்பட்டது. ஒரிசாவில் பாதிரியார் குடும்பத்தை கொலை செய்தவர்களை அதை ஊக்குவித்தவர்களை எவ்வளவு கண்ணியப்படுத்தியுள்ளார்கள் என்பது நாட்டுக்கே தெரியும். இதற்கும் ஆர்.எஸ்.எஸ்க்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொல்வது நடுநிலை என்று மனசாட்சியே இல்லாமல் சொல்கிறார்

தப்லீக் ஜமாத்திலும் இது போன்ற நபர்கள் இருக்கிறார்கள் என்று ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை சொல்வது நடுநிலை என்கிறார் சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக பணியோடு குறைந்த பட்சம் ரவிசங்கர், ஜக்கி வாசுதேவ், போன்றோரின் ஆன்மீக பணிகளோடு தப்லீக் ஜமாத்தை ஒப்பிட்டிருந்தால் கூட நடிகர் பாண்டேயின் குயுக்தி வெளிப்படாமல் இருந்திருக்கும்

நடிகர் பாண்டேயிடம் நாம் கேட்டுக் கொள்வது நடுநிலையாளர் முகமூடியை நீங்கள் அணிவதால் எந்த பலனுமில்லை அதற்கான தேவையுமில்லை உங்கள் முகமூடிகள் ஒவ்வொரு வீடியோவிலும் கிழிந்து கொண்டுதான் இருக்கிறது.

ஏனெனில் தமிழர்கள் புத்திசாலிகள் தயக்கமில்லாமல் நான் வலதுசாரி என்பதை ஒப்புக் கொள்ளுங்கள் "இந்துத்துவ சிந்தனையாளர்" என்பதை ஏற்று உங்கள் பயணத்தை தொடருங்கள் அதுதான் ஆண்மையுள்ள நிலைப்பாடு நீங்கள் யாருக்காகவும் நடிக்க வேண்டியதில்லை. முன்பே மாரிதாஸ் போன்ற எச்சங்கள் கூவுவதை இங்கு யாரும் கண்டு கொள்வதில்லை ஆனால் நீங்கள் அறிவுஜீவி வார்த்தை வித்தகர் ஆழமான தேடல் உள்ளவர் மிதவாத வலதுசாரி.

**உங்கள் பயணம் சிறக்க முஸ்லிம்கள்**
**சார்பில் வாழ்த்துகிறேன் தற்போது**
**விதைக்கப்பட்ட முஸ்லிம் வெறுப்பு**
**சீக்கிரம் மறைந்துவிடும் தமிழ்மண்**
**தன் ராஜபாட்டையில் பயணிக்கும் மதத்தில்**
**பகை வைத்து அரசியல் செய்பவர்கள்**
**பேரழிவை சந்திப்பார்கள் என்பதே**
**இந்தியாவின் வரலாறு இந்த உண்மையை**
**உங்களை ஆட்டுவிப்போருக்கு**
**புரிய வையுங்கள் தமிழ்மண் இந்த**
**உண்மையை உங்களுக்கு**
**கற்றுக்கொடுக்கும்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.